
Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 | வெள்ளி - 39 | 18 - 24 - நவம்பர் - 2005



## தேசிய அடையாளங்கள்



## 15 ஆவது ஆண்டில் தமிழீழ காவல்துறை

# இயற்கையிடம் கற்கவேண்டிய பாடம்



அமெரிக்க கொலரடோ பல்கலைக்கழக பூகம்பவியல் நிபுணர்களின் கூற்றுப்படி பூமியின் நிலப்பகுதி 13 பெரும் பாறை படிவங்கள் மீதே அமைந்துள்ளன. இதில் ஒன்று இந்திய இலங்கை பூமித்தகடாகும்.

நான்கு கோடி ஆண்டுகளுக்கு முன் ஆசியாவை தாங்கும் பூமித்தகடு, இந்தியாவை, இலங்கையை தாங்கும் பூமித்தகடுடன் நகரும் போது பலமாக மோதியதாலே இமயமலை, காரகோரம், மலைத்தொடர், பமீர் முடிச்சுப் பகுதி, தந்துகுஸ் மலைத் தொடர்போன்றன இந்தியக் கண்டத்தின் வடபகுதியில் உருவாகியிருப்பது தெரியவருகின்றது.

நாம் சற்று எமது கண்ணோட்டத்தில் கற்பனைசெய்தால் இருவேக ரயில்கள் மோதிக்கொள்ளும் போது ரயில் பெட்டிகள் ஒன்றுக்கு மேல் ஒன்று ஏறி பெரும் மலை போல் குவிந்து காணப்படுவதை உணர்கின்றோம்.

ஆகவே பாரிய மலைகளில் கீழ் உள்ள குக்கிராமங்களில் உள்ளோர் மலைகளின் அசைவுகள், பாறைகளின் பிளவுகள், மண்ணின்தன்மை, பாறை வெடிப்புக்கள் போன்றவற்றை அனுபவவாயிலாக அறிதல் நலம்.

இவ்வேளையில் பூமித்தகடுகள் மோதும்போது, பூமியில் உள்ள சிறு நாடுகள், கிராமங்கள், கட்டடங்கள், மிருகங்கள், மனிதர்கள் எவ்வாறு மண்ணுக்குள் அடியில் உயிருடன் புதைவதை ஊகித்துப் பார்ப்போம்.

இதனால்தான் பலகோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பாரம்பரிய மிருகங்கள், மனிதர்கள் வேடுவகுலம், ஆதிவாசிகள், குள்ளமனிதர்கள் போன்றோர் பூண்டோடு அழிந்து போயினர் எனக கூறப்படுகிறது.

பின் நிலத்தில், எண்ணைக் கிணறு, சுரங்கம், குழாய்க்கிணறு என அகழ்வு ஏற்படும்போது கலன்களில் எஞ்சிய கழிவுப்பாறை எச்சங்கள் பெறப்பட்டு, தற்கால நூதனசாலைகளை அலங்கரித்தவண்ணம் உள்ளன கண்கூடு.

மேலும் பூமியின் வயதையும் அதன் காந்த சக்தி அசைவுகளையும், கணித்த விஞ்ஞானிகள் எமது இந்திய இலங்கைத் தகடு ஆசிய பூமித்தட்டை நோக்கி ஆண்டு ஒன்றுக்கு 3-3.5 செ.மீற்றர் அளவு வடக்கு நோக்கி நகர்வதாகக் கணித்துள்ளனர்.

இக்கணிப்பின்படி இன்னும் சில ஆண்டுகளில் இந்திய நாட்டில் பல வெடிப்புக்கள் நேராகவும், குறுக்காகவும், பூமியின் அழுத்தத்தில் ஏற்பட்டு, சிறிய,பெரிய பூகம்பங்கள் 4.8-8.5ரிச்டர் அளவு ஏற்பட வாய்ப்புண்டு என கணிக்கப்படுகிறது.

அண்மையில் பாகிஸ்தானை மையமாகக் கொண்டு இம்மாதம் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி இதன் காரணமாகவே ஏற்பட்டது. இதனால் பல பழம்பெரும் எல்லைக்கிராமங்கள் இருந்த இடம் தெரியாமல் மண்ணுக்குள் புதையுண்டன. 40,000-50,000 மக்கள் உயிருடன் மாண்டனர். மீட்புப் பணியாளர்கள் மீட்புப் பணி செய்யும் போது மீண்டும் ஏற்பட்ட அதிர்வுகளினால் கட்டட இடிபாடுகளுக்குள் இறந்தார்கள்.

இந்திய விஞ்ஞானிகளின் கணிப்பின்படி முன்பு பலகோடி ஆண்டுகளுக்கு முன் இந்தியத் தகடும், ஆசியத் தகடும் மோதியதால் ஏற்பட்ட அழுத்தம் மேலும் பல்லாண்டுகளாக இடையிடையே அதிர்வுகளை சிறிதும், பெரிதுமாக ஏற்படுத்தலாம். சில அதிர்வுகள் பூமியின் 50 கி.மீ ஆழத்திலும், சில 10கி.மீ ஆழத்திலும் ஏற்படுகின்றன. இவற்றின் அதிர்வுகள் வெவ்வேறு வித சேதத்தை ஏற்படுத்தும். இவ்வழுத்தம் காரணமாகவே கடந்த முறை இந்தியக் கண்ட தகட்டில் திடீர் அழுத்தம் ஏற்பட்டதன் காரணமாக அந்தமான் தீவு அருகே ஓர் சிறு பூகம்பம் கடலுக்கு அடியில் ஏற்பட்டு, கடந்த மார்கழி 26ஆம் திகதி "சுனாமி" உருவாகி இந்தியா, இந்தோனேசியா, எமது இலங்கையின் வட-கிழக்கு, தெற்குப் பகுதியை உலுப்பி எடுத்தது.

இந்தியத் தகட்டில் மேலும் அழுத்தம் அதிகமாகும்போது வட காஷ்மீரிலிருந்து வடகிழக்குப் பகுதி வரை இவ்வழுத்தம் நேர்கோட்டில் சென்று பெரும் பூகம்பத்தை எதிர்நோக்கும் என எச்சரிக்கை செய்கின்றனர்.

இலங்கையில் பெரிய பூகம்பம் ஏற்பட வாய்ப்பில்லா விட்டாலும், இந்திய வடகிழக்கு அதிர்வுகள் இலங்கையில் பிரதிபலிப்பைக் காட்டும். இவை மண்சரிவு, மலைமேல் உள்ள கற்பாறைகள் உருண்டு கீழ்ப்பகுதிகளில் உள்ள கிராமங்களை அழித்தல் போன்றன ஏற்பட வாய்ப்புண்டு எனவும் அனுமானிக்கின்றனர்.

நம் மூதாதையர் இவற்றை அனுபவ வாயிலாக அறிந்து எதிர்வு கூறியதால் பல இடர்களை தவிர்த்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

இந்தியக் கடலில் பேரலைகள் எழும்பி நாட்டில் பரவும் இந்திய வடதுருவ பனிப்பாறைகள் உருகி கடலில் வீழ்வதால், கடல்மட்டம் உயர்ந்து சிறு தீவுகளை அழிக்க வாய்ப்புண்டு.

மேலும் கிழக்கு பூமித்தட்டு பர்மா நாட்டு (மியான்மார்) பகுதிகளிலும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பலுக்கிஸ்தான் பகுதிகளை நோக்கி சிறுகச் சிறுக நகர்வதை விஞ்ஞானிகள் துல்லியமாக அறிந்துள்ளனர்.

இவ்வேளையில் பலகோடி ஆண்டுகளுக்கு முன் பூமி ஆரம்ப காலத்தில் சகல தட்டுக்களும் ஒன்றின்மேல் ஒன்றாகப் பரந் திருந்த போது, கண்டங்கள்,நாடுகள் எல்லாம் ஓர் பந்துபோல தொடரான வடிவில் இருந்தன.

பின் பூமித்தகட்டில் ஏற்பட்ட அசைவின் காரணமாக இவை வெவ்வேறு கண்டங்களாக பிரிந்துசென்றன. உதாரணத்திற்கு பூகோள வரைபடத்தை உங்கள் முன்வைத்து ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியக் கண்டங்களை மேலும், கீழும் அசைப்போமென்றால், அவை ஒரு இடைவெளியின் கீழ உள்ளன. பந்துபோல் பொருந்துவதைக் காணலாம். பின்பு இவை ஓர் தரைக்கண்டமாக இருப்பதை அவதானிக்கலாம்.

ஆகவே இலங்கையின் தலையான யாழ்.குடாவை வடமேல் பக்கமாக அசைத்தால் மேல்நோக்கிச் சென்று அவை இந்தியாவின் தென்கிழக்குப் பகுதியில் சேர்வதை காணலாம். இதனால்தான் கண்டங்கள் பிரிக்கப்பட்டாலும் சுவாத்தியம், மண்வகை, பயிர், சுற்றாடல்கள் போன்றன இரு நாடுகளுக்கும் சற்று ஒத்திருப்பது புலனாகின்றது.

காஷ்மீர் தலைநகரான முஸாராபாத்தை மையமாகக்கொண்டு கடந்த 08.10.2005 ஏற்பட்ட பூகம்பம் இந்திய தகட்டில் வெவ்வேறு இடங்களில் ஏற்பட்ட நான்கு விரிசல்களினால் உருவானதாகும். இவை பூமிக்கு அடியில் 30-45 கி.மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டமையினால் அதன் தாக்கம் குறைவாகக் காணப்பட்டதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

முஸாராபாத்திலிருந்து தென்மேற்கே 10.5 கி.மீற்றர் தூரத்தில் அமைந்த கிராமத்தில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டதால்தான், மக்கள் அங்கு தங்கியிருக்க வாய்ப்பில்லை. இங்கு பல வளைவு பாறைகள் தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஜப்பானிய பூகம்பவியல் நிபுணர்களின் அறிக்கையின் படி, பூமிக்குள் மிக ஆழத்தில் ஏற்படும் பூகம்பங்களை வடபூமிக்கு அருகில் மேற்பரப்பில் 5-10 கி.மீற்றர் ஆழத்தில் ஏற்படும் பூகம்பம் பூமிக்குள் பெரும் சேதங்களை உண்டாக்குவதாகவும், இவை திடீரென ஏற்படுவதாகவும், ஓர் சில நிமிடங்களில் பெரும் அழிவை ஏற்படுத்துமெனக் கணித்துள்ளனர்.

இதில் இருந்து நாம் அறிவது யாதெனில் பூமிக்குள் எவ்வளவு ஆழத்தில் அதிர்வு ஏற்படுவதோ, 'ரிச்டர்' அளவில் குறைவாகவும், மேல்பரப்பில் 10-15 கி.மீற்றர் ஆழத்தில் ஏற்படும் தாக்கம் 'ரிச்டர்' அளவில் அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளது.

ஜப்பான், பாகிஸ்தான், இந்தோனேசியா, பலுகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பூமி அதிர்ச்சி ஏற்படும்போது தாக்கங்களை நவீன விஞ்ஞான கோள்களின் கருவிகளின் துணைகொண்டு பூமியின் வெப்பதட்ப மாற்றங்களை துல்லியமாகக் கணித்து, 24-72 மணித்தியாலத்திற்கு முன் மக்களுக்கு எச்சரிக்கை கொடுக்கக் கூடியதாக இருப்பதால் மனித அழிவுகளை இலட்சத்திலிருந்து ஆயிரமாகக் குறைக்கலாம். குறைத்தும் உள்ளனர்.



உதாரணமாக கடந்தவாரங்களில் ஏற்பட்ட கடற் சூறாவளிகளை அமெரிக்கர் துல்லியமாகக் கணித்து 74மணித்திலாலத்துக்கு முன் எதிர்வு கூறி எச்சரிக்கை செய்ததால் கத்தறின், ரீற்றா, வில்மா, அல்பா போன்ற கடல் சூறாவளிகள் குறைந்த எண்ணிக்கையான மக்களைக் காவுகொண்டன.

இதற்கு மக்களுக்கு போதிய பூகம்ப பூமிநிலை கல்வியை பாடசாலைகளில் போதிப்பது அவசியம். மேலும் இயற்கை எமக்கு முன் கூட்டி எச்சரிக்கைகளை மிருகங்கள், பறவைகள், ஊர்வன போன்றவை மூலம் மனிதருக்குக் காட்டிக்கொடுக்கின்றன. (ZOOLOGY) எனவே மிருகங்களின் கல்வியை அறிந்திருத்தல் நலம். தரையில் வாழும் மிருகங்கள், கடலில் வாழும் மிருகங்கள், பறவைகள் பூமியில் ஊர்வன போன்றவற்றின் தோல்களில் உள்ள காந்த ஈர்ப்பு சக்தி பூமியின் அதிர்வுகள் வெப்பதட்ப நிலை மாற்றங்களை பூமித்தட்டின் அசைவுகள், கடல் கொந்தளிப்புக்கள், காற்றின வேகம்,மணங்கள், மண்வாசனை போன்றவற்றை துல்லியமாக அறியக் கூடியதாக இயற்கையின் படைப்பு அமைந்துள்ளது எனக் கூறப்படுகிறது.

இவற்றை நன்கு அவதானித்தால் 84 மணித்தியாலத்துக்கு முன் ஆறறிவு படைத்த மனிதன் பெரும் இடர்களில் இருந்து பெறுமதி மிக்க மனிதர் உயிர்களை காத்துக்கொள்ளலாம். ஆனால் இறுமாப்பு (EGO) உள்ள மனிதர்நாம் மிருகங்களிடமிருந்து கற்பதா? என அசட்டையாய் உள்ளனர்.

உலகில் கடலில் காற்றில் கடந்த இருமாதங்களாக திடீர் என ஏற்பட்ட மாற்றங்களை அறிந்த கடல் மீன்கள் சிலநாடுகளில் பெருவாரியாகக் கரைக்கு 2.3 கி.மீற்றர் அருகில் வந்துள்ளன.

ஏன் இலங்கையில் கூட அண்மையில் கிழக்கு மகாணத்தில் மட்டக்களப்பு, காரைதீவு நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை ஆகிய கடற்பரப்புக்களில் பெருமளவு கீரி, நெத்தலி, சாளை மீன்கள் ஏகப்பட்டளவு கரைக்கு வந்ததினால் மனிதர்களையும் பொருட்களையும் ஏற்றும் டிப்பர் லொறிகள், ஆட்டோ, கார் டிக்கி, நாலுசில்லு டிரொபிலர் போன்றவற்றில் பெருமளவு மீன்கள் ஏற்றப்பட்டு சந்தையில் மீனின் விலை 50ரூபா-80 ரூபா வரை விற்கப்பட்டது. பத்திரிகை வாயிலாக நாம் அறிந்துள்ளோம்.

வழமையாக கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் பறவைக் கூட்டங்கள், பல இம்முறை தமது திசையை மாற்றி வேறு நாடுகளுக்கு சென்றுள்ளன. இவை நன்மைக்குப் பதில் சிலசமயம் தீமையையே மக்களுக்கு விளைவித்துள்ளன. காரணம் "பறவைக்காய்ச்சல்" 'BIRD FEVER' வைரசை இவைகளின் வருகையால் அவற்றின் எச்சங்கள் மூலம் பரப்பி பல நாடுகளில், கோழி,வாத்து, மயில், வான்கோழி,

பீற்றர்

புறா, மைனா, காகம், LOVE BIRD, அடைக்கலம் குருவி போன்றவற்றிற்கு "பறவைக் காய்ச்சலை" பரப்பியதால் பொருளாதாரம் விழ்ச்சியடைந்து, மில்லியன் கணக்கான வீட்டுப் பறவைகள் பூண்டோடு அழிக்கப்பட்டுள்ளன.

எனவே கால நிலை வேறுபாட்டால் பக்க விளைவான "பறைவைக் காய்ச்சல்" இலங்கையில் தாக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

எனவே நாம் இயற்கை தொடர்பாக எம்மத்தியில் அறிவியல் ரீதியாகக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இதன் மூலமாக இயற்கையினால் ஏற்படும் பாரிய மனித உயிரிழப்புக்களைத் தடுக்கமுடியும். இதற்கு எம்மத்தியில் அறிவியல் ரீதியிலான தேடல்களும் கல்வியும் அவசிய மாகும். ஆகவே பூமியதிர்வு, சூறாவளி, கடல் பெருக்கு, கடும்மழை என்பவற்றிலிருந்து கற்றுணர வேண்டிய பாடங்கள் நிறையவே உள்ளன.

# தமிழரின் தனியரசுப் பாதையில் 15ஆவது ஆண்டில் தமிழீழ காவல்துறை



## காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களுடனான நேர்காணல்

உலகில் தங்களுடைய இனத்தின் விடுதலைக்காகப் போராடிய, போராடிக்கொண்டிருகின்ற எல்லா விடுதலை அமைப்புக்களில் இருந்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தனித்துவமானது.

விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் அதேவேளை தங்களுடைய இனத்தின் கலை கலாச்சாரம், மொழி, பண்பாடு போன்ற ஒரு இனத்தின் அடையாளங்களை பேணுவதற்கும் அவ்வினத்தின் கட்டமைப்புச் சீர் குலையாமல் பாதுகாத்துக் கொள்வதற்கும் சிவில் நிர்வாக அமைப்புகள் , நீதி நிர்வாகத் துறை, காவல்துறை போன்ற பல் வேறு நிர்வாக அமைப்புக்களை உரு வாக்கி தங்களுடைய இனம் சகல வழிகளிலும் மேம்பாடு அடைய வழிசமைக்கின்ற ஓர் அமைப்பாக ஒரு தனித்துவமான இயக்கமாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு செயற்பட்டு வருகிறது.

அந்த அடிப்படையில் தேசியத்தலைவரால் தமிழீழ காவல்துறை தமிழ் மக்களின் சமூகக் கட்டமைப்பு அந்நிய சக்திகளின் செயற்பாடு களினால் சிதைந்து போகாமல் இருக்கவும் தனியரசிற் கான ஒரு படிக்கல்லாகவும் 1991ஆம் ஆண்டு தமிழீழக் காவல் துறை ஆரம்பிக்கப்பட்டது. 1991-11-19 ஆம் திகதி யன்று தமிழீழ காவல்துறை தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களுக்கு தங்களுடைய அணிவகுப்பு மரி யாதையை முதல் முதல் செலுத்திய நாள். தனியரசு அமைக்கும் பாதையில் இதுவொரு மைல்கல்லாக அமைந்தது.

அந்தவகையில் தனது இனத்திற்கான பதின்னான்காண்டுகள் சேவையை நிறைவு செய்து பதி னைந்தாவது ஆண்டில் பிரவேசிக்கும் தமிழீழக் காவல்துறை பற்றி அதன் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் வழங்கிய நேர்காணல்.

**உலகில் எந்தவொரு விடுதலை அமைப்புக்களிடமும் போராடிக்கொண்டிருக்கும் சம காலத்திலேயே தனியான காவல் துறை அமைப்பு காணப்பட வில்லை அந்த வகையில் தமிழீ ழக் காவல்துறை உருவாக்கத் தின் தேவை ஏன் உணரப்பட்டது?**

எங்களுடைய விடுதலைப் போராட்டத்திற்கும் ஏனைய விடுதலைப்போராட்டத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அதாவது எங்களுடைய விடுதலைப் போராட்டம் என்பது நீண்ட வரலாற்றைக் கொண் டது. எங்களுடைய இனம் ஏற்கனவே தனியரசாக தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொண்டு இருந்த இனம், பின்னர் மேற்குல கினரின் ஆதிக்கத்தில் இருந்து அவர்கள் தங்களுடைய காலணித்து வத்தை விட்டு வெளியேறும் போது நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்காக சிங்கள அரசாங்கத்தோடு இணைக் கப்பட்டவர்கள்.

அன்றிலிருந்தே சிங்கள அரசும் தமிழ் இனம் மீதான ஒடுக்கு முறையை ஆரம்பித்தது. அதே நேரம் தமிழ் இனமும் அன்றே தமது ஒடுக்கு முறைக்கெதிராக போராட்டத்தை துவங்கினார்கள். இந்தச்சந்தர்ப்பத்தில் எல்லாம் சிங்கள அரசு தனது அனைத்து படைக்கட்டமைப்புக் களையும் கொண்டு தமிழ் இனத்தை அடக்கி ஒடுக்கி உரிமைகளை மறுத்து வந்தனர்.

இந்தக்கட்டத்தில் தான் தமிழ் இனத்தின் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது. இந்த ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சிப் பாதையில் நாம் முழுமையாக தேச விடு தலையை அடைந்த பின்பு ஒரு காவல்துறையை ஆரம்பிக்கின்ற போது எமது சமூகம் ஒரு கட்டுக் கோப்புக்குள் இருந்து விலகியிருக்கும். அதைவிட போராட்டத்திலுள்ளவர்கள் சமூகத்தில் சட்ட ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய ஒரு நிலை ஏற்படும்.



1991-11-19 அன்று

இது அவர்களுக்கு நடைமுறை ரீதி யில் மேலதிக சுமையாக இருக் கும். இதனால்தான் தேசவிடுதலைப் போராட்டத்தோடு தொடர்புடைய விதத்தில் ஒரு காவல்துறையை ஆரம்பித்தால் அது எமது சமூகத் திற்கும் ஆரோக்கியமானதாக இருப்ப தோடு எமது சமூகம் சீரழியாமலும் பார்த்துக்கொள்ளலாம்.

மேலும் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது எதிரியான வன் எமது சமூகத்தை சீரழிக்கப் பார்ப்பான். இதனால் மக்களின் போராட்ட உணர்வுகள் மழுங்கடிக் கப்படும். எனவேதான் அவற்றை யெல்லாம் தடுக்கும் வகையில் ஒரு காவல்துறையை உருவாக்க வேண் டிய தேவை ஏற்பட்டது.

எமது விடுதலைப் போராட்ட மானது யாருடைய தங்கு நிலையி லும் இல்லாது எமது மக்களின் பலத்திலேயே தங்கியிருப்ப தால் அந்நியர்களின் அழுத்தங்கள் மற்றும் விருப்பு வெறுப்புகளுக்கப்பால் மக்களின் நலனுக்காக எத்தகைய தீர்மானத்தையும் மேற்கொள்ளக் கூடியவாறு உள்ளது.

மேலும் எமது சமூகம் தனது கலை, கலாச்சார, பொருளா தார அரசியல் ரீதியாக சகல அடை யாளங்களோடு சீரழியாமல் இருக்க வேண்டுமென்றால் போராட்ட காலத் திலேயே காவல்துறையை ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

மற்றும் எங்களுடைய காவல்துறை ஏனைய காவல்துறை களைப் போன்றல்லாமல் சட்டம், ஒழுங்கை மட்டும் பின்பற்றாமல் ஒரு சமூக விடுதலையை நோக்கியும் அதாவது மூட நம்பிக்கைகள், பெண் விடுதலை, சிறுவர் உரிமைகள் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாக பல்வேறு விடயங்களில் தனியே சட்டம் ஒழுங்குகளுக்கப்பால் அவர்களது உரிமைகள் தொடர் பாகவும் ஆராய்ந்து தான் காவல் துறை பணியாற்றுகிறது.

ஏனைய காவல்துறைகள் போன்று தனியே எழுத்தில் உள்ள சட்டத்தை மட்டும் பின்பற்றிக் கொண்டு எமது காவல்துறை செயற் படுவதில்லை. நாங்கள் சமூக முரண் பாடுகளைத் தீர்ப்பதற்கு மேற்படி முறையை முற்றுமுழுதாக பின்பற்று வதில்லை. இதனால் தான் எங்க ளுக்கு மக்களின் ஆதரவு காணப் படுகிறது. இதனால்தான் காவல் துறையின் செயற்பாடும் சரி எமது விடுதலைப் போராட்டமும் சரி வெற்றி கரமாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

**காவல்துறை ஆரம்பிக்கப் பட்ட போதும், தற்போதும் சமூகத் தில் என்ன வேறுபாட்டை உணர் கின்றீர்கள்?**

ஆரம்பகாலங்களில் பெண் களுக்கெதிரான குற்றச்செயல்களும், ஒருசில மூடநம்பிக்கைகளும் காணப் பட்டன. அத்துடன் சில கிராமங்களில் சமூக ஏற்றத்தாழ்வை அடிப்படை யாகக்கொண்ட ஆலயப் பிரச்சினை கள் போன்ற சமூகப் பிரச்சினைகள் காணப்பட்டன. நாம் அவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற் காக புரட்சிகரமான முறையில் மக்களின் ஆதரவுடன் நடவடிக்கை களை மேற்கொண்டோம். இன்று பதின்னான்கு வருடங்களின் பின்னர் அவ்வாறான பிரச்சினைகள் தொடர் பில் ஒரு சமூக மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. அவ்வாறு புரட்சிகரமான தொரு செயற்பாட்டை உள்ளடக்கிய தாகவே எமது காவல்துறையும் செயற்படுகிறது.

ஆனால் எதை எதையெல் லாம் எமது சமூகத்திலிருந்து ஒழித் தோமோ அதையெல்லாம் இராணு வமும் அதன் புலனாய்வு அமைப்புக் களும் மீண்டும் எமது மக்களிடம் ஏற்படுத்தி விடுவதில் தீவிர அக் கறை காட்டுகிறார்கள்.



**தமிழீழக் காவல்துறை யின் கட்டமைப்புக்களைப் பற்றி?**

கட்டமைப்பு ஆரம்பமாக நடுவப்பணியகம் காணப்படுகிறது. அதன் கீழ் பல பிரிவுகளை அதாவது நிர்வாகப்பிரிவு, குற்றத்தடுப்புப்பிரிவு, குற்றப்புலனாய்வுப் பிரிவு, விசேட புலன் விசாரணைப்பிரிவு, போக்கு வரத்துப் பிரிவு, தகவல் பிரிவு, பெண்கள், சிறுவர் விவகாரப்பிரிவு, மற்றும் எல்லா இடங்களிலுள்ள பணிமனைகள், இதைவிட பெரியள வான பிரதேசங்களிலுள்ள கிராமங் களில் விசாரணைப் பிரிவுகள் என சிறியளவான பிரிவுகளையும் ஏற்படுத்தியுள்ளோம்.

**சிறிலங்கா காவல்துறைக் கும் தமிழீழக் காவல் துறைக்கும் இடையில் எந்த இடத்தில் எப்படி யான வித்தியா சத்தை நீங்கள் உணர்கின்றீர்கள்?**

இது மக்களுடைய காவல் துறை, விடுதலைக்காகப் போராடு கின்ற மக்களிலிருந்து உருவாக்கப் பட்ட காவல்துறை. இந்தக் காவல் துறையை வழி நடத்துவது ஒரு தேசிய விடுதலை இயக்கம். ஆனால் சிறிலங்கா காவல்துறை அப்படியல்ல, அதுவொரு அடக்குமுறையாளர் களின் காவல்துறை. அவர்கள் தமிழர்களை மட்டுமல்ல கிராமப்புறச் சிங்கள மக்களையும் சுரண்டுகின்ற ஒரு அடக்குமுறை அரசாங்கத்தின் காவல்துறையாகக் காணப்படுகின் றார்கள். அவர்கள் அடக்கு முறைக்கு பழக்கப்பட்டவர்கள். அவர் களை காவல்துறையாக பார்க்க முடியாது. அடக்குமுறையாளர்களின் ஒரு படையாகத்தான் பார்க்கலாம்.

**சர்வதேச சட்டங்கள், மனிதஉரிமைகள் என்பவற்றோடு ஒப்பிடுகையில் தமிழீழக் காவல் துறையின் நிலை?**

சர்வதேச சட்டம், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் ஏனைய உரிமைகளின்படி பார்த்தால் எங்களு டைய காவல்துறை மற்றும் எங்களு டைய போராட்டம் எங் களுடைய படையணிகள் எல்லாமே அங்கீகரிக் கப்படவேண்டும். அந்த நிலையில் தான் எங்களுடைய செயற்பாடுகள் காணப்படுகின்றன.

**பெண்கள், சிறுவர்கள் தொடர்பாக தமிழீழ காவல்துறை யால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் என்ன?**

தற்போது நாங்கள் கிராமங் களில் மக்கள் மத்தியில் கருத்தூட் டல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். இதில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாகத்தான் நிறைய கூறிவருகின்றோம்.

இதில் சீதனம் என்பது படு பிற்போக்குத்தனமானது. எமது தேச விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த பின்பு குறைந்துள்ளது. இருந்தும் அதன் எச்சங்கள் இன்றும் காணப் படுகிறன. அது இல்லாமல் போக வேண்டும். உண்மையில் இதுவொரு கருத்துப்புரட்சியினூடாக மட்டுமே முற்றுமுழுதாக இல்லாமல் செய்ய முடியும். ஆனால் எமது போராளிகள் மத்தியில் திருமணங்கள் எல்லாம் சீதனங்கள் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் தான் இடம்பெறுகின் றன. எமது காவல்துறை உறுப்பினர் களும் சீதனம் வாங்காமல் திருமணம் செய்கிறார்கள்.

சுழியன்

இதைவிட பெண்கள் சாதி, மதம், பிரதேசம், ஆண் பெண் பாகு பாடு போன்ற பல்வேறு காரணங் களால் பாதிக்கப்படுகின்றார்கள். ஆனால் எமது விடுதலைப்போராட்டம் ஆரம்பித்த பின்பு அவை இயற்கை யாகவே இல்லாமல் போய்க்கொண்டி ருக்கின்றன. நாங்கள் மேலும் தீவிர மாக கருத்தூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இதனை முற்றுமுழுதாக சமூகத்திலிருந்து அகற்றலாம்.

இவ்வாறான முற்போக்காக எமது தமிழ் சமூகம் மலர்ச்சி பெற்று வருவதனை கண்டுதான் பல பிற்போக்கான அரசுகள் எமக்கெதிராக செயற்படுகின்றன.

**தமிழீழக் காவல்துறையால் தண்டிக்கபட்டோ அல்லது சீர் திருத்தப்பட்டோ வெளியில் சென்ற ஒருவர் மீண்டும் அதே குற்றங்கள் அல்லது வேறு குற்றங்கள் புரிந்து காவல்துறைக்கு வந்துள்ளனரா?**

(19 ஆம் பக்கம் பார்க்க)

# நறுக்கென...

## துயரம் தோய்ந்த மீனவர் வாழ்க்கை



தமிழ் மீனவர்களின் வாழ்க்கை இன்னும் மோசமானதாகவே இருந்து வருகிறது.

யுத்த காலத்தில் கடற்படையினர் மேற்கொள்ளும் முதல் தாக்குதலும் முதல் இழப்பும் இந்த மீனவர்களே முதலில் சந்திப்பார்கள்.

அதன் பின்னரான சமாதான வெறுமைக் காலத்திலும் மீனவர்கள் சந்தித்த இழப்புக்களும், துயரங்களும் மிக அதிகமானவை என்றே கூறவேண்டும்.

போரென்றாலும் சரி இயற்கை அனர்த்தம் என்றாலும் சரி மீனவர்களின் வாழ்க்கை தண்ணீரோடு கலந்த கண்ணீராகவே இருந்துவருகிறது.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் இவர்கள் தமது உறவுகளையும் உடமைகளையும் இழந்து ஏதிலிகளாக்கப்பட்டு தற்காலிகக் குடிசைகளுக்குள் தள்ளப்பட்டார்கள்.

சரியாக ஒரு ஆண்டு கடந்த இந்தக் காலப்பகுதியில் தொடரும் பெரு மழையினால் அகதிமுகாம்களிற்குள் மழைநீர் உட்புக அந்த மக்கள் வாழும் வாழ்க்கை வார்த்தைகளால் கூறமுடியாது.

இவ்வாறு மீனவ மக்களின் வாழ்க்கைநிலை இருக்க, இந்த மீனவ மக்களை குறிவைத்து இராணுவத்தினரும் கடற்படையினர் மேற்கொள்ளும் கெடுபிடிகளும், தாக்குதல்களும் அதிகரித்துக் காணப்படுகிறது.

இப்போது சாவகச்சேரிக் கடல் தொழிலாளர்கள் மீன் பிடிக்கச் செல்லும் நேரத்தை கடற்படையினர் குறைத்துள்ளனர். இது வரையும் காலை ஐந்து மணியிலிருந்து மீன் பிடிக்க அனுமதித்த படையினர் இனி காலை ஆறு மணிக்குப்பின்னரே மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள் என அறிவித்துள்ளனர்.

இவ்வாறே கிழக்கில் மூதூர் கிழக்குப் பகுதி மீனவர்கள் மாலை ஆறு மணிக்குப் பின்னர் கடலில் மீன் பிடிக்க மீனவர்கள் வள்ளங்களை கடலில் இறக்கக்கூடாது என படையினர் அறிவித்துள்ளனர்.

படையினரின் இந்த கெடுபிடிகளானது மீனவர்களின் வாழ்க்கையில் வறுமையை ஏற்படுத்துவதாகவே இருக்கப்போகிறது.

ஏற்கனவே பொருளாதார ரீதியில் மிகவும் நொந்து போயுள்ள இம் மீனவர்கள் மீண்டும் மீண்டும் படையினர் கெடுபிடிகளை விதிப்பதனூடாக மிக மோசமான வாழ்வியல் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

உயிரிழப்புக்களையும், பொருளிழப்பையும் மீனவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய இந்தப் படையினர் தொடர்ந்தும் இத்தகைய மிக மோசமான கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் இந்த மக்களின் அடிப்படை வாழ்வியல் உரிமைகளை அழிக்கின்றனர்.

## தேர்தல் ஆணையாளரின் கோபம்



சிறிலங்காவுக்கு அரச ஊடக நிறுவனங்கள் எதுவும் தேவையில்லை என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவின் இக்கூற்றானது இந்தத் தேர்தல் காலத்தில் அரச ஊடகங்களின் செயற்பாட்டை அவதானித்ததன் விளைவாக எழுந்திருக்கக்கூடும்.

ஏனெனில் இந்தத் தேர்தல் காலத்தில் அரச ஊடகங்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கென வேட்பாளர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கும் நேரங்கள் ஒரு சமநிலையிலானதாக இருக்கவேண்டும் என்பதோடு அரச ஊடக நிறுவனம் ஒரு பொது ஊடகம் என்ற வகையில் ஒரு சனநாயக நாடு என்று கூறப்படுகின்றதென்ற வகையில் வேட்பாளர்களுக் கிடையில் பாரபட்சமற்று நடக்க வேண்டும்.

ஆனால் இலங்கையின் வரலாற்றில் அதிகாரம் கையிலுள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் அதிக துஸ்பிரயோகம் என்பது அளவிட முடியாதது.

அந்த வகையில்தான் இம்முறை தேர்தல் காலத்தில் அரச ஊடகங்கள் தமது வரைமுறைகளெல்லாவற்றையும் தாண்டி தனித்தொரு வேட்பாளருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஊடக நிறுவனம் என்றதுபோன்று செயற்பட்டது.

அந்த வகையில் தேர்தல் ஆணையாளரும் எதுவும் முடியாத நிலையில் மேற்படி கூற்றை தெரிவித்திருக்கிறார் என்றே கூறவேண்டும்.

அத்தோடு தேர்தல் ஆணையாளர் சிறிலங்கா போன்ற நாடுகளுக்கு சுயாதீனமாக இயங்கக்கூடிய ஊடகங்களே அவசியமெனவும் தெரிவித்துள்ளார்.

உண்மையில் சுயாதீனமாக இயங்கக்கூடிய ஊடகங்கள் தோற்றுவிக்கப்பட்டாலும் அதனைச் சுயாதீனமாக இயங்க அரசியல் சக்திகள் அனுமதிக்கவேண்டுமே.

இலங்கையில் ஜே.வி.பி யினரின் ஆதிக்கம் அதிகரிக்கத் தொடங்கியதிலிருந்து இலங்கை ஒரு கம்யூனிச நாடாக மாறுவதற்கு ஏற்ற வகையில் சென்றுகொண்டிருக்கிறதா என்ற சந்தேகம் உண்டு.

அத்தோடு அதிகாரங்களை ஏனைய சிறுபான்மை இனங்கள் மீது பிழையான வகையில் பிரயோகிக்கப்படுவதைப் பார்க்கும்போது இந்த நாடு சர்வாதிகார குணங்களைக் கொண்டிருக்கிறதா என்ற சந்தேகம் உள்ளது.

முதலில் தேர்தல் ஆணையாளர் இலங்கை எத்தகைய நாடு என்பதை இனங்கண்டு கொண்ட பின்னர் அதற்கான ஊடகம் எது தேவையென முடிவெடுப்பதே பொருத்தமாக இருக்கும். இதேவேளை உண்மையில் அரச ஊடகங்களைப் பயன்படுத்தும் முறையைப் பார்க்கின்றபோது இலங்கை போன்ற நாட்டுக்கு அரச ஊடகங்கள் தேவையில்லைதான்.

## பதவி விலகிய ஜயந்த தனபால



சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளராக இதுவரை கடமையாற்றிய ஜயந்த தனபால அந்தப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து ஆட்சி அதிகாரத்தை சுதந்திர ஐக்கிய முன்னணி அரசு கைப்பற்றியதையடுத்து சமாதானச் செயலகப் பணிப்பாளராக ஜயந்த தனபாலவை சனாதிபதி சந்திரிகா நியமித்திருந்தார்.

தன்னுடைய பெருமளவு காலத்தை மேற்குலகிலேயே கழித்தவர் என்பதோடு ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவிகளை வகித்தவர் என்றவகையிலும், உயர் இராஜீக நட்பினைக் கொண்டவர் என்ற வகையிலும் இவரை சனாதிபதி சந்திரிகா நியமித்திருந்தார்.

சந்திரிகாவின் எதிர்பார்ப்பிற்கு அமைவாக தன்னுடைய அறிவையும், அனுபவங்களையும் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அதனை குழப்பியடிக்கப் பயன்படுத்திய பெருமைக்குரியவர்

உயர் இராஜதந்திரி என்ற வகையில் தன்னிடமுள்ள அனுபவங்களின் அடிப்படையில் இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னேறுவதற்குப் பதிலாக சாதாரண அரசியல்வாதிகளைப்போன்று ஜயந்த தனபாலவும் செயற்பட்டதோடு தனது பேச்சுக்களையும், அணுகுமுறைகளையும். வெளிப்படுத்திவந்தார்.

ஒரு இராஜதந்திரி என்றவகையில் ஏற்கனவே உண்மையென நிரூபிக்கப்பட்ட விடயங்களைக் கூட தனது அந்தஸ்தையும் மறந்து தன்னை நியமித்த சந்திரிகாவுக்கும், அரசுக்கும் காட்டும் இராஜவிசுவாசமாக பொய்யுரைத்துவந்தார்.

சமாதான முயற்சியில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி வந்த ஒட்டுக்குழுக்களின் விடயத்தில் ஜயந்த தனபால தொடர்ந்து மறுத்துவந்தார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் எந்த ஒட்டுக்குழுக்களும் இல்லையென தெரிவித்துவந்தார்.

ஆனால் இவரின் கூற்றுக்களையெல்லாம் பொய்யாக்கும் வகையில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வைத்து இந்த ஒட்டுக்குழுக்களை சந்தித்துக் கலந்துரையாடி அரசகட்டுப்பாட்டுப் பகுதியில் ஒட்டுக்குழுக்கள் இயகிவரும் ஒட்டுக்குழுக்களை அம்பலப்படுத்தியிருந்தனர்.

இந்தச் செயற்பாடானது சர்வதேச ரீதியாக ஜயந்த தனபாலவையொரு பொய்யராக காட்டியிருந்தது.

இந்நிலையில்தான் ஜயந்த தனபால அடுத்த சனாதிபதியாக வருபவருக்கு இலகுவாக தனது பதவியை இராஜினாமா செய்வதாகக் கூறி இராஜினாமா செய்துள்ளார்.

ஆனால் உண்மையில் ஜயந்த தனபால இனியும் தொடர்ந்து இந்தப் பதவியில் நீடித்தால். தானொரு முழுப்பொய்யர் என நிரூபிக்கப்பட்டுவிடும் என்ற நிலையில்தான் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

## வேற்றுமையில் ஒற்றுமையா? சந்தி சிரிக்கிறது..!



ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் ஒரு தீவிரவாதக் கட்சிகள் அல்ல எனத்தெரிவித்துள்ளார் ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்த.

டக்ளஸ் தேவானந்த எப்படி அந்தக்கட்சிகளைக் குறைசொல்ல முடியும். தான் சேர்ந்திருக்கும் இந்தக் கூட்டை குறை கூறினால் தனது பெயரும் சேர்ந்தல்லவா கிழிபடும்.

அத்தோடு ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளை தீவிரவாதிகளாக சித்தரிக்க எதிர்க்கட்சிகள் முயற்சித்தாலும் தமிழ் மக்கள் அவர்களை தீவிரவாதிகளாகக் கருதவில்லை என டக்ளஸ் தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் சார்பாக இந்தப் பச்சோந்தி எப்படி அறிக்கைவிட முடியும் என்பது தான் தெரியவில்லை.

இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கி தமிழ் மக்களை எப்படியெல்லாம் அவமதிக்க முடியுமோ அந்த வகையிலெல்லாம் கூக்குரலிடும் இந்தக் கட்சிகளுக்காக வக்காளத்து வாங்கும் டக்ளஸ் தேவானந்த இந்தக் கட்சிகளின் தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பாக என்ன கூறப்போகிறார்.

தமிழ் மக்களின் தயாகத்தை நிராகரித்து இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளாக இருந்த தமிழ் மக்களை காற்றுக்கொதுங்கிய சிங்களவர்கள் வந்தேறுகுடிகள் என வரலாற்றையே மாற்றி தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குறியாக்குபவர்களுக்காக பரிந்து பேசும் இந்தப் பாதகர்களை என்னவென்று கூறுவது.

இனத்தின் மானத்தை விற்று தங்கள் வயிறு வளர்க்க விரும்பும் இவர்கள் தமிழ் மக்களின் சார்பாக பேசுவதற்கு என்ன அருகதையை கொண்டிருக்கிறார்கள்?

என்ன பாடுபட்டாவது தமிழ் மக்களை சிங்களவர்களின் அடிமைகளாக விற்று விடுவதற்காக இவர்கள் பேசும் விலைதான் டக்ளஸ் தேவானந்தவின் மேற்கூறிய வார்த்தைகள் ஆகும்.

பொய்யுரைப்பது எதுவரை என்கிற வரையறைகளையே தாண்டி அந்த ஆளான நபர் ஹிட்லரின் பிரச்சாரப் பீரங்கி கோயபல்சையே விழுங்கி விடுவார் போலிருக்கிறது டக்ளஸ் தேவானந்த.

இல்லாவிட்டால் தமிழ் மக்களின் எதிரிகளை நண்பர்களாகக் காட்ட முயற்சிக்கமாட்டார்.

உண்மையிலிருந்து வழுவி செயற்படும் டக்ளஸ் தேவானந்த போன்றவர்கள் வேற்றுமையில் ஒற்றுமை என்பதே தமது நிலைப்பாடு எனக் கூறியுள்ளார்.

ஒரு வகையில் பார்த்தால் டக்ளஸ் தேவானந்த கூறிய வேற்றுமையில் ஒற்றுமை என்பது இனத்தாலும் மொழியாலும் டக்ளஸ் தேவானந்தவும், ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய போன்றவர்கள் வேறுபட்டிருந்தாலும் தமிழினத்தை எப்படியாவது அழித்துவிட வேண்டும் என்ற இலட்சியத்தில் ஒற்றுமையாக செயற்படுகிறோம் என்பதைத்தான் அவ்வாறு கூறினாரோ தெரியவில்லை.

வேழினி

# 2006 விளையாட்டுப்போட்டிகள் சாதனைத்திறன்கள் மிளிருமா?

2006ஆம் ஆண்டு தைமாதத்திலே பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் காலம். ஒரு வாரத்துக்குட்படுத்தப்பட்ட தயார்ப்படுத்துகையும் போட்டியுமாக அன்றி நன்கு திட்டமிடப்பட்டதும், பயிற்சிக்கான அவகாசமும் உடையதுமாக போட்டிகளுக்கு மாணவர்கள் தயாராக வேண்டிய அவசியம் பலமுறை உணரப்பட்டுள்ளது. ஆனாலும் இம்முறை அதற்குரிய சாத்தியப்பாடுகளை அதிகரிப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான முன்னோடிக் கலந்துரையாடல் நடைபெற்று சில விடயங்களிற்கு முடிவெடுக்கப்பட்டது வளர்க்கும் வகையில் தூண்டலை ஏற்படுத்த வேண்டும். இது மாணவர்களை விளையாட்டின்பால் ஈர்க்கவும், திறன் வெளிப்பாட்டு மனப்பாங்கு அதிகரிக்கவும் உதவும். ஆனாலும் உலகக்கிண்ண உதைபந்தாட்டம் எப்போது நடைபெறப்போகிறது எனக் கேட்டபோது அநேக உடற்கல்வி ஆசிரியர்கள் அதை அறிந்திருக்கவில்லை என்பது மனத்தை நெருடும் விடயமாகும். இது ஒரு ஆசிரியர் தேடலும், வாசிப்புப் பழக்கமும் கொண்டவராக இருக்கவேண்டும் என்பதை வெளிக்காட்டியிருந்தது. "கற்பதற்காகக் கற்றல்" **Learn to learn** எனும் அடிப்படைக் கற்றல் தேர்ச்சி மாணவர்சார் கண்ணோட்டமாக மட்டுமன்றி ஆசிரியர்சார் கண்ணோட்ட



மூலம் உதைபந்தாட்டத்தில் புதிய பாய்ச்சலிற்குத் தயார்ப்படுத்துவதற்கு ஏதுவாக அமையும். உதைபந்தாட்டம் தமிழர் தாயகத்தின் முதன்மை விளையாட்டாக அறிமுகப்படுத்தியிருப்பது யாவரும் அறிந்ததே.இதில் சாதிக்க தமிழர்தாயகத்தில் உள்ள அனைத்துப் பாடசாலை அணிகளும் திடசங்கற்பம் பூணவேண்டும். அதற்கு கடினமான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இம்முறை இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினால் தாயகத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் கோட்டரீதியாக முதலிரு இடங்களைப் பெறும் அணியினருக்கு உதைபந்தாட்ட சீரங்கி வழங்கப்படவுள்ளது.

உதைபந்தாட்ட பயிற்றுனருக்கு முன்னுதாரணமாக **T.P**மாஸ்ரர் என அழைக்கப்படும் **T.**பத்மநாதன் உடனே நெஞ்சிற்கு வருவார்.தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, இளவாலை புனிதஷென்றியரசர் கல்லூரி போன்றவற்றில் பயிற்சியாளராகவிருந்து சாதித்தார். அவர் மரணித்தது கூட கொக்குவில் இந்துமைதானத்திலே. புனித ஷென்றியரசர் கல்லூரிவிளையாடிக் கொண்டிருக்கும்போது திடீரென வீழ்ந்தவர் பின் வைத்திய சாலையில் மரணமானார். ஊதியம், வருவாயைக் கடந்து தமது நேரத்தையும், அச்சாதனையை கையகப்படுத்தியிருப்பது மனங்கொள்ளத்தக்கது. அருட்தந்தையர்கள் முதல்வர்களாகவிருக்கும் பள்ளிகளைப்போல் ஏனைய பள்ளிகளின் முதல்வர்களும் இந்த விடயத்தில் கூடுதலான அக்கறை காட்டவேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது.

அண்மையில் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையில் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் அகில இலங்கை ரீதியாக தங்கப்பதக்கங்களை வென்ற வெற்றியாளர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும், அதிபர்களிற்கும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் கலந்து கொண்டு தேசியவிருது வழங்கிக் கெளரவித்தார். அத்தோடு கல்வியில் உயர்தரத்தில் அகில இலங்கை ரீதியாக சாதித்தவர்களிற்கும் தமிழீழக் கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில் தேசிய கெளரவமும் வழங்கப்பட்டிருந்தது யாவரும் அறிவர். இது எமது அதிபர்களிற்கும், பயிற்சியாளர்கள், ஆசிரியர்களிற்கும், முக்கியமாக மாணவர்களிற்கும், விளையாட்டு வீரர்களிற்கும் கல்வியிலும் விளையாட்டிலும் சாதிக்கத் துடிக்கும் மனவெழுச்சியை ஏற்படுத்தும் விடயமாக அமைந்துள்ளது.

2006ஆம் ஆண்டு மேலும் இச்சாதனைகளை அதிகரிப்பதற்காக மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் தயாராக வேண்டும். ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் பயிற்சிச் செயற்பாடுகளிற்கும், திறன் நம்பிக்கை தரும் விடயமாகவுள்ளது.

கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா அவர்கள் மேற்படி விடயங்களை வலியுறுத்தி உரையாற்றும் போது,

பாடசாலை விளையாட்டுக்குழு அமைத்தல்.

பாடசாலை விளையாட்டு நேர உத்தேச அட்டவணை.

மாணவர்களுக்கு பயிற்சிவழங்குதல்.

மைதானங்கள் புனரமைப்பு உபகரணங்கள் ஒழுங்கமைப்பு.

என்பவற்றை டிசெம்பரிற்கு முதல் பூர்த்தியாக்க வேண்டுமெனகேட்டுக்கொண்டார். இவையாவற்றிலும் முக்கியமாக மாணவர்களுக்கு பயிற்சியளிக்க ஆசிரியர்கள் தங்கள் நேரங்களைச் செலவிடவேண்டியதன் அவசியத்தையும், தார்ப்பரியத்தையும் வலியுறுத்தியமை மனங்கொள்ளத்தக்கது. மேலும் மாணவர்களை குறித்த விளையாட்டுகளிற்காக இனங்காணல் முக்கியவிடயமாகும். அத்தோடு அவர்களிற்கான தருணங்களையும் (**Opportunities**) சூழலையும் (**Sportive Environments**) ஏற்படுத்திக் கொடுத்தல் முக்கியமானதொன்றாகும்.

உலகளாவிய ரீதியில் நடைபெறும் விளையாட்டுக்கள் அதில் மிளிரும் வீரர்களின் தனித்துவம், மகத்துவம் பற்றி மாணவர்களுக்கு அறிமுகம்செய்யவும், அவர்கள் அதனோடு ஊடாடும் மனப்பாங்கையும் மாகவும் நோக்கவேண்டிய தேவையை ஆசிரியர்களாகிய நாம் நெஞ்சிலிருத்தவேண்டும்.

விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் சாதிக்கும்போது அவர்களோடு சேர்ந்து பயிற்சியளித்த ஆசிரியர்பெறும் மனப்பூரிப்பின் மகத்துவம் எத்தனை அற்புதமானது.

**ப. ஜோயல் பியசீலன்**

காலம் காலமாக நடக்கும் நிகழ்வு தானே என்றிராதுயாதாயினும் ஒரு விளையாட்டில் சாதிக்க ஆசிரியர்கள் தயாராகவேண்டும். மாகாணப்போட்டிகளில் வெற்றிபெறும்வீரர்களின் சதவீதம் இம்முறை அதிகரிக்க வேண்டும்.

*பெருவிளையாட்டுக்கள்:*

கிளிநொச்சியில் பெருவிளையாட்டுக்களைப் பொறுத்தவரை இம்முறை உதைபந்தாட்டம், தாச்சி என்பன 2005 டிசெம்பரிற்குள்ளேயே நடாத்தி முடிக்கப்படத்தீர்மானிக்கப் பட்டுள்ளது. இது அடுத்தவருட ஆரம்பத்தில் விளையாட்டுப்போட்டிகளால் ஏற்படக்கூடியகால நெருக்கடியைத் தவிர்த்துக்கொள்ள வாய்ப்பாக அமையும். அத்துடன் 19 வயதுப்பிரிவில் உதைபந்தாட்ட அணியிலுள்ள அனைவரும் காலணி அணிந்திருத்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். அடுத்தவருடம் 15,17 வயதுப் பிரிவினருக்கும் இவ்விடயத்தைக்கைக்கொள்வதன்




உழைப்பையும் செலவிட்டவர்கள். தம்மையே அர்ப்பணித்தவர்கள் சாதித்திருக்கிறார்கள். அவர்கள் இறந்தாலும் அவர் பெயர் வாழ்கிறது. இப்போதுள்ள எமது பயிற்சியாளர்கள் இதற்குத் தயாரா? **T.P** யிடம் பயிற்சி பெற்று சாதித்தவர்கள் அந்த மனப்பாங்கோடு இப்போதும் சாதிப்பவர்களுள் எம் மனக்கண்முன் வருபவர்களில் முக்கியமானவர். இப்போதும் சாதிப்பவர் றொகான் றாஜசிங்கம் மற்றவர் இளவல் டனி. ஆனாலும்யாழ்ப்பாணப் பாடசாலைகளில் உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரையில் முன்பிருந்ததைவிட சாதிக்கும் ஆர்வம் சற்றுக் குன்றியிருப்பதை அண்மைக் காலமாக அவதானிக்க முடிகிறது. இருப்பினும் மன்னார் மாவட்டம் மேம்பாட்டிற்குமான திட்டமிடலையும், நிகழ்ச்சி நிரலையும் தயாரிப்பதன் மூலம் எழுச்சிகரமான மாற்றங்களிற்குத் தயாராக வேண்டும். மாற்றம் என்னும் விடயத்தைத் தவிர யாவும் மாறும் நிகழுலக ஒழுங்கில் மாற்றங்களிற்கு ஈடுகொடுக்க இளையோர் தயாராகவும், மூத்தோர் வழிகாட்டவும் பரவலான தருணங்களை ஏற்படுத்திக்கொடுக்கவும் மனவயப்படவேண்டும். ஒரு மனிதனிடத்தே நடத்தைசார் மாற்றத்தை ஏற்படுத்துவதே எக்கற்கையினதும் அடிப்படை நோக்கமாகும்.

ஆக, மாற்றம் என்பது எமது சமூகம், தேசியம் என்பவற்றை வலுவாக்கும் நேர்வயப்பட்ட மாற்றங்களாக அமைதல் வேண்டும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 18. 11 . 2005
மின் அஞ்சல :– weekly @ eezhanatham.com

# சந்திரிகாவின் ஏமாற்றங்கள்..!

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவியினை இரண்டு பதவிக்காலங்கள் வரை தக்க வைத்திருந்த அதாவது சுமார் பதினொரு ஆண்டு காலம் தக்க வைத்திருந்த சனாதிபதி சந்திரிகா ஓய்வுபெறுகிறார்.

சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காக்களின் வழித்தடத்தில் வந்தவர்களுள் தன்னையொரு சக்தி மிக்கவராக வெளிப்படுத்திக் கொள்ள விரும்பியவர்.

ஆனால் பதவிக்கு வரும் போது அவர் தரித்த சமாதான வேசம் களைந்த நிலையில் இன்று பதவியை விட்டு வெளி யேறுகிறார்.

உண்மையில் சனாதிபதி சந்திரிகா இந்தப் பதவியிலிருந்து வெளியேறுகிறார் என்பதைவிட வெளியேற்றப்படுகிறார் என்று கூறுவதே பொருத்தப்பாடுடையதாகும்.

ஏனெனில், சனாதிபதி சந்திரிகா தனது பதவியை விட்டு இவ்வளவு விரைவாக வெளியேற விரும்பியவர் அல்லர். தான் மேலுமொரு வருடகாலத்திற்கு இந்தப் பதவியில் நீடிக்க விரும்பிய போதும் இலங்கையின் அரசியல் யாப்பும் உயர் நீதிமன்றமும் அனுமதிக்காததால் சந்திரிகாவின் விருப்புக்கு மாறாக வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்தை அளித்துள்ளது என கூறலாம்.

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா அரசியல் ரீதியாக சலிப்புற்றவராகவும் களைப்புற்றவராகவுமே வெளியேறுகிறார். அதாவது அவர் ஏமாற்றத்தோடு வெளியேறுகின்றார் என்றே கூற வேண்டும்.

1994 களில் பதவிக்கு வந்த சனாதிபதி சந்திரிகா இலங்கையில் புதியதொரு தசாப்தத்தை படைக்கப் போகின்றேன் என்ற வகையிலேயே தனது கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தார். ஆனால் பதவிக்கு வருவதற்கு மட்டுமே அந்தக் கருத்தை உருவாக்கியவர் பதவியைக் கைப்பற்றியதன் பின்னர் இதற்கு நேர் மாறாகவே செயற்பட்டார்.

சமாதானத்துக்கான வெண்புறாவை பறக்க விட்ட அதே கரத்தில் போருக்கான வாளையேந்தி தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களிலிருந்து அந்த மக்களை விரட்டியடிப்பதில் முனைப்புக் காட்டினார்.

சமாதானத்தின் மீது அவருக்கிருந்த நம்பிக்கையை விட யுத்தத்தின் மீது அவருக்கு இருந்த நம்பிக்கை அலாதியானது.

ஆனால் வரலாறு சனாதிபதி சந்திரிகாவுக்கு பல தோல்விகளையே பரிசளித்தது. அதாவது தமிழருக்கு எதிரான சண்டைகளிலும் சமர்களிலும் அவரது அரசுமுன்னேறிய அளவுக்கு தமிழருக்கு எதிரான யுத்தத்தில் முன்னேற முடியாது முடங்கிப் போனதோடு தோல்வியையே தனது பதவிக் காலத்தில் சந்தித்தார்.

தமிழ் மக்களின் வாழ்விடங்கள் மீது யுத்தபடையெடுப்புகளை மேற்கொண்டதன் மூலம் தமிழ்மக்களால் சனாதிபதி சந்திரிகா அழிவின் புதல்வியாகவே நோக்கப்பட்டார்.

இந்தநிலையில் சனாதிபதி சந்திரிகா இரண்டு மிக முக்கியமான தோல்விகளை தனது தவிக்காலத்தில் சந்தித்தார்.

ஒன்று தமிழ் மக்களின் பிரச்சினையில் உரிமைகளை வழங்குவதில் எந்தவித முன்னேற்றத்துக்கும் வராது தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளை எப்பாடுபட்டாவது அழித்தொழிக்க வேண்டு மென்பதில் குறியாகச் செயற்பட்டார்.

ஆனால் தமிழர் தலைமையும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் மென்மேலும் வீச்சுப் பெற்று சர்வதேசத்தின் எல்லைகள் வரை தன் கீதர்த்தியை பரவச் செய்தார்களேயொழிய ஒரு போதும் சலிப்புறவில்லை.

இந்தநிலையில் சனாதிபதி சந்திரிகா இரண்டாவது தோல்வியையும் சந்தித்தார். அதாவது இலங்கையின் அரசியல் யாப்பின் பிரகாரம் இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் சனாதிபதியாக பதவி வகித்தால் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க முடியாது என்ற நிலையில் தொடர்ந்தும் அரச அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள அரசியல் யாப்பை மாற்ற சட்டத்தின் ஓட்டைகளை தேடிய போதும் அது அவருக்கு வாய்ப்பாக அமையாததோடு மேலும் ஒரு ஆண்டு காலம் பதவியில் கூட இருக்க முடியாது இரண்டாவது தோல்வியையும் சந்தித்தார்.

இவ்வாறு சனாதிபதி சந்திரிகா தோல்விக்கு மேல் தோழ்விகளை சந்தித்து தனது பதவிக்காலத்தில் மெச்சும் படியாக எந்தச் சாதனைகளையும் புரியாது சாதாரணமான ஒரு தலைவராகவே சனாதிபதி பதவியை விட்டு வெளியேறுகிறார்.

இந்த வகையில் இலவுகாத்த கிளிபோல தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தமிழர் தலைமை சலிப்புறும் என காத்திருந்த சந்திரிகாவுக்கு அவரது இரண்டு பதவிக்காலத்திலும் மிஞ்சியது சலிப்பும் ஏமாற்றமுமேயாகும்.

சனாதிபதி சந்திரிகா இந்தச் சலிப்பையும் ஏமாற்றத்தையும் சந்திக்க வேண்டியதற்கு பிரதான காரணம் சனாதிபதி ஒரு ஒடுக்கு முறையாளராக செயற்பட்டதேயாகும்.

பல்லின சமூகங்களைக் கொண்ட நாட்டின் நல்ல தலைவிக்குரிய பண்புகளை வெளிப்படுத்தாது சிங்கள இனத்தையும் அந்த இனத்தின் நலன்களையும் மட்டுமே முதன்மை படுத்தி செயற்பட்ட காரணமாகும்.

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா அரசியலை விட்டு வெளியேறுவதானது இலங்கையின் அரசியல் களத்தில் ஒரு சாதாரண நிகழ்வாக எந்த வெற்றிடத்தையும் ஏற்படுத்தாத ஒரு வெளியேற்றமாகவே அமைகிறது.

# வெகுசன ஊடகங்களின் முக்கியத்துவம்

'அபிவிருத்தியடைந்து வருகின்ற சமூகங்களில் கல்விசார் குறிக்கோள்களை அடைவதில் புதிய ஊடகங்களின் ஆதரவின்றி கல்வி நிறுவனங்கள் தனித்து நின்று வெற்றியடைய முடியாதிருக்கலாம்' என நெல்சன் ஹென்றி (Nelso nhentry) ஊடகங்களும் குறியீடுகளும் என்ற அவரது நூலில் மிகச் சரியாகக் குறிப்பிட்டுள்ளார். வெகுசன ஊடகங்களை குறிப்பதாகவுள்ள புதிய ஊடகங்கள் கல்வியின் பாதைகள் என்ற வகையில் பெருந்தொகையான மக்களுக்குத் தகவலை வழங்கி, தற்போதுள்ள கல்வித்திட்டங்களை அதிக வினைவுத்திறனும், அர்த்தமும் கொண்டவையாக ஆக்குகின்ற அவற்றின் இயலளவிலிருந்து பொருத்தப்பாட்டைப் பெறுகின்றது.

ஊடகமே செய்தியாகவுள்ளது. அதாவது எமக்கு ஒரு சிறிய தகவலை அல்லது அறிவை வழங்குகின்ற ஊடகமானது எம்மீது பெரும் செல்வாக்கை ஏற்படுத்துகின்றது என்பதை இது குறிப்பதாகவுள்ளது. ஒரு சிறிய தகவலின் விளைவுதிறனானது அந்தத் தகவல் எமக்கு வழங்கப்படுகின்ற ஊடகத்தைப் பொறுத்ததாகவுள்ளது. இலத்திரனியல் ஊடகங்கள் புலன்களை (senses) தூண்டும் தன்மையுடையவையாக இருப்பதால், அவை உணர்வுகளின் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, ஊடகமென்பது (Medium) செய்தியாகவும் (massage) ஏனெனில், புலன்அங்கங்களை அவை ஊக்கப்படுத்தி செயலூக் கத்துடன் செயற்படத் தூண்டுபவையாக இருப்பதனாலாகும். ஆகையால் வகுப்பறைக் கற்பித் தலில் வெகுசன ஊடகத்தை பயன்படுத்துவது முக்கியமானதாகும். அப்பொழுதுதான் அறிவுறுத்தற் செயற்பாட்டின் ஒரு பகுதியாக உணர்வுத் தூண்டலை மாணவர்கள் பெறக்கூடியதாகவிருக்கும்.

'அடிப்படையான இரு வழிகளில் ஆனால் ஒன்றோ ஒன்று சார்பான வழிகளில் ஆதரவான மாதிரிகள் என்ற வகையில்' கல்வியில் ஊடகத்தைப் பயன்படுத்த முடியும்.

**1. தொலைக் கற்பித்தல் நிறுவனங்களில் காணப்படுவது போன்று கற்றல் செயற்பாடுகள் வடிவமைக்கப்படுகின்ற சூழலில் பகுதியாக இவற்றை ஆக்க முடியும்.**

**2.கல்வி ரீதியாக முக்கியமானதும் பயனுள்ளதுமான மேலதிக அல்லது ஆதரவான தகவலை வழங்குவதன் மூலம், ஆசிரியர்களின் கரங்களில் மறைமுகமாக பங்காளிகளாக அல்லது கருவிகளாக சூழலுக்குள் இவற்றைக் கொண்டு வரமுடியும்.**

ஏதாவது ஒரு ஊடகத்தின் மூலமாக தனிநபர் சாராத தகவல் தொடர்புக்கு வெகுசன ஊடகங்கள் வழிவகுக்கின்றன. ஒரு பொதுவான செய்தியுடன் பெருந்தொகையான மக்களை அல்லது மாணவர்களைச் சென்றடைவதற்காக தகவற்தொடர்பு வழிகளாக அல்லது கருவிகளாக வெகுசன ஊடகங்கள் உள்ளன. பத்திரிகைகள் போன்ற அச்சு ஊடகங்கள் மூலம் அல்லது வானொலி, தொலைக்காட்சி மற்றும் சினிமா போன்றவற்றின் மூலம் செய்தியை மக்களிடம் சென்றடையச் செய்யமுடியும். 'அண்மைக்காலங்களில் தொழில்நுட்பமானது சமூகத்தினூடாக ஆராய்ச்சி ஆய்வு கூடங்களிலிருந்து தயாரிப்பு , தகவல்தொடர்பு, விண்வெளியுகம் ஆகியவற்றுள்ளும் இறுதியில் தற்போது கல்வித் துறையினுள்ளும் பிரவேசித்துள்ளது' ஆரம்ப காலங்களில் சிறுவர்களுக்கான ஓரேயொரு தகவல் தொடர்பு ஊடகமாக ஆசிரியரே இருந்தார். அவர் தனது மாணவர்களுக்கு வாய்மொழிமூலமாகக் கற்பித்தார். காலக்கிரகத்தில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமையானது புத்தகங்களை அச்சிடுவதற்கு வழி வகுத்தது. இதன் பின்பு செய்தித் தாள்கள் வெளியிடப்பட்டன. இப்பொழுது சில காலமாக கல்வித்துறையில் வானொலி மற்றும் தொலைக் காட்சி போன்ற புதிய வெகுசன ஊடகங்கள் அதிகரித்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இவை பெருமளவு மக்களைச் சென்றடைவதுடன் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதிலும் உதவுகின்றன.

தகவல் வழங்குவதற்கும் அறிவைப் பெற்றுக்கொள்வதற்குமான ஏக ஊடகமாக பாடசாலைகளும் கல்லூரிகளும் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளன. ஆனால் தொழில் நுட்ப அபிவிருத்தி மற்றும் துரிதமான அறிவு வளர்ச்சியுடனும் கல்வியின் புதிய பாதைகள் திறந்துள்ளன. பாடசாலைகள் வழங்க முடியாத தகவலை இந்த ஊடகங்கள் வழங்குகின்றன. ஆனால் இந்தத் தகவல் கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகளுள் ஒன்றிணைக்கப்பட வேண்டியுள்ளன.

1986ஆம் ஆண்டின் கல்வி பற்றிய தேசியக் கொள்கை மற்றும், 1992ஆம் ஆண்டின் திருத்தியமைக்கப்பட்ட கொள்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

'சிறார்களின் உள்ளங்களில் பாரிய செல்வாக்கை ஊடகங்கள் கொண்டுள்ளன. வெகுசன ஊடகங்கள் நேரம் மற்றும் தூரத்தடைகள் சமாளிக்கக் கூடியவையாக்குகின்றன. நவீன கல்வித் தொழில்நுட்பமானது மிகத் தொலைவிலுள்ள பகுதிகளுக்கும், நலன்பெறுவோரின் மிகவும் வசதி குறைந்த பிரிவினரும், ஒப்பீட்டளவில் வசதி படைத்த உடனடியாகக் கிடைக்கக்கூடிய பகுதிகளுக்கும் ஒரே சமயத்தில் சென்றடையவேண்டும்.

வெகுசன ஊடகங்கள் சில முக்கிய தொழிற்பாடுகளுக்குப் பயன்படுகின்றன. பெருந்தொகையான மக்களைச் சென்றடைவதில் அவை பயனுள்ளவையாகவுள்ளன. கட்டாயக் கல்வியையும், முதியோர் கல்வியையும் பரப்புவதில்அவை உதவுகின்றன. அண்மைக்காலங்களில் தொலைக்கல்வியில் இவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளன. வினைதிறனும் அர்த்தமுள்ளதுமான அறிவுறுத்தலை வழங்குவதில் இவை பயனுள்ளவையாக இருக்கின்றன.

ப.இராஜேஸ்வரன்

தபால் மூலமான திட்டத்துடன் கூடிய வகையில் வானொலியின் பயன்பாடானது கென்யாவில் மிகவும் வெற்றியளித்துள்ளது. வயது வந்தோருக்கான கல்வியைத் தொடர் வதில் வானொலிக் கலந்துரையாடல்கள் கனடா, இந்தியா, நைஜீரியா,சுவீடன், தன்சா னியா மற்றும் வேறு பல நாடுகளிலும் மிகவும் வெற்றியளித்துள்ளன.


சில சமயங்களில் வெகுசன ஊடகங்கள் ஆசிரியரின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் தன்மையுடையவையாக உணரப்படுகின்றன. வகுப்பறை ஆசிரியர்களை இவை பதிலீடு செய்யும் சாத்தியமுள்ளதாக சிலவட்டாரங்களில் கூறப்படுகின்றன. கல்வியின் இந்த ஊடகங்களின் பயன்பாட்டை நெருக்கமாக அவதானித்தால் இவை துணை ஊடகங்களாக இருப்பது அறியப்படுகிறது. ஒளிபரப்பின்போது முன்- ஒளிபரப்பு (Pre-telecast) மற்றும் பின் ஒளிபரப்பு (Post-Telecast) என்ற வகையில் ஆசிரியர்களால் அதிக பணி செய்ய வேண்டியுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் தொழில்நுட்ப ஊடகங்களில் பெருக்கம் இருந்த போதும் ஆசிரியருக்கு இன்னமும் முக்கியமான இடமுள்ளது. ஆசிரியர்கள் பதிலீடு செய்யப்படுவர் என்ற அச்சங்களுக்கு ஆதாரம்

(19ஆம் பக்கம் பார்க்க)

# நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள்

சிறிலங்காவின் புதிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி யாரென்பது பெரும்பாலும் இன்று மதியம் தெரியவந்து விடும்.

கடந்த வருடம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் எப்பொழுது முடிவடைகின்றது? என்ற கேள்வி எழுந்ததிலிருந்து ஐ.தே.க சனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சார வேலைகளை ஆரம்பித்ததிலிருந்து



கடந்த 15 ஆம் திகதி நள்ளிரவு மருதானை பிரச்சாரக் கூட்டம் வரை அது சமாதானக் கோஷத்தையே எழுப்பிவந்தது. உண்மையில் அது 2001 டிசெம்பர் தேர்தலுக்கு அக் கோஷத்தை முன்வைத்த போதும் அதன் நாடாளுமன்ற ஆட்சிக் காலத்தில் யுத்தத்திற்கு ஓய்வு கண்டதைவிட வேறெந்த முன்னேற்றத்தையும் காணவில்லை.

அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரம் மிகவும் பிந்தியே தொடங்கியது. ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் 2006 டிசெம்பர் நீடிக்கும் என்பதன் அடிப்படையில் அது அத்தகைய நடவடிக்கை எதனையும் மேற் கொள்ளவில்லை.

இவ் வருடத்துடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் முடிவுக்கு வருவதாக ஐ.தே.க கூட எதிர்பாராத வகையில் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியபின்னும் கூட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிப்பதில் இழுபறி நிலவியது.

மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளர் என அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட அவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசனைக்கு மாறாக ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தமையை அடுத்து அவர் சனாதிபதி வேட்பாளர் நிலையிலிருந்து நீக்கப்படலாம் என ஊகங்கள் எழுந்தன. உண்மையில் நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிவரை நிச்சயமற்ற நிலையொன்றே காணப்பட்டது. எவ்வாறாயினும் சு.கவில் தகுதி வாய்ந்த வேறொருவரும் இல்லாத நிலையில் மகிந்தராஜபக்ஷ களத்தில் நின்றார். அவருக்கு இம்முறை தேர்தலில் முக்கிய வியூகமாக விளங்கியது இனவாதமே என்பதை மறுப்பதற்கில்லை.

தமது இனத்தைப் பாதுகாப்பது குறித்துப் பேசுவது இனவாதமா? என்று சிலர் கேள்வியெழுப்பினர். உண்மையில் ஒடுக்கப்படும் ஓர் இனம் தன்னைப் பாதுகாக்க முயல்வது இனவாதமாகாது தான். ஆனால் ஆளும் இனம் மற்றொரு இனத்தை ஒடுக்கும் வகையில் செயற்படப் போவதாகக் கூறுவதை இனவாதமில்லை என்று எவ்வாறு கூறமுடியும்? எனவே மகிந்தவும் ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் அதிகார வர்க்கத்தினராகையால் அவர்கள் பேசிய பேச்சுக்களை வேறெதிலும் சேர்க்க முடியாது. எனவே இத்தேர்தல் முடிவு மகிந்தவுக்குச் சார்பானதாயின் அது இனவாதத்திற்குக் கிடைத்த வெற்றிதான்.

அதேவேளை சனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால் அவர் அதனை தனது சமாதான கோஷத்துக்கு கிடைத்த வெற்றியாகக் கூறிக்கொள்ளலாம். அது உண்மைதான் என வைத்துக்கொண்டாலும் அதனால் கிடைக்கப்போகும் நன்மை குறித்து இன்று மாலைக்குள்ளேயே முடிவுக்கு வந்து விடமுடியாது.

ஏனெனில் 1994 சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட போதும் அவ்வாறு தான் எதிர்பார்க்கப்பட்டது. ரணில் விக்கிரம சிங்கவை விடவும் அவர் சமாதானம் குறித்து உரக்கவே பேசினார்.

பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவது பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் மீண்டும் பேச்சுவார்த்தை தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு என்று ஏற்றுக்கொண்ட முதலாவது சிங்களத்தலைவர்தானே வன்செயலில் தகப்பனை இழந்தேன் கணவனை இழந்தேன் உங்கள் துயரம் தெரியும் என்றெல்லாம் கூறி பதவிக்கு வந்தவர் அவர்.

ஆனால் அவரின் பதவிக்காலத்தின் பெரும் பகுதி சமாதானத்துக்கான யுத்தத்திலேயே கழிந்தது. இறுதியில் யுத்தம் கூட அடுத்து என்ன? என்ற கேள்வியில் முட்டிக் கொண்டு நின்றது. மட்டுமல்ல சிறிலங்காவின் பொருளாதாரமும் சீர்குலைந்து நின்றது.

எனவே இப்பொழுது சமாதான கோஷம் போட்ட ரணில் விக்கிரம சிங்க சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் கூட எதுவுமே மாற்றமடைந்து விடப்போவதில்லை. தலையிடிக்கு தலையணியை மாற்றியது போன்றே இதுவும் அமைந்துவிடவும் கூடும்.

அவ்வாறில்லாது உண்மையிலேயே சமாதானத்தை ஏற்படுத்த ரணில் என்றாலென்ன மகிந்த ராஜபக்ஷ என்றாலென்ன முயல்வதாயின் அவர்கள் மிக நீண்ட தூரம் முன்னேறி வர வேண்டியிருக்கும். இதற்கு மகிந்தவுக்கும் ரணிலுக்கும் ஒரே நிலைதான் உள்ளது. ஏனெனில் அதற்கான முயற்சிகளை அவர்கள் எடுப்பதற்கு அவர்கள் இவ்வளவு காலமும் விதைத்துப் பயிர் செய்த இனவாதம் நிரந்தரமான முட்டுக்கட்டையாகவே இருக்கும்.

அது மட்டுமல்லாது, அவ்வாறு அவர்கள் செய்வதாயின் தமது அரசியல் எதிர்காலத்தைப் பற்றியோ பதவிபற்றியோ சிந்திக்காது தியாக மனப்பான்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட முன்வரவேண்டும். நீதியான நேர்மையான மனப்பாங்குடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் இறங்கவேண்டும்.

ஆனால் அப்படி எதுவும் ஏற்படுவதற்கான அறிகுறிகள் எவையும் இவர்களிடத்தில் காணவில்லை. 56 வயதுடைய ரணில் விக்கிரம சிங்கவின் கடந்த கால அரசியல் நடவடிக்கையிலேயோ அல்லது இன்று 60 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் மகிந்த ராஜபக்ஷவின் கடந்த கால அரசியல் நடவடிக்கைகளிலோ அவ்வாறான அறிகுறிகள் எதனையும் தெரியவில்லை.

அதிலும் தனது பரம்பரை குறித்து பிரலாபித்துவரும் மகிந்தராஜபக்ஷ தன்னை ஒரு பௌத்த சிங்களவராக இனம் காட்டுவதில் தீவிரமாக உள்ளார். இவரது குடும்பம்- அல்லது பரம்பரை தம்மை பௌத்தத்தின் காவலராகவே காட்டிவந்திருக்கிறது.

இது இவ்வாறிருக்க இவர்களுக்கு வாக்களித்து தெரிவு செய்திருக்கும் தென்னிலங்கை மக்களுக்குக் கூட இவர்கள் நேர்மையானவர்களாக நடந்து கொள்வார்கள் எனக் கூறிவிட முடியாது. ஏனெனில் தேர்தலுக்கு முன்னரே நிறைவேற்ற முடியாது எனத் தெரிந்தும் பல வாக்குறுதிகளை வழங்கியவர்கள் இவர்கள். சில வாக்குறுதிகளை இவர்கள் நிறைவேற்றப் போவதில்லை எனத் தெரிந்திருந்தாலும் மக்கள் வாக்களித்துள்ளார்கள் எனினும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையாவது இவர்கள் தீர்த்துவைப்பார்களா? என்பதும் கேள்விக்குரியதே.

கடந்த 57 வருடங்களாக ஆட்சிபீடத்தில் இருந்தவர்களும் கூட இவர்கள் கூறிய வாக்குறுதிகளைக் கூறியே பதவிக்கு வந்து பின்னர் அவர்கள் அதனை மறந்து விட்டமையினாலேயே மக்கள் இன்றும் ஏழ்மையில் வாழ்கின்றனர். அவர்களின் வழிவந்த இவர்கள் இன்று இல்லாவிட்டாலும் இவர்களின் பதவிக்காலம் முடிந்து வீட்டுக்குச்செல்லும் போது சிறிலங்காவின் நிலை எப்படியிருக்கும்? சந்திரிகா வீட்டுக்கு போகையில் எப்படியிருக்கிறதோ அப்படியே என்பதை பெரும்பாலும் பதிலாக இருக்கும்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# தமிழ் மக்கள் நிராகரித்த சனாதிபதித் தேர்தல்

நேற்றையதினம் இடம்பெற்ற சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஐந்தாவது சனாதிபதித் தேர்தலின் நிமிர்த்தம் தமிழ் மக்கள் எடுத்த தீர்மானம் எதேட்சையானதோ அல்லது உடனடியானதோ அல்ல மாறாக கடந்த இரண்டரை தசாப்தங்களின் அனுபவரீதியிலாக எடுக்கப்பட்ட முடிவே. எனவேதான் நேற்றைய தினம் இடம்பெற்ற தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் முடிவு சிறிலங்காவுக்கு மட்டுமல்ல சர்வதேசத்திற்கும் பல செய்திகளை கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதாவது கடந்த பொதுத்தேர்தலின் போது தமிழ் மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் காட்டிய அக்கறை இந்த சனாதிபதித் தேர்தலில் சிறிதளவேனும் காட்டவில்லை. கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழ் கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாகவும் இடைக்கால தன்னாட்சி அதிகார வரைவை ஏற்க வேண்டும் எனவும் கூறிதேர்தலில் நின்ற தமிழ் கூட்டமைப்பினருக்கு தமிழ் மக்கள் வாக் களித்தனர்.

ஆனால் நேற்றைய தினம் இடம் பெற்ற சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளர்களையும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆதரிக்கவில்லை. இதனால்தான் நேற்றைய தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் கடந்தபொதுத் தேர்தலின்போது இருந்தது போன்று பெருமளவு தமிழ் மக்களால் நிரம்பியிராமல் பெரும்பாலும் வடக்கு கிழக்கில் வெறுமையாகவே காணப்பட்டது.

இதிலிருந்து நாம் பலவற்றை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். அதாவது விடுதலைப் புலிகள் தங்களது ஏக பிரதிநிதிகள் என்பதில் தமிழ் மக்கள் எவ்வித இரண்டாம் தர கருத்துக்கும் இடமில்லாமல் இருக்கின்றார்கள். அதே நேரம் எந்தவொரு சிங்கள தலைமையையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தாங்கள் சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ விரும்புகின்றோம், தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு விடுதலைப் புலிகளே பாதுகாவலர்கள் போன்ற பல் வேறு செய்திகளை சிறிலங்காவுக்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்திற்கும் நேற்றைய தமிழ் மக்களின் தேர்தல் பகிஸ்கரிப்பு திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கும்.

மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே என்பது போல் நேற்றைய தேர்தலின் தொடர்பில் தமிழ் மக்களின் முடிவு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உள்ள மக்களின் ஆதரவுப்பலத்தை அனைவருக்கும் தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கும். தங்களுடைய விடுதலைக்காக தங்களுடைய நலனுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கும் விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்களும் தாங்களும் அவர்களுடன் இருப்பதனை நேற்றைய நிகழ்வு எடுத்துக் காட்டியுள்ளது.

சிறிலங்காவின் ஐந்தாவது சனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தல் தினத்தை தமிழர் துக்கதினமாக கடைப் பிடித்தனர். இதிலிருந்தும் நாம் ஒன்றை விளங்கிக்கொள்ளலாம், சிங்களத் தலைமை ஒன்று பதவியேற்கும் நாள் தமிழ் மக்கள் வாழ்வில் துன்பங்கள் சோகங்கள் நிறைந்த நாட்களாக இருக்கும் என்பதில் தமிழ் மக்கள் தெளிவாகவுள்ளனர்.

கடந்த காலங்களைப் போன்று சிங்களத் தலைமைகளையும் அவர்களது போலி அரசியல் வாக்குறுதிகளையும் தமிழ் மக்கள் நம்பத் தயாராக இல்லை. சிறிதளவு அவர்களை நம்பிய காலம் கூட மலையேறிவிட்டது. தங்களுடைய பலத்தில் தங்களுடைய நிலத்தில் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள் தமிழ் மக்கள்.

எனவேதான் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தொடர்பில் தெளிவாக இருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் தொடர்பிலும் தெளிவானதொரு நிலைப்பாட்டுடன் இருக்க வேண்டும். அத்தோடு தமிழ் மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பு மூலமும் சர்வதேச சமூகத்திற்கு நிறையவே செய்திகள் சென்றிருக்கும். எனவே இனியாவது தங்களது விடுதலைப் போராட்டம் தொடர்பில் சர்வதேசம் நல்லதொரு முடிவை எடுக்கவேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

இது ஒரு புறமிருக்க கடந்த பதினேழு எங்களது வாழ்வில் எவ்வித நல்ல மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. எனவேதான் வரும் இருபத்தேழு எமது சுதந்திரமான வாழ்வுக்கு என்ன கூறப்போகிறது என்பதனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர் தமிழ் மக்கள். நிச்சயம் நவம்பர் இருபத்தேழு ஒரு செய்தியோடு வரும் என்பதனை எல்லோரும் எதிர்பார்க்கலாம்.

**மு.தமிழ்ச்செல்வன்**



# விசையுறு பந்தினைப்போல்...

அவளுக்குப் பூவொன்றின் பெயர். அதிலும் விடியலின் வரவால் மலரும் பூவின் பெயர். தனது பெயருக்குரிய பூவைப் போலவே விடியலை அவளும் அதிகம் நேசித்ததால் அதற்காக அதிகவிலை கொடுத்திருந்தாள். ‘கழுத்துக்குக் கீழ அவளுக்கு இயங்காதாம்!’ என்னும் அவளுடைய நிலை பற்றிய விளக்கம் முற்றிலும் நிஜத்திற்கு முரணானதாகவே இருக்கும். நூற்றாண்டுகளாய் அடிமைகளாய் முடங்கிக் கிடந்த இனத்தின் விடுதலைக்கான இயக்கமாக இயங்கியவள் அல்லவா அவள்!

கூனிக்குறுகிக்கிடந்த நாம் முதுகு நிமிர்த்திய பலத்தின் முதுகெலும்புகளில் அவளும் ஒன்றல்லவா! சதையும் சமிபாட்டுத் தொகுதியும் இயங்குவதே ‘பூரணம்’ என்றிருந்த எமக்குள் எழுந்த இயக்கத்தின் இயங்கு திறனாக இருந்தவர்களில் அவளும் ஒருத்தியல்லவா!

தன்னை நிரூபிப்பதற்காய் தீக்குளித்து ராமனைத் திருப்திப்படுத்த முயன்ற சீதையின் வரலாற்றையே திரும்பத்திரும்ப இரைமீட்கும் எங்களுக்கு, தான் நேசிக்கும் மக்களின் நிலையான சுபீட்சத்திற்காகத் தன்னைத் தீய்க்குள் அமுக்கியவள் எவ்வளவு அசாதாரணமானவளாக இருக்கவேண்டும்!

ஆகவேதான் ‘இனத்தின் மகிழ்ச்சிக்காக வேதனைகளை முகங் கொடுக்கத் துணிந்தவளின் கழுத்துக்குக் கீழே இயக்கம் இல்லை’ என்பது எவ்வளவு பொய்மையானது!

எங்கள் எல்லோரையும் விட அவளிடம் தான் இயங்குகையே தன்னைக் கற்றுத் தேறுகின்றது. கதாநாயகனால் காப்பாற்றப்பட வேண்டிய வெற்றுப் பதுமைகளாக இரண்டரை மணித்தியாலம் அங்குமிங்குமாய் ஆ..ஊ.. என்று இழுபடும் சினிமா காட்டும் கதாநாயகி களையே பார்த்துப்பழகிய நாங்கள் கண்களோடு, கூடவே எங்கள் கனவுப்பிரம்மைகளையும் கசக்கிக் கொண்டு விழித்துப்பார்த்தால் நிச்சயம் உண்மை புரியும். இன்று எங்கள் தெருக்கள் சுதந்திரமாகச் சிரிப்பதற்காக எத்தனை பேர் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு சாதனைகளை ஈட்டியுள் ளார்களென்று...

ஓடைகள் மட்டுமல்ல ஓயாமல் வந்துகொண்டிருக்கும் அவனது பேச்சும் சலசலக்கவே செய்யும். மற்றவர்கள் நான்கு வார்த்தை பேசும் நேரத்தில், அவனோ நாற்பது வார்த்தைகளைப் பேசிமுடித்திருப்பான். பேசிமுடித்தாலும் முடியாமல் பேசுவதற்கென்று அவனிடம் ஏராளமாக இருப்பில் இருக்கும்.

எதிரியின் ரவை பக்கவாட்டாகத் துளைத்துச் சென்றதால் இரண்டு கண்களையும் இழந்தாலும், தனது பார்வைகளில் அவன் தெளிவானவன். இனத்தின் தேவைகளை இனங்கண்டு அதிலும் மருத்துவப்பிரிவில் இணைந்து பணியாற்றியவன்.

தனது தாயின் நினைவு வரும்போது இல்லாத கண்களின் மூடிய இமைகளின் இடுக்குகளிலிருந்து கசியும் அவனது கண்ணீரைக் காணும் கண்ணீருக்குக்கூட கண்ணீர் வரும். அக்கணங்கள் தரும் வேதனைக்கு முன்னே, அவனது புன்னகைகள் அழகானவை, மனம் நிறைப்பவை.

சும்மா சாட்டுக்கு முகத்தை மட்டும் காட்டிவிட்டு தங்களது சாகசங்களைக் காட்சிப்படுத்துவதற்கு ‘டூப்’புகளை வைத்துக் காலமோட்டும் சினிமாக்கதாநாயகர்கள் மக்களின் நனவுகளைப் பறித்து அவர்களைக் கனவிலே வைத்துக் காலம் ஓட்டுகிறார்கள். ஆனால், அவனோ இனத்தின் விடுதலைக் கனவை நனவாக்கி நல்லெதிர்காலத்தை மக்களுக்கு வழங்குவதற்காக, காலத்தை எழுதுபவர்களில் ஒருவனாக எங்களுக்கிடையில் ஒருவனாக . . . நாவின் சுவை அறியமுடியாமல் நரம்பறுந்துபோனாலும் சுதந்திரத்தின் சுவை தெரிந்தவன் அவன். ஆமாம், உறுப்புகள் செயலிழந்தாலும் உணர்வுகள் இன்னும் இன்னுமாய் அதிகமாகவே இருக்கின்றன அவனிடத்தே!

குருவியின் குரலிலும், சூரியசோதியின் படரும் சுடரிலும் பசி மறந்து தனக்கென எதையுமே வேண்டிக்கொள்ள விரும்பாத பாரதியின் பற்றின்மைகூட ‘விசையுறு பந்தினைப்போல் உள்ளம் வேண்டியபடி செல்லும் உடல்’ கேட்டது. ஆனால், இனத்தின் விடுதலைக்காக அதன் இயக்கத்திற்காக தங்களின் இயக்கங்களை அர்ப்பணித்தவர்கள் அளித்த விடுதலையின் பெறுமதி, சமரசங்களுக்காக ‘தருவதை வேண்டித் தணித்துக் கொள்வதற்காய்’ சப்பாணி கொட்டி அமராது.

உடலையே காயம் என்று தமிழ் வழக்கு சொல்வது நம்மினத்தின் வீரமரபை ஒட்டியதாய் இருக்கக்கூடுமா என்று எண்ணத்தோன்றுகிறது. போரில் விழுப்புண் பட்ட தழும்பைத் தாங்கும் பருவத்திற்கு முன்னரே, பிஞ்சு வயதில் இறக்கும் மழலையைக்கூட வாளால் கீறிப் புதைப்பது நம்முடைய முன்னாள் வீர மரபு. காயம் ஏற்பதற்கானதே உயிர்தாங்கும் பெருங்காயம் என்றோர் மரபு இருந்திருக் கக்கூடுமோ தெரிய வில்லை. ஆன்றோரும் சான்றோரும் ஆய்ந்தறிந்து கூறினால் சிறப்பா யிருக்கும்.

இருந்தும் வெறுமனே பேசப்படும் மரபுகளில் பெருமையில்லை. எது வாழ்கிறதோ, அதுவே நம்மை வாழச்செய்யும். எங்கள் தலைகளில் இருளைக் கவிழ்க்க எவர் முனைந்தாலும் தடுத்திட வேண்டியது நாமே!

ஒரு லட்சத்திற்கும் குறையாத எங்கள் உறவுகளை நாம் இழந்து தவித்தபோது இங்கே எட்டியும் பார்க்காதவர்கள், எது செய்வார்களோ என்றெண்ணி அச்சப்பட்டுக் கிடக்கவேண்டிய அவசியம் நமக்கில்லை.

காக்கைவன்னியனிலிருந்து கருணா வரைக்கும் எங்கள் போராட்டப்பெருமையின் நாலூறு கழிக்கும் பூசணிகளை உடைத்துக்கொண்டு, எம்மினத்தின் கடந்தகாலக்கண்ணீரைத் தம் நெஞ்சினில் ஏந்தி விதைந்த மாவீரர்களின்

**சு.ஞாலவன்**

வாரத்தில், தலைவனின் எண்ணங்களைச் சிந்தையில் ஏந்தியெழும் தமிழினத்தின் முன் எதிர்த்துவரும் எதுவும் சிறு தூசே! இதுவரை சில நாடுகள் இயக்கத்தைத் தடைசெய்த பின்புதான் நாம் இன்னும் எழுந்தோம்! இனிமேல் ஒரு முழு இனத்தையும் தடைசெய்வதென்பது முடியாத காரியம். ஆக எங்களுக்குப் புன்னகைகளைப் பரிசளிப்பதற்காக விதைந்தவர்களை முழுமனதிலும் நிறைப்போம்! தலைவனின் எண்ணங்களாய் முழு இனமும் எழுவோம்!

**இந்த வீதிகளின் வடிகாலமைப்பு சரியான சீரான நிலையில் இல்லாததால் வெள்ளம் வீதியின் மேலால் பாய்வதால் வீதிகள் உடைப்பெடுக்கும் அபாயங்களை அடைந்துவிடுகின்றன. சிறு வீதிகளின் புனரமைப்பு ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படுவதால் ஒப்பந்தகாரர்கள் தமது இலாபத்தை குறியாக கொலணி வீதி புனரமைப்பில் தரமற்ற பணியினை மேற்கொள்வதாக விடயமறிந்த கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.**



# சீரற்றுக் காணப்படும் வன்னியின் வடிகாலமைப்பு

வன்னியில் வடிகாலமைப்பு சீரின்மை இன்று கட்டாயம் திரும்பிப் பார்க்கவேண்டிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

போர் காலத்தில் எவ்வாறு இந்த வடிகாலமைப்பு சீரின்மை காரணமாக பாதிப்புக்களை ஏற்படுத்தியதோ அதே போன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் அபிவிருத்திகள் பல ஏற்படுத்தப்பட்ட பின்பும் இந்த வடிகாலமைப்புகளின் சீரின்மை தொடர்கின்றன.

ஏ-9 வீதி செப்பனிடப்பட்ட பின்பும் இந்த வீதியின் வடிகாலமைப்பு சீரின்மை காரணமாக பாதிப்புக்கள் தொடர்வதை அவதானிக்கமுடிகிறது.

மட்டுமே செய்ய முடிவதாகவும் மேலதிக புனரமைப்புப் பணிகளோ அன்றி வடிகாலமைப்போ மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் A-9 வீதியில் பரந்தன் பளை வரையான வீதி இருமருங்கிலும் அகலமாக்கப்பட்டு செப்பனிடுவதற்கான முன்னாயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. இந்த நடவடிக்கை பூர்த்தியாகுமேயானால் A-9 வீதியின் வடிகாலமைப்பு ஓரளவு சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மிகமோசமான

எனினும் இந்த B மற்றும் C-D தர வீதிகளின் வடிகாலமைப்பில் இன்று சுட்டிக்காட்டவேண்டிய தேவையாகவும் இருக்கிறது.

ஏனென்றால் இந்தக் காலம் மழைகாலம். ஆதலால் பல வீதிகளில் இந்த வடிகாலமைப்பு சீரின்மை காரணமாக மக்கள் பலர் படும் அசௌகரியங்களை நேரில் பார்த்தால் தெரியும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம், வன்னேரிக்குளம், அக்கராயன், உருத்திரபுரம், வட்டக்கச்சி உட்பட பல கிராம மக்கள் மழை காலங்களில் படும் அசௌகரியங்களை பார்க்கின்றோம்.

ஜெயபுரத்தில் இருந்து வன்னேரி வரையான வீதியிலும் அக்கராயனிலிருந்து புதுமுறிப்பு மற்றும் முறிகண்டி ஊடாக கிளிநொச்சி வீதியிலும் மற்றும் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களின் வீதிகளிலும் மக்களின் மழைகால அவலங்களை திரும்பிப்பார்க்கவேண்டியுள்ளது.

இந்த வீதிகளின் வடிகாலமைப்பு சரியான சீரான நிலையில் இல்லாததால் வெள்ளம் வீதியின் மேலால் பாய்வதால் வீதிகள் உடைப்பெடுக்கும் அபாயங்களை அடைந்துவிடுகின்றன.

குறிப்பாக A-B தர வீதிகளின் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் புனரமைப்புச் செய்யப்படுகின்ற போதிலும் வண்ணியிலுள்ள A-B தர வீதிகளின் வருடாந்தம் 100 மில்லியன் புனரமைப்புக்கு தேவையாக உள்ள போதிலும் தற்போது 13 மில்லியன் மாத்திரமே தமக்குக் கிடைப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் பொ.குகானந்தன் தெரிவிக்கின்றார்.

வன்னியின் பிரதான வீதிகளில் A-9 வீதி மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. தென்னிலங்கை மக்களினதும் யாழ். மக்களினதும் போக்குவரவுக்கு இந்த வீதி பெரிதும் பயன்படுவதால், இந்த வீதியின் புனரமைப்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஈடுபட்டுவருகிறது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆளுகைக்குட்பட்ட வீதிகளின் புனரமைப்புக்கும் அந்த வீதிகளின் வடிகாலமைப்புக்கும் 300 மில்லியன் தேவை என வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்மொழிவொன்றை அனுப்பிவைத்திருக்கின்ற போதிலும் இந்த 300 மில்லியன் நிராகரிக்கப்பட்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருந்த போதிலும் வருடமொன்றுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒதுக்கப்படும் நிதியில் வீதிகளின் பராமரிப்பு பாதிப்புகள் இருக்கின்றன. A-35 தர வீதி என்று சொல்லப்படுகின்ற பரந்தன் முல்லை வீதியும் தற்போது இந்த வடிகாலமைப்பில் முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆனால் இந்த C-D தர வீதிகளின் வடிகாலமைப்புத்தான் மிகவும் கவலைக்கிடமான முறையில் உள்ளது.

குறிப்பாக கிராம மட்ட வீதிகளை புனரமைப்புச்செய்யும் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட வடிகாலமைப்புக்கள் புனரமைப்புச் செய்வதற்கான நிதி தம்மிடம் இல்லை என்று பிரதேச சபை கைவிரித்து நிற்கிறது.

ஒரு கிலோமீற்றர் வீதி புனரமைப்புக்கு 30இலட்சம் தேவை என பிரதேசசபை திட்டமிடுகிறது.

இந்தப் புனரமைப்பு செய்யவேண்டிய காலப்பகுதியில் நிதி பற்றாக்குறை என்று சொல்லியே சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கையை விரிக்கின்றன.

ஆனால் இவ்வாறு நிதி இல்லை என்று கூறுவதன் ஊடாக வன்னி வீதிகளின் நிலை என்ன?

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் பல வீதிகள் ஓரள்வு புனரமைப்புச் செய்யப்படுகின்ற போதிலும் பல வீதிகளின் வடிகாலமைப்பு சீரின்மை என்பதுதான்.

சிறு வீதிகளின் புனரமைப்பு ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படுவதால் ஒப்பந்தகாரர்கள் தமது இலாபத்தை குறியாக கொலணி வீதி புனரமைப்பில் தரமற்ற பணியினை மேற்கொள்வதாக விடயமறிந்த கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வடிகாலமைப்பு சீரின்மைக்கு இந்த நடவடிக்கையும் ஒரு காரணமாகின்றது.


இந்த மழைகாலம் கடந்தாவது வன்னியில் வடிகாலமைப்புடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினர் அக்கறை கொள்ள வேண்டும்.

நிதி பற்றாக்குறை என்ற காரணத்தைக் காட்டி நிதியை தவிர்த்து நிதி மூலத்தை இனங்கண்டு செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவேண்டும். சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நிதி மூலத்தை இனங்காண சில உதவி நிறுவனங்கள் முன்வரவேண்டும். இதற்குப் பொறுப்புள்ள நிறுவனங்கள் உந்துசக்தியாக இருக்கவேண்டும்.

இல்லையேல் வன்னியில் வீதி அபிவிருத்தியில் வடிகாலமைப்பு என்பதில் மக்கள் தொடர்ந்தும் இன்னல்களையே சந்திப்பர்.

அசிதன்

---



# எழுத்துக்கள் வீரியம் மிக்கது

எம் உள்ளத்தில் எழுகின்ற ஒவ்வொரு சொற்பதங்களும் வலுப்பெற்றவையாகவும் யாராலும் எக்காலத்திலும் அழிக்க முடியாத மிகவும் உயர்ந்த எண்ணங்களாகவும் இருக்க வேண்டும்.

எதைப்பார்த்தாலும் எதைக் கேட்டாலும் எழுதத் துடிக்கும் நெஞ்சங்களே! எம்முடைய எழுத்துக்களால் ஒருவனுடைய நெஞ்சம் தூண்டப்பட்டு அவனை ஒரு புதிய மனிதனாக மாற்றி அற்புத புருசர்களாக்கி விடவேண்டும்.

எம்முடைய எழுத்துக்கள் வெறும் பொழுது போக்காக அல்லாமல் ஒருவருடைய வாழ்வுக்கு பலவிதமான சாதனைகளை தூண்டிவிடக் கூடிய வித்தாகவும் அவன் மனம் சோர்வுற்றுத் தவிக்கையில் தேற்றி விடக்கூடிய ஒரு மருந்தாகவும் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு நிமிடமும் நாம் நிறைய எழுத வேண்டும் அதற்காக எம் மனதை அமைதிப்படுத்தி அருமையான சொற்கருக்களை எம் மனதில் தோற்றுவிக்கின்றோம். இக்கருவானது முழுமைபெற்று கவிக்குழந்தையாகவோ அல்லது பல கட்டுரைகளாகவோ சிந்தனைத் துளிகளாகவோ இப்படி பல்வேறு வடிவம் பெற்று பிரசவிக்கப்படுகின்றது. எமது எழுத்தாற்றல் எந்த வடிவம் பெற்ற போதும் அது அடுத்தவரின் திறமைக்கு எவ்விதத்தில் தூண்டுதல் செய்யும் என்ற சிறந்த கருத்து எழுதும் நெஞ்சங்களுக்கு வேண்டும்.

நாம் எத்தனை ஆக்கம் எழுதினோம் என்று எண்ணிஎம்மனம் பெருமைப்படுவதைவிட அத்தனை ஆக்கங்களிலும் எது மக்கள் மனதைத்தொட்டுசிந்திக்கவைக்கிறதா என்று நாம் சிந்திக்கவேண்டும். எம்முடைய எழுத்துக்கள் பலவிதமான எதிர்ப்புக்கள்கண்டும் தொடரப்படவேண்டும். எமக்கு எதிர்ப்புக்கள் கூடும் போதே எம் மனம் வலுப்பெறுகின்றது.

அப்படி எம்மனம் வலுப்பெற்ற நிலையில் எம் கரங்கள் கட்டுண்டு கிடக்கப்போவதில்லை. அந்த நிலையில் நாம் யாருக்கும் பயப்படக்கூடாது. மிகவும் அமைதியுடனும் தெளிவடைந்த நிலையிலும் எம் மனதை பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்.

பிறருக்குப் பலவிதமான அறிவுரைகளை அள்ளிவழங்கும் எழுத்தாளர்கள் தம்வாழ்வுக்கும் அதனைமருந்தாக்கிக்கொள்ள வேண்டும். எம்நெஞ்சை நிதானமாக்கினால்தான் நிதானமான மிகவும் காத்திரமான வரிகளை எம்மால் உருவாக்கமுடியும்.

உருக்குலைந்த நிலையில் நாம் இருந்தபோதும் உருப்படியான காரியங்களை எம் மக்கள் மேற்கொள்ளும் அளவுக்கு எமது எழுத்துக்கள் அமைய வேண்டும்.

எமக்கு ஒருமுறை தோல்வி வரலாம் அதற்காக எம் எழுத்துக்களையே நாம் எழுதாமல்விடலாமா? ஒரு எழுத்தாளனின் வெற்றிக்கு வித்திடுவது அவனது தோல்வியே. படிப்படியாக எமக்கு வெற்றி வந்தால் அதனால் எமக்குப் புதிய திருத்தங்கள் ஏற்பட வழிபிறக்காது. தோல்விகள் எம்மை அணுகும்போது எம் மனம் ஒரு தெளிவுபெற்ற சிந்தனையோடு செயல்படவேண்டும். அப்படி நாம் செயல்பட்டால் எம் உள்ளத்துள் புதையுண்டு கிடக்கும் மேன்மையான உயிரோட்டமுடைய கருத்துக்கள் பிறப்பெடுக்கின்றன. இதனை ஒரு சிலர் உணர்வதில்லை. ஒரு முறை தோல்வி வந்தால் தம்மைத் தாமே தாழ்த்தியும். எனக்கு இது சரிவராது என்றும் அதனை அப்படியே விட்டு விடுகின்றனர்.

எது எப்படி இருந்த நிலையிலும் எழுதத் துணிந்த கரங்கள் தோல்வி கண்டு தமது எழுத்தாற்றலை இடை நிறுத்தக்கூடாது. எமக்கு வரும் ஏமாற்றங்களைக் கூட ஏற்ற மிகு கவிதையாக்கும் வல்லமையை எமக்குள் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் எம்மிடமுள்ள திறமைகள் வெளிப்படும். எமக்குள் இருக்கும் ஆற்றலை எம்முடைய உயரிய சிந்தனையால் வெளியுலகுக்குப் பயன்தரும் விதத்தில் வெளிக்கொண்டுவருவோம் எனில் நாம் பலபேருடைய மனங்களில் நிலையாக இடம்பிடிக்க முடியும்.

எம்முடைய உள்ளத்துணர்வை வெறும்பொழுது போக்காக நினைத்து எழுதாமல் அடுத்தவரின் வாழ்வுக்கு வலுவூட்டும் உரமான வரிகளாக அமைப்போம்.

சு.சிவாஜினி.

# சமூக ஒன்றுதிரட்டல் மூலம் கிராமியக் கல்வியை மேம்படுத்தல்

கல்வியை மையமாக்கி முன்னேற் பாடாக, ஊக்குவிப்பையும் முன்னேற்ற உதவியாளர்களின் மாற்றத்திற்கான முகவர்களினையும் திரட்டி பயிற்சியளிப்ப தாகவே ஒன்றுதிரட்டல், பயிற்சி சார்ந்த முறையியல் (Methodology) கிராமிய மேம்பாட்டில் கவனம் செலுத்துகின்றது. கிராமிய மேம்பாட்டுத் திட்டங்களில் மக்களின் பங்களிப்பை வலியுறுத்தும் ஒரு அணுகுமுறையாகவே சமூக ஒன்று திரட்டல் பற்றிய அறிமுகம் சார்ந்த முன்னேற்றம் அமைகிறது. மேம்பாடு என்ற செயற்பாட்டின் மூலம் பெறப்படும் பயன்கள் கல்வி அனுபவங்களாக கிராமத்தின் சாதாரண மக்களையும் நேரடியாகச் சென்றடைய வேண்டும். மேலும் அவை அவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய தாகவும் இருக்கவேண்டும். மக்கள் வேறு, கல்வி மேம்பாடு வேறல்ல. மேம்பாட்டின் முன்னேற்றப்படிகளை நாளாந்த வாழ்க்கை முறையிலிருந்துதான் உணர்ந்துகொள்ள முடியும். அவ்வாறாயின் எத்தகைய வழிமுறை மூலம் இது இலகுவாகவும் விரைவாகவும் சாத்தியப்படலாம்?



i.குறிப்பிட்ட கிராமியக் கல்விக்குரியவர்களையும், நுழைவாயில் புள்ளியையும், சூழலையும் இனம் காணுதல்.

ii.செயற்பாடுகளை ஆழப்படுத்துவதுடன் கிராமியக் கல்வி அமைப்புகளைக் கட்டி எழுப்புதல்.

iii.மனச் சான்று சார்ந்த நுண்ணுணர்வை மேம்படுத்தல்.

iv.ஆற்றலையும் மூலதன திரட்டுதலையும் கட்டியெழுப்புதல்.

v.கல்விசார் ஊக்குவிப்புத் திட்டங்கள் சார்ந்த அனுபவங்களை வழங்குதல்.

vi.கல்விசார் நடவடிக்கைகளை விஸ்தரித்தல்.

vii.கீழ் மட்ட ஊக்குவிப்பாளர்கள்/மாற்றத்திற்கான முகவர்கள்/இயைவாக்க ஊக்குவிப்பாளர்கள் ஆகியோரைப் பயிற்றுவித்தல்.

viii.நுண்ணுணர்வு மேம்படுத்தப்பட்ட ஆதரவமைப்பை ஈடுபடுத்தலும் மீள் நெறிப்படுத்தலும்.

ix.பங்குபற்றாளர்களின் மேற்பார்வை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது.

சமூக ஒன்றுதிரட்டல், சமூக நடைமுறைகளை கீழ்மட்ட கல்வி நிலைமையிலான மாணவர்களிடையே கட்டியெழுப்பி ஆதரவு அமைப்புகளோடு இணைத்தல் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்கு கள அனுபவத்தினடியாகவும், கள ஆய்வினடியாகவும் கற்றல் இன்றியமையாததாகின்றது.

கிராமியக் கல்வி சார்ந்தவர்கள் மாற்றத்திற்கு தாமாகவே முன்னெடுக்கும் நடவடிக்கைகள்தான் பங்குபற்றும் மேம்பாட்டு நிகழ்வின் சாராம்சமாகும். இங்கு கிராமியக் கல்வியை அந்தச் சமூகம் சார்ந்தவர்களே அறிவு பூர்வமாக மாற்றங்களை ஏற்படுத்த விழைபவர்கள். அவர்கள் தமது கல்வியின் கீழ் நிலையையும், பொருளாதார நிலையினையும், வாழ் நிலையுடன் ஒப்பிட்டு மேம்படுத்தத் தீர்மானிக்கின்றனர். இதன் எடுகோள் யாதெனில் இச் சமூகம் சார்ந்தவர்கள் படைப்பாற்றல் மிக்கவராக உணரப்படுவர் என்பதாகும். தமது கல்வி வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வல்லவர்கள். இந்தப் படைப்பாற்றல்களை அவர்கள் செயற்படுத்துவதற்கு சமூக நிகழ்வுத் தொடர்புகள் பெரும்பாலும் அவர்களுக்கு வாய்ப்பளிக்க மறுக்கின்றன. மேம்பாடு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமானால் இக்கிராமிய மக்களின் கல்வி, பொருளாதாரம் சார் படைப்பாற்றல்கள் விடுவிக்கப்படவேண்டும்.

மரபு ரீதியான "மேலிருந்து கீழ் அபிவிருத்தி மாதிரிகள்" கிராமிய மக்கள் கையாலாகாதவர்களாகவும், பிறரில் தங்கி வாழ்பவர்களாகவுமே கருதப்படுகின்றார்கள். இவ் மேம்பாட்டு நோக்கின் எடுகோள் யாதெனில் கிராமிய மக்களுக்கு அறிவுத் தளம் இல்லையென்றோ அல்லது அவர்களினறிவு விஞ்ஞானத்திற்கு புறம்பானதோ/பொருத்தமற்றதோ என்பதேயாம். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை சிறுபிள்ளைக்குப் புகட்டுவது போல் அமையவேண்டுமென்பதே கருதுகோள். இது அவர்களின் மென் உணர்வுகளைப் புண்படுத்தி அபிவிருத்தி என்பது வெளியிலிருந்து கொண்டுவரப்படவேண்டும் என்றதொரு மாயையை உண்டாக்குகின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், தன்சானியா போன்ற பல நாடுகளில் இவ் அணுகுமுறையானது சிறப்பான முறையில் கையாளப்பட்டு, வெற்றியளித்து வருகின்றது. இவ்வெண்ணக்கருவுடன் தொடர்புபட்டதாக சமூக ஒன்றுதிரட்டுனர் (Social Mobilizer), சமூக ஒன்றுதிரட்டல் படிமுறைகள் (Social Mobilization process), மக்களுடன் ஒருங்கிணைதல் (Integration with the people), சமூகத்தைப் படித்தல் அல்லது ஆய்வு செய்தல் (Social investigation), தற்காலிகத் திட்டம் வகுத்தல் (Tentative planning) போன்ற பல எண்ணக்கருக்களும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

கல்வி மேம்பாடு எனும் பெயரிலே தற்பொழுது பல்வேறுபட்ட நடவடிக்கைகள்/திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் தொடர்பான தேவையைக் கண்டறிதல் (Need assessment), திட்டமிடல் (Planning), அமுலாக்கல் (Implimentation), கண்காணித்தல் (Monitoring), மதிப்பீடு செய்தல் (evalu tion), போன்ற அனைத்துச் செய்முறைகளிலும் மரபு ரீதியான அணுகுமுறைகளே கையாளப்பட்டு வந்திருக்கின்றன.

[illegible] நிலையில் உள்ள கிராமியத் தொ[illegible]ள சமூகத்தவர்கள், நாட்டின் யுத்த சூழ்நிலையால், தமது அடிப்படை வசதிகளையெல்லாம் இழந்த நிலையில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வாழ்கின்றனர். வலுவிழத்தலும் எல்லைப்படுத்தப்பட்டமையும் முக்கிய காரணிகளாகக் காணப்படுகின்றன. இந்நிலையில் கல்வி சார் நடவடிக்கைகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவதற்கோ, தமது புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களை அறிந்து வளர்ச்சி (growth), முன்னேற்றம் (Progress), மேம்பாடு (Development) போன்ற திட்டங்களில் அடியெடுத்துவைத்து தம் உரிமைகளை நிலை நாட்டுவதற்கோ சிந்தனைகளைத் தூண்டுபவராக வில்லை.

கிராமியக் கல்வியில் யதார்த்தத்தைப் பகுத்தாராயும் ஆற்றல் அச்சமூகத்தவர்க்கு உண்டு. நடைமுறையிலுள்ள அனுபவமான கல்வி நிலைமைகள் அடிப்படை அறிவு, வயதிற்கேற்ற விதமான ஆளுமை வெளிப்பாடு, ஆற்றல்களை அறிதல், தாம் சார்ந்த சூழல் பற்றிய அறிவு, முன்னேற்றகரமான ஆக்கபூர்வமான சிந்தனைகள் யாவும் தாமாகவே தமது நிலையை மாற்றுவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகக் கருதலாம்.

கல்வி பற்றிய விமர்சன பூர்வமான சிந்தனைக்கு கிராமியக் கல்வீ சார்ந்த சமூகத்தவருக்கு, சமூக ஊக்குவிப்பாளர் உதவுவதோடு அவர்கள் வாழும் சமூக, பொருளாதார யதார்த்தத்தை பகுத்தாராய

**மாதங்கி**

துணையாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் பெரும்பாலான ஏழைமக்களின் உற்பத்தி மிகத் தாழ்வான நிலையிலேயே உள்ளது. அத்துடன் அவர்களுடைய உற்பத்தியாற்றலும் வருமானமும் நுகர்வும் கீழ்நிலையிலுள்ளதோடு தாம் உற்பத்திசெய்யக் கூடிய மேலதிக (Surplus) சிறு தொகையைக் கூடத் தம்முடன் தக்கவைக்க முடியாதுள்ளது. எனவே இந்த யதார்த்தத்தை உள்ளதை உள்ளவாறே அவர்களுக்கெடுத்துரைத்து அதனை ஆராய்வதற்கு தூண்டுவதனூடாக தமது ஏழ்மை நிலையை புரிவதற்கு வழிகோலவேண்டும்.

கிராமியக் கல்வியில் நியமக் கல்வியை, விழுமியக் கல்வியை, தொழிற் கல்வியைப் புகுத்தும் திட்டமானது சுய மேம்பாட்டு முறைமைகளுக்கான தேடுதல் முறைமையாக அமையவேண்டும். தம் கீழ் நோக்கிய ஏற்புத்தரங்களினின்றும், வாழ்வாதாரங்களினின்றும் கையாள்வதற்கான சாத்தியப்பாடுகளையும் யதார்த்தத்தை எவ்வாறு மாற்றலாம் என்பதனையும் அவர்கள் உணரத் தொடங்குவர். மாற்று வழிகளைக் கண்டறிவதோடு எந்தளவிற்கு வெற்றியளிக்கும் என்பதையும் நுணுகி ஆராய்வர். இச் சமயங்களில் தமது அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்துவதோடு வெளியிலுள்ள அறிவையும் பயன்படுத்துவர். ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் ஏதுவாகவுள்ள தடங்கல்களையும் ஆராய்வதற்கு வாய்ப்புண்டாகிறது. இதனையே இச் சமூகத்தவர்களின் 'திட்டமிடல் நிகழ்வுத் தொடராக' வர்ணிக்கலாம்.

கிராமியக் கல்வி சார்ந்த நிகழ்வுத் தொடரை நிறுவனமயப்படுத்தல் இன்றியமையாததாகின்றது. குழுக்களாகப் பிரித்தல், சமூக மன்றங்கள், நலன்புரி நிலையங்கள், சமூகசேவை நிறுவனங்கள் எனும் ரீதியில் செயலில் இறங்குவதற்கு இப்பயனாளிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய ஒழுங்குமுறையானது தமது நோக்கங்களை எய்துவதற்கான முறையாய் எவ்வாறு சிறப்புற அமைக்கலாம் என்பதை அவர்கள் தீர்மானிக்கவேண்டும். புதிய அமைப்புகளை உருவாக்கும் திறன், பழைய அமைப்புகளைக் கட்டியெழுப்பும் திறன் அவர்களையே சார்ந்தது. ஆண், பெண் எனும் பால் வேறுபாட்டினடிப்படையிலும் ஒற்றுமையாக தாம் சார்ந்த குழுக்களை ஒருமைப்பாட்டுடன் கட்டியெழுப்பலாம்.

கல்வி பற்றிய மேலான ஆர்வமின்றி வாழ்வதுடன், தாழ்வுச் சிக்கல் (Inferiority complex), குரல் கொடுக்க முடியாமை (Voiceless), அக்கறையின்மை, விதியே என வாழாதிருத்தல் (Culture of silence) போன்ற காரணங்களினாலும் எல்லைப்படுத்தப்பட்டுள்ள இம் மக்கள் தாம் சுரண்டப்படுகின்ற நிலைமைகளை புரிந்து கொள்ளாது தங்கி வாழ தலைப்பட்டிருக்கின்றனர். எனவே இவ்வாறு வலுவிழந்து, எல்லைப்படுத்தப்பட்ட மக்கள் புனர்வாழ்வு பெற்று, மேம்பாட்டுப் பாதையில் முன்னேறவேண்டுமெனில் முதலாவதாக அவர்கள் தமது நிலை குறித்து விழிப்புணர்வு (Awareness) அடைய வேண்டியது இன்றியமையாததொன்றாகும்.

இத்தகைய கல்விசார், பொருளாதார, சமூக மேம்பாட்டுப் பாதையில் முன்னேறுவதற்கு வறுமையைப் பாதுகாக்கின்ற, தங்கியிருத்தலை ஊக்குவிக்கின்ற, தற்சார்புத் தன்மையைத்தடுக்கின்ற அணுகுமுறைகள் பயன்படமாட்டா. எனவேதான் பாதிக்கப்பட்ட வறிய மக்களை ஒழுங்கமைத்து அவர்களை மேம்பாட்டில் பங்குபற்றச்செய்யும் சமூகஒன்றுதிரட்டல் முறைமையானது தாக்கமுள்ள தற்சார்புடைய அணுகுமுறையாகவும் கிராமிய மேம்பாட்டு முயற்சிகளின் அவசியமான மூலக்கூறாகவும் இனங்காணப்பட்டுள்ளது.

தமது கல்விசார்ந்த உரிமையை அறிவதோடு அதன் பூரணத்துவத்தையும், வளங்களின் பயன்பாடுகள் மூலம் ஈட்டிக்கொள்வதில் தன்முனைப்புடன் செயற்படுதலாகும். செயற்பாட்டுடன் கூடிய விரிவாக்க வளங்களுக்கு எடுத்துக்காட்டு விரிவாக்க சேவைகள், கடனுதவி வசதிகள், ஆற்றல் பயிற்சி அடித்தள அமைப்பு வசதிகள், இந்தக் கட்டத்தில் இவர்களது சொந்த வள அடித்தளம் பொருளாதாரத் திட்டத்துடனும் வல்லமையுடனும் மேம்படுத்தப்படுகின்றது.

(மீகுதி அடுத்தவாரம்)

# காரசாரம்

# மழைக்காலமும் மனிதர்களும்

மழைக்காலம் மிகமோசமாக உள்ளது. வழமையை விட இவ்வருடம் பெருமழை. கடும் இருள், குளிர் என்பவை கூடுதலாகவே உள்ளன. இந்நிலையில் மக்கள் தத்தம் அலுவல்களைச் செய்யவும், வேலைகளுக்குப் போகவும் பெரும் சுமையை அடைகின்றனர். எந்தப் பக்கம் இருண்டாலும் மழைவரும். திடீரென வெளிக்கும். திடீரெனப் பெய்யும். எவராலும் தமது வேலைகளைத் திட்டமிட முடியவில்லை. இதைவிடக் குறித்த நேரத்தில் வேலைக்குச் சென்றேயாகவேண்டிய மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள்.

கடைக்காரர்கள், சந்தைக்காரர், பாடசாலை மாணவ மாணவியர் எனக் குறித்த வேலைக்குச் செல்லும் நபர்கள் எனக் காலை ஏழுமணி முதல் ஒன்பது வரையில் தெருக்களில் சாதாரணமாகவே ஒரு பரபரப்புக்காணப்படும். போக்குவரத்து நெரிசல், அதற்குள் தமக்குத்தான் ஏதோ வெட்டிப் புடுங்கும் வேலை இருப்பது போல் முன்னே செல்லும் வாகனங்களை முந்துவதற்காக காது செவிடுபட வாகன ஒலி எழுப்பும் மகராசர்கள், மகராணிகள், போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவுக் காவற்றுறையினரின் தடை ஒழுங்கில் கூட நாலு சில்லு வாகனங்களின் இரு புறமும் உள்ள சிறு இடைவெளிக்குள் புகுந்து புகுந்து நெரியும் இருசில் உந்துருளிக்காறர், அவர்களுக்கும் இடையில் வரும் ஒரு சொட்டு இடத்தையும் நிரவும் மிதி வண்டிக்காரர் என படு மோசமான நிலை காணப்படும்.

இதே நிலை, மத்தியானம். ஓ... மத்தியான பொழுது காலைக்கும் மாலைக்கும் இடையேயான மத்தியானப் பொழுதிலும் பன்னிரண்டு முதல் இரண்டரை, மூன்று மணிவரை இருக்கும். இப்போதும் முக்கிய சந்திகளில் போக்குவரத்து ஒழுங்கமைப்பும் பயணிகளின் ஒழுங்கீனமும் இருக்கும்.

மீண்டும் மாலை நான்கு முப்பதுக்குப் பின் மதியம் ஆறுமணிவரை இதேபோன்ற ஒழுங்கும் ஒழுங்கீனமும் இருக்கும். (மதி தோன்றும் காலமே, மதியம். உதாரணம் மாசில் வீணையும் மாலை மதியமும்...) அப்போது கூடச் சந்திகளில் சற்று அடைத்துவிட்டு திறந்து விடும் வாகன வெள்ளம் கட்டுக்கடங்காமல் குபீரெனப் பாய்வதைக் காணலாம்.



இப்போது நடைபெறும் மாரிகாலச் சூழலானது பயணிகளைத் தேக்கும் வேலையைத் தொடர்ந்து நேரகாலமற்றுச் செய்கிறது. வீதியில் செல்லும் போது திடீரென மழை வந்தால் அருகில் உள்ள கட்டடங்களுள் நிற்கவேண்டும். வேகம் கூடிய வாகனங்களில் குடையுடன் செல்வது சாத்தியமில்லை. மேலே போட்டுக் கொள்ளும் மழை ஆடைகள் தரமானவையாக வருவதில்லை. எனவே தங்கித்தான் ஆகவேண்டும். மழைத் தூறல் விட்டதும் பழைய படி வாகனங்கள் பயணிகள் என வீதிகள் களை கட்டி விடுகிறது. நேரத்தைக் கட்டுப்படுத்தி எதையும் செய்ய முடியவில்லை. எனவே பொழுதிருக்கும் போதே வேலை முடிவதில்லை. வீடுகளுக்குத் திரும்பும் போது பகல் இரவாகி விடுகிறது.

எம்மில் அதிகமானவர்களின் நிலை இதுதான். இன்றைய காலச் சூழலில் சூரிய உதயம் காலை ஆறே காலுக்கும், அஸ்தமனம் ஐந்தே முக்காலும் ஆகும். மழைமேகம் ஐந்தரைக்கே முழு இருளைக் கொண்டு வருகிறது. அதன் பின்னர் தமது இல்லிடங்களுக்குச் செல்வோர் போக்கு வரத்தின் எந்த விதிகளையும் கடைப்பிடிப்பதில்லை. வீதிகளோ ஏராளமான குண்டும் குழியுமாக மாறிவிட்டதுடன், தார்ச்சாலைகளின் இருபுறமும் முக்கியமான பெருந்தெருக்களில் கூட மண்ணரித்துச் சென்று விட்டது.

தார் சாலைக்கும் பக்கத்து மண்தரைக்கும் அரையடி முதல் ஓரடிக்கும் கூடுதலான பள்ளம் விழுந்துள்ள இடங்கள் அதிகம். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலங்களுக்கும் வீதிக்கும் இடையே கொட்டிய மண் இறுக்கமின்றிப் புதைய ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் இரவுப் பயணம் சாதாரணமாக இருந்ததை விட இருமடங்காக உயர்ந்துள்ளது. இரவில் முன்வெளிச்சம் பாய்ச்சும் வாகனங்களில் ஒளியை உயர்த்தவும் குறைக்கவுமான அமைப்பு நிச்சயம் பொருத்தப்பட்டிருக்கவேண்டும். முன்னே வரும் பயணிகள் கண்ணைப் பொத்திக்கொண்டு நிற்கும்படி வாகனமோட்டுவோர் தொகை மிக அதிகம். மிதிவண்டிகளில் நிவாரணப் பொருட்களையோ, மனைவி பிள்ளைகளையோ, நண்பர்களையோ சுமந்து செல்லும், ஒருவரோ, தனியே செல்லும் ஒருவரோ கூச வைக்கும் ஒளியில் கண்ணைக் குறுக்கிக்கொண்டு வந்தால் அவ்வொளி அவரைக் கடந்ததும் வலப்புறமாக அவருடைய திசைகாட்டி இழுக்கும். இது பார்வை நரம்பின் தூண்டல் இசைவாகும். அறிவொளி கொண்டு சமாளித்தாலும், கடந்து சென்ற வாகனத்தின் பின்புறத்தில் அடிபட்டு விபத்துக்குள்ளாவது நேரிடும்.

குறிப்பாக பாரஊர்தி, உழவுயந்திரப் பெட்டி என்பனவற்றைக் குறிப்பிடலாம். எங்கே உங்கள் கண்களை மூடிக்கொண்டு சுமார் ஒரு நிமிடம் நேராக நடந்தும் பாருங்கள் வலப்புறமாக இழுக்கும் கால்கள். வாகனங்களின் வேகம் நிமிடத்துக்கு என்னவோ கடப்புக்கான செக்கனில் கணக்கைப் பாருங்கள்.

எனவே இரவில் கடூரமான ஒளி வெள்ளத்தை பாய்ச்சியபடி முன்னேறும் ஒரு வாகனத்துக்கஞ்சி பாரத்துடன் வரும் ஒரு உந்துருளியோ, மிதிவண்டியோ பாதையிலிருந்து சட்டென ஒரு அடி ஆழமான தரையில் இறங்குவதைக் கற்பனை செய்து பாருங்கள். இறங்குமிடம் சதுப்பாகவும் இருந்துவிட்டால்...

நம்மைத்தவிர மற்றவர்களைப் பற்றி ஏன் நினைக்கிறோமில்லை. அசட்டுத்துணிவில் வாகனமோட்டுதல் குற்றம். இப்படி வாகனமோட்டுவதால் ஏற்படும் விபத்துகள் சாவைச் சந்திக்குமானால் அது கொலைதான் வேறல்ல. அண்மையில் இன்னுமொரு விதமான வாகன விபத்து ஏற்படுகிறது.

ஒரு வழக்கு. இரு இளைஞர்கள் ஒரு உந்துருளியில் சென்றனர். நல்ல உணவு, சிறிதளவு மதுபானம், ஓய்வற்ற உழைப்பின் பின் தேவைதான். என்னால் இவ்வளவுதான் முடியுமெனில் அவ்வளவு வேலைதான் செய்யவேண்டும். அதற்குமேலும் பணம் வருகிறது என்பதற்காக முயலக்கூடாது. இதனை வள்ளுவரும் "பீலிபெய்சகடும் அச்சுறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்" என்றார்.

மயிலிறகைத்தான் ஏற்றினாலும் அளவுக்கதிகமாக ஏற்றினால் வண்டியின் அச்சிற்றுப் போய்விடும். அப்படியிருக்க மனித மூளை எப்படி. அந்த இளைஞர்கள் மணிக் கணக்கில் வேலை செய்பவர்கள். எனவே காலை வன்னியிலும் மாலை முகமாலைக் கப்பாலும் வேலை. மத்தியானத்துக்குப்பின் தமது வேலையை முடித்து விட்டு "பொயின்ரு மூட முன்" முகமாலைக்குப் போக, மோட்டார் சைக்கிளில் பயணம். இளவயதானாலும் கணனி உழைப்பு, கண்ணுக்குள் அசதி. முகமாலை கடக்கும் வேகம் அதேசமயம் எதிரில் ஒரு பாரஊர்தி.

அவ்வூர்திச் சாரதியின் கண்ணில் எதிரே வரும் உந்துருளியின் தடுமாற்றம், சந்தேகத்தை ஏற்படுத்தவே அவர் தன் வாகனத்தை சட்டென நிறுத்திவிட்டார். ஆனால் வந்த உந்துருளியோ, அப் பாரஊர்தியில் பயங்கரமாக மோதி வீழ்ந்தது. இருவருக்கும் நல்லசேதம். உந்துருளிக்கும் காயம். பாரஊர்திச் சாரதி வாகனத்தை செலுத்தியிருந்தால் ஒருவர் நசுங்கி உயிரிழந்திருப்பார்.

இருவரும் உறக்கத்தில் வாகனமோடினார்கள் என்பது விசாரணையில் வெளிவந்தது. எப்போதும் எல்லோருக்கும் இயல்பாக நேரிடும் தவறு இது. சாதாரணமாக ஒருபயணி வாகனத்தில் ஏறிச் சற்று நேரத்தில் நித்திரையாகிவிடுகிறார். சாரதி ஒருவரே உறங்காத மனிதர். இவர்களுக்கும் உறக்கம் வரும் என்பதற்கு பாதை தவறிய வாகனங்களே சான்று. மழைக் காலம் இன்னும் மோசமானது. இங்கு கடும் வேகமாக வாகனங்களை ஓட்டுவதும் சகஜம்.

அடுத்த மழை வருவதற்குள் குறித்த இடத்தை அடையவேண்டிய தேவை அனைவருக்கும் உண்டு. வேகக்கட்டுப்பாட்டு அறிவிப்புப் பலகைகளை யாரும் மதிப்பதில்லை. திடுதிப்பெனக் காவல்துறையினர் எங்காவது தமது கருவிகளுடன் பதுங்கி நின்றால் அதைக் கடந்து செல்லும் வாகனச் சாரதி நல்ல மனதுடன் எதிரில் வரும் வாகனத்துக்கு 'ஹெட்லைற்'றைப் போட்டு எச்சரித்து விட்டுச் செல்வதும் நடைமுறையில் உண்டு.

காவற்றுறையினருக்கு உங்கள் வேகத்தை கட்டுப்படுத்துவதில் தனிப்பட்ட ஆசையெதுவும் கிடையாது. மாறாக நாளைக்கு விபத்து ஒன்றில் மாட்டிக்கொண்டு நீங்கள் அவர்களுடைய விருந்தாளியாக மாற, உங்கள் மனைவி பிள்ளைகள் வந்து பதற, கோடு கச்சேரியென்று அலைய, இதெல்லாம் தேவைதானா? அநியாயமாக பறிக்கப்பட்ட ஒருவருடைய உயிர் பெறுமதியற்றதா? அவருடைய உறவுகளும் இது போலத்தானே கதறுவர்.

இரவில் 'டிம்' மில்லாமல் ஒளி பெருக்கும் வாகனச் சாரதிகளுக்கு இந்தப் பிரச்சினையே இல்லை. வாகனத்தின் பின்புறத்தில் மோதி உயிரிழப்பவர் மீது குற்றத்தைச் சுமத்தி விட்டுத் தப்பிவிடுகின்றனர். அப்படியில்லாமல் காயமடைந்தால், சேதமடைந்தால் அது வெளிச்சத்துக்கே வராது. இருளில் தப்பிவிடுகின்றனர். "இவையென்ன ஓடினவர் ஓடினவர் தான் " ஆனால் மனச்சாட்சி? அதன் பின்னுள்ள முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் விளைவு. ங...என்ன...?

-மாயா-



## விசுக்விசுக் விசாலாட்சி

ஒருமாதிரி தேர்த்திருவிழா ஊர்வலம் எல்லாம் முடிஞ்சுதுடா? கடைசியில ஆரார் இனவாதங் கக்கினது கூடவெண்டு வாந்தியக் கிளறி ஏன்ரா பேதிய உண்டாக்க விட்டிட்டு நாங்கள் எங்கட அலுவலப் பார்ப்பம்.


ரெண்டு வேட்பாளங்களும் வீச்சரிவாளும் கையுமா ரோட்டில இறங்கப்போறாங்கள வேற யென்ன- காலச்சக்கரம் வேகமாய்ச் சுழன்றோடுதே தர்மம் வாடுதே. என்று உலகம் முழுக்கப் பிரச்சினை கிளம்பி ஊழிக்கூத்தாடுதடா? ஊருக்க வெடிக்கிற குண்டெல்லாம் புலியள்தான் கொண்டு வசந்ததெண்டு சொன்னவைக்கு. இப்ப உங்கால அல்-ஹைதா நல்லாக் கைகுடுத்திருக்கு- இப்பிடித்தான் அந்த நாளயில கருணாவை எங்களுக்குத் தெரியாது அவன் எங்கட குதிருக்க இல்லவே இல்லையெண்டு சொன்னவையும். எங்கட கட்டுப்பாட்டுக்க வந்து குண்டு வச்சு எங்கட தளபதிமாரை இலக்கு வச்சுக் கொண்டவையத் தெரியாதெண்டவையும். குப்பை கிண்டின வேகத்தில கொட்டிப் போட்டினம். உது தான்ரா சொல்லுறது.

"உப்பிட்ட பண்டமும் உண்மையுள்ள நெஞ்சும் தட்டி உடையாமத் தானா உடையும்" எண்டு.விடுதலைப்புலியளின்ர இயக்கத்தை பிளந்து விட்டது நான்தான் இல்லாட்டி உவையால என்ன செய்ய முடிஞ்சுது எண்ட ரணிலாருஞ்சரி. மகாசேனவக் காட்டிக்குடுத்த துரோகி ரணில் எண்டு சொன்ன மகிந்தருஞ்சரி தாங்களே தங்கட பல்லைக் குத்தி தங்கட மூக்கில வைச்சு காட்டியிருக்கினம் வேற யென்ன. ஆனால் தமிழருக்கு இவை புதுசாக் காட்டத் தேவையில்லையெடா. அந்த நாளயில உவன டி.எஸ். சேனநாயகா பதவிக்கு வரக்கு முதலே ஒரு திட்டம் போட்டவனடா இலங்கைத்தீவு பிரித்தானியன்ர கையில இருக்கயுக்கயே ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தேழுலேயே குடியேற்றத்தில சிங்களவரை தமிழற்ர பகுதிக்க கொட்டித் திட்டம் போட்டவனடா. பிறகும் சுதந்திரம் வரக்க எங்களப் புறிச்சு விடெண்டு எங்கடயள் கேட்டுதே.

அதுகள் தங்கட கதிரையை கவனமாக் காப்பாத்திப் போடத்தானே அந்தரப்பட்டதுகள். இப்பவும் வமிசந்தப்பாம் சங்கரியார் வெளிக்கிட்டிருக்கிறாரடா. ஜேவீப்பீகாறன்ர தலைக்கனம் தெரியாம பிரசசினைய என்னெண்டு தீர்க்கலாமெண்டு யோசினை சொல்லிவிட்டிருக்கிறானடா. இப்ப இவன்ர பிரச்சினை ஆரோடயெண்டாலும் ஒட்டவேணும். அவ்வளவு தான். முக்கியமாக டக்ளசருக்கும் இந்தப் பிரச்சினை வந்திட்டுது. அப்பிடியிருக்க தமிழினத்துரோகியளின்ர சங்காத்தம் இவைய எங்க கொண்டே விடப்போகுதெண்டு இருந்து பாரன். வேண்டாத மாமியார் கைபட்டாலுங் குற்றம் கால்பட்டாலுங் குற்றம் எண்டமாதிரி புலியளெங்கயும் முடுகினாலும் காணும்.தனகுறாங்கள். தனகுறாங்க ளெண்டு ஒரே பிராது. தாங்கள் இவளநாளுஞ் செய்த தெல்லாம் யோக்கியமான காரியங்களே. நீயென்னத்தச் சொல்லு- உவங்கள் எங்கடா மாறுறது.

அவரை போடத் துவரையே முளைக்கிறது. ஐரோப்பிய ஒன்றியமும் ஏதோ புலியள் திரியுறதாலதான் தங்கட கொண்ட முதல் நட்டமாப் போகுதெண்டு பாறணிச்சவை. இப்ப எலிசபெத் மகாராணிக்கும் கொலை மிரட்டலாம். ஹ்கும் பின்ன சிரிப்பு வராம என்ன? பிரித்தானியாவுக்கயும் இந்தியாவுக்கயும் ஆனவாகில பயங்கரவாதத்தை இல்லாமப் பண்ணிப்போடத் தெரியாமக் கிடந்து தவிக்கினம். ங. பயங்கரவாதமெண்டா அது ஏன் வருது. நோய் நாடி, நோய்முதல் நாடி, வாய்நாடி வாய்ப்பச் செயலெண்ட வள்ளுவர் சொன்னதும் மறந்தே போச்சினம். அமுக்கிப்பிடிச்சா வெடிச்சுப் போகும். வேற யென்ன? அவனாரோ கையால கிழிக்கிற பனங்கிழங்குக்கு ஆப்பு வல்லூட்டியெல்லாந் தேடித்திரிஞ்சமாரி- எடேய் அவனவன் சுயமாய் வாழ விட்டிட்டுப் போங்கோவன் பிறகேன் சுய நிர்ணய உரிமை எண்டு வச்சிருக்கிறியள். உங்களோட வாழ ஏலாதெண்டா விவா கரத்து வழங்கிறதுதான் முறை.

அதை விட்டிட்டு ஒண்டாய் இருப்பம் ஒண்டாய் இருப்பம். எண்டா கதையா? படமா? பாப்பம். இனி புதுக்கணக்கன் சேதி என்னண்டு. அரசியல் அரசியல் எண்டு காலத்தக் கடத்தாம எங்களுக்கு ஒரு அந்தஸ்த தந்தது இந்தப் படைப்பலம்தான். எங்கட பாட்டை நாங்கள் பாப்பம். உடம்பில தெம்பிருக்கு உள்ளத்தில வலுவிருக்கு - ஏன்ரா மற்றவனுக்கு அடிமைப்பட்ட சீவியத்தை.



## சிறுகதை

# வாயில் காப்போன்

தையிட்டி அ.இராசதுரை

"தெற்பை..! உன்னோடு இந்த நேரம்... இந்த மாறுவேடத்திலை வந்து... கதைப்பது... யார் என்பதை... சற்று விநாடிப்பொழுதில்... நீ... அறிந்துகொள்வாய்...!? இந்த... ஜெகதலம்... இராச்சியத்தின்... மாமன்னன்தான்... நான்..!!?! சற்று பயப்பிடாதே... அப்பனே...! உனக்காக... இந்த ராச்சியத்தின் மேற்பதவிகளும்... ராஜவெகுமதிகளும்... காத்திருக்கின்றன..!! உனது... இல்லாள்... எனது ராச்சியத்தின்... அந்தப் புரத்தின், பிரதம சேடி..!! அவளுடைய, ராஜசேவை... என்னை, மிகவும்... கவர்ந்துகொண்டது..! உயிராய்... ஈர்த்துக் கொண்டது..!! உனக்கும்... அவளைவிட்டால்... வேறுமார்க்கமில்லை..!? எனக்கும்... அவளை விட்டால்... வேறு வழியில்லை..!!?? எனது... பட்டத்துராணி, நோய்வாய்ப்பட்டுப்போனாள். அவள் நடைபிணம்...?!

எனக்குப் பின்னால் இந்த அரியாசனத்தை நிரப்ப... எந்த... வாரிசுமில்லை..?? எனது பட்டத்தவளோ... கெதியில் இறந்தும் போய்விடப்போகின்றாள்..?? என்னுடைய... பட்டத்தரசி யில்லாத... பாதிராச்சியத்தை நோய்வாய்ப்பட்டுப்போகும்... ராச்சியத்தை... எனது அரண்மனை வாயில் காப்போனாய்... ராஜ விசுவாசக் கடமைபுரியும்... நீயும்... எள்ளளவேனும்... விரும்பமாட்டாய்..! பொறுத்துக்கொள்ளவும்மாட்டாய்...! என்பதுவும்... யாமறிவோம்..!!?

இனி உன்னுடையவளே... என்னவளாய்... மாறப்போகின்றாளாம்..!?! என்னுடைய... பட்டத்தரசியாகப் போகின்றாளாம்..!! இதுவே... இந்த... ஜெகதலம், ராச்சியத்தின் மகத்தான... மாறாத முடிவான... தீர்ப்பு..???!

இந்த ராச்சியத்தின் ஒரு... கௌரவப் பிரஜையான... நீ... இந்த ராஜவம்சத்தீர்ப்பை... இறைவனின் தீர்ப்பாக... சிரம் தாழ்த்தி தலைவணங்கி... ஏற்றுக்கொள்வாய்... அப்பனே..!??

இந்த ராஜதீர்ப்பின் வெளிச்சம்... உனக்குள்ளேயே... அதிபிரகாசமாய்... எரியட்டுக்கும்...!? உன் மனைவி பாஞ்சாலிக்கும், இந்த வெளிச்சம்... கசியக்கூடாது..?? எந்த... எறும்பிற்கும்... அது... தெரியக்கூடாது..??

இன்று தொடக்கமாய்... நீ... இந்த... அரண்மனையின், வாயில்... காப்போன் மட்டுமல்ல... உன்னுடைய "வாயிற்கும்காப்போனாய்..." இருந்துகொள்வாயாம்...???

அந்த அதிகாலை... நேரத்தில்... ஜெகதலம் இராச்சியத்தின் அரண்மனை வாயிற்காப்போர்களான தெற்பையும், சாமுண்டியும்... அரண்மனை, வாசலில் அங்குமிங்குமாக மாறி மாறி நடந்து... வாயிற்காவலில்... சூடெழுப்பிக்கொண்டிருந்தார்கள்...

மந்திரி..., பிரதானிகள்..., அரண்மனைச் சேவகர்கள்... உள்ளேயும்... வெளியேயுமாய்... வந்து... வந்து...



போய்க்கொண்டிருந்தார்கள்...

அரண்மனை எல்லையிலிருந்து... கண்ணிற்கு எட்டிய தூரத்தில் தெரியும் மயிலாற்றில்... இந்த ராச்சியத்தின் பெண் பிரஜைகள் நீராடப்போகும்... நீராடும்... நீராடிவிட்டுவரும்... அந்த குஷாலான காட்சிகளையெல்லாம் சாமுண்டி, தனது கடமையோடு சேர்த்துக் காவல்போட்டுக் காய்ந்து போயக் கொண்டிருந்தான்... "நிறைய மயில்கள், வந்து... இந்த... ஆத்திலை குளிச்சதாலை தான்... இந்தாத்துக்கு... மயிலாறெண்டு, பேர் வந்ததாம்..." என்று சாமுண்டி அந்தப் பெண் மயில்களையும் இந்த வண்ணமயில்களையும், மனதில்... போட்டுக் கொண்டே தெற்பையிடம் அலட்டு அலட்டென்று... அலட்டித் தள்ளியபோதும், தெற்பையின் க ம, மனம்... எந்த... மயில்களிலும், எடுபட்டுவிடாமலுக்கு, அது, தன், கடமையே... கண்ணாகிப்போயிருந்தது...!?

"இந்த... மடையனுக்கு... என்னதெரியும்..? உவன்... பெண்டாட்டியை... இந்த... ராஜா... கொண்டுபோகப் போறாராம்..?? அவள்... நாளைக்கு... பட்டத்தரசி..!! இவனுக்கு... பட்டைநாமம்... சாத்தி... அந்த... மடைராஜாவும்... அந்த... மடைராணியும்...!???" இதற்குமேல்... அவனால்... அவனுக்குள்ளேயே பேசிக்கொள்ளும் இந்தப்பேச்சு, இரும்புக் கரமொன்று, தொண்டைக் குழியில் இறுக்கிப்பிடித்து... நசித்துவிட்டாற்போல... அரண்மனை, நிலாமுற்றத்தில் தோன்றிய, மன்னர் முகம் கண்டு எல்லாம் போச்சுதேயாகிவிடுகின்றது...?? "உஷ்... மூச்...?? ராஜாவின்... காதில்... இது விழுந்தால்... நாளை... சூரிய உதயத்துக்குள்... சிரச்சேதம்...?? இல்லை... நாடுகடத்தல்..??"

மனதிற்குள்... சத்தமில்லாமல்... சம்பவித்துக்கொண்ட கதைப்பு... இந்த... ராஜாவின், கழுதைக் காதுக்குள்ளும்... விழுந்துதுதான் போய் விட்டதோ... என்று சாமுண்டி தன்னுடைய பேசக்கூடாத பேச்சை நினைத்து பயவெறியில் அந்தளவு தூரத்திற்கும்... போயேவிடுகின்றான். "உப்பிடிப் பயந்து சாகிற... உனக்கேன்ரா... இந்தக்காவல் வேலை... போடா போ... அந்தப்புரத்தில்... சேடி... வேலையைப் போய்ச்செய்து தொலை... போ...??"

உள்ளுணர்வினால் தன்னைப் புரிந்துவிட்ட ராஜகடமையில் மொத்த விசுவாசமாகச்செய்துவிடும் தெற்பையின் மனச்சாட்சி ராஜகம்பீரமாய் வெளிக்கிட்டு தன்முன்னால் வந்துநின்று இப்படியெல்லாம் பரிசுகெடுத்தி மானபங்கப்படுத்தி விட்டாற்போல சாமுண்டியின், கடமையை மடமையாக நினைத்து நடக்கும், செய்யும்... மனச்சாட்சி தளம்பி நின்றுகொண்டது..?

இந்தத் தெற்பையிடம்... இந்த ராஜா... சொல்லிவிட்ட அதே... புதிய பட்டத்தரசி கதையைத் தன்னிடமும் அதே தினத்தில் சொல்லி தான் சொன்ன... விடயத்தை தெற்பை... வெளியே... விடுகிறானோ... இல்லை பவுத்திரமாகத்தான் வைத்திருக்கிறானோ... என்று அவனை புத்தி சித்தியாக சோதித்துப்பார்க்கும்... அந்த மகாராஜ பொறுப்பும்... கடமையும்... "தன்னிடமே" ஒப்படைக்கப்பட்டுவிட்டதை மேற்பார்வைசெய்து 'செக்' பண்ணத்தானோ, மகாராஜா நிலாமுற்றம் வந்திருப்பார்..?

சாமுண்டியின், ராஜபரீட்சை ஆரம்பமாகிவிடுகிறது..!??

பலநாட்களாய் தொடர்ந்து நடைபெற்ற அந்த ராஜபரீட்சையின் முடிவுகளை தெற்பையின் சக, வாயிற்காப்போனான சாமுண்டி அந்த பௌர்ணமி இரவில் மாறுவேடத்தில் வந்த மகாராஜா ஜெகதலப் பிரதாபனிடம்... சமர்ப்பித்து விட்டவேளையாக... மகாராஜா ஜெகதல பிரதாபன், அதிர்ந்துபோய் நின்றார்...!? இந்த மகாராஜ, அதிர்ச்சி... எத்தகையது..? எந்தவகையது..?? என்பதனை, தெற்பையின் மீது... உட்காய்ச்சலாகிப் போன, சாமுண்டியின் குழம்பிப்போன மனதினால்... கண்டுபிடித்துக்கொள்ளமுடியவில்லை..?

பௌர்ணமி... வந்து போன... மூன்றாம் நாளிரவு... நேரம்... நடுநிசியாகிய.... வேளை... ஜெகதலம்... முழுவதும் அந்தப் பால் நிலவில்... குளித்துக்கொண்டிருக்க... குதிரைகளின் குளம்பொலிச்சத்தங்கள் தெற்பையின்... காதுகளில் வந்துறைக்க... அவன் பாஞ்சாலியும்... விறைக்க... மன்னனின் ஏவலாட்கள் அவன் குடிசையை நிரப்பிக்கொண்டார்கள்..!??

இந்த நேரத்தில் அட்டகாசமாக வந்து... தன்னுடைய அன்புக்கன வரை... ஏன் கொண்டு போகின்றார்கள்... எதற்காகக் கொண்டு போகின்றார்கள்.. என்ன குற்றத்திற்காகக்கொண்டுபோகிறார்கள் என்ற தாற்பரியத்தைப் புரிந்துகொள்ளமுடியாதவளாகி, பாஞ்சாலி... பஞ்சாய்... பறந்துகொண்டிருந்தாள்...??

இப்பொழுது... அந்த அரண்மனை வாயிற்காப்போன், ஸ்தானத்தில்... தெற்பை... இருக்கவில்லை...!? சாமுண்டியும்... தெற்பையிடத்துக்கு புதுசாய் வந்துசேர்ந்துகொண்ட, இன்னொருவனுமாய்... அரண்மனை... வாயிற்காப்போராக... மாறி மாறி... அங்குமிங்குமாய்... நடைபோட்டுக்கொண்டிருந்தார்கள்...!?? ராஜவிசுவாசத்தோடு... தன் கடமையைச் செய்துகொண்ட... தெற்பைக்கு மன்னன், ராஜ, மெய்ப் பாதுகாவலன் பதவியைக் கொடுப்பதற்காக, வைத்த "மாபெரும். பரீட்சையில்" தெற்பை, மாபெரும்... சித்திபெற்றுத் தேறிவிட்ட கதையைச் சொல்லிய சாமுண்டி, நஞ்சாய்ப் பறக்கத் தொடங்கினான்...???

தெற்பை... வாயிற்காப்போனாய் மட்டும் இருக்காமல்... 'தன்னுடைய வாயிலும்' காப்போனாகவே... இருந்துகொண்டமையை, அந்த புதிய வாயில்காப்போன் அந்த மன்னர் மெச்சிக்கொண்ட விதமாகவே தானும் மெச்சிக்கொண்டபோது... தன் மனதிற்குப் பிடித்துப்போகாதவர்களை அடுத்தவர் மெச்சுவதையும் கௌரவிப்பதையும் கொஞ்சமும் தாங்கும் மனமற்ற சாமுண்டி... தனக்குள்... ராஜதண்டனைபெற்று இந்த கௌரவ ராச்சியத்தைவிட்டே துரத்தப்பட்டுவிட்ட. ஒரு நாடற்ற அகதிப் பிரஜையாகிவிடுகின்றான்...???

# வேரிழந்த உறவுகளாய்

**ரமணன்**

அந்த மண்ணின்..... நினைவுச் சிதறல்கள் காளிமுத்துவின் மன அரங்கத்தில் மீண்டும்... மீண்டும் புதிய ஒலி எழுப்பி மன உணர்வின் நெருடல்கள் புதிதாய் முளைத்து இதயத்தில் வலி எடுத்து ஓய்ந்த போது,

அவன் கண்களை மூடி எவ்வளவு நேரத்திற்குத்தான் அமைதியாய் அனாதையாய் உட்கார்ந்துகொள்ள முடியும். கண்களைத் திறந்து நிமிர்ந்தான். அவன் கண்களுக்கு தனிமையாய் விடப்பட்ட அந்த முத்துவெளித் தோட்ட தேயிலை பசுமை படர்ந்து நிழலாய் தொலை தூர பசுமையாய்த் தெரிந்தது.

பனி படர்ந்து நின்ற அந்த தேயிலைச் செடியின் உயிர்ப்பில் அவனின் வியர்வையும் இரத்தம் கலந்ததாய் அவன் உழைப்பின் நிமிர்ந்ததாய் நின்றது. அவனால் கண்களில் பெருகி வந்த கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை.

அவன் பிறந்த காலம் தொட்டு அந்த மலைச் சரிவில் தகரத்தால் அடிக்கப்பட்ட அந்தச் சிறிய அறையினையும் தாய் முனியம்மாவின் கையால் சமைக்கப்பட்ட வேகியும், வேகாத புழுங்கல் அரிசிச் சோறும் அவளால் தினமும் தரப்படும் தேநீரின் சுவையும் அதில் வாய் நனைத்து உயிர்த்தெழும் தெம்பினையும் உட்சாகத்தையும் அவனால்.... நீள நினைந்து மறக்கமுடியவில்லை.

அந்த.... பச்சைத் தொப்பிக்காறங்கள்.... பெரிய றக் வண்டியில் வந்து அந்தத் தேயிலைத் தோட்டத்தில் குதித்தபோது மற்றவர்கள் வேடிக்கை பார்த்தது போல காளிமுத்துவும் அவன் அம்மா முனியம்மாவும் அப்பா பிச்சை முத்துவும் தங்கை சித்திராவும் வேடிக்கை பார்த்தார்கள்.

ஆனால்.... "நீங்கள் எல்லாரும் இருபத்தினாலு மணித்தியாலத்துக்குள்ள இந்தத் தோட்டத்தை விட்டு உங்கட பெட்டி படுக்கை சாமான்களை எடுத்துக்கொண்டு போயிட வேணும் புரியுதா''

என்ற அந்த முரட்டுக் குரலை மீண்டும் ஒருமுறை அவனால் மீட்டிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

பனிக்குளிர் அந்த மலைப் பிரதேசம் முழுவதும் ஆட்கொண்டது. அத்தோடு அவன் மனதை குடைந்தெடுக்கும் அவன் மாமன் மகள் சிவலெட்சுமியின் வஞ்சனை இல்லாத புன்னகை இவையனைத்தும்.... ஓர் தனி மனிதனாக அந்நியப்பட்ட பிரமையில் அந்தப் பாறையில் அமர்ந்திருந்தான் அவன்.

வான் நிலவும் அப்பாறையில் ஒளி வெள்ளத்தை பூசியபடி முகில் வாகனத்தில் ஏறிப்பயணம் செய்தபடி இருந்தான். கால ஓட்டத்தின் கணக்கையோ அதன் மாற்றத்தையோ கணக்கிட்டுப் பார்ப்பதில் அவன் இதுவரையும் காலத்தையும் நேரத்தையும் விரயப்படுத்தியது இல்லைத்தான்.

ஆனால் அவன் இன்று தன் மண் பிரிவிற்காய் ஆதங்கப்பட்டு நிமிர்ந்தபோது அந்நியப்பட்ட உணர்வு அவனை ஆட்கொண்டது.

குரல் எடுத்து கோவென அழவேண்டும் போல இருந்தது. இதயத்தில் துயரம் கிளை பரப்பி அவனை இழுத்துக் கொண்டது.

அந்த முத்து வெளித் தோட்டத்தில் இருந்து தன் பார்வையை அகற்ற முடியவில்லை. அவனால் தன்வீட்டு முற்றத்தில் நின்று ஆகாய நட்சத்திரங்களைப் பார்த்துப் பார்த்து தங்கையுடன் விளையாடியது. காமன் பண்டிகைக் கூத்தினை அசை போட்டு கலைவந்து ஆடுபவர்களையும் அவர்களின் பக்தி நிலையினையும் மனதில் போட்டு மகிழ்ந்து கொண்ட காலங்களை எண்ணி அவனிடமிருந்து வந்த ஏக்கப் பெருமூச்சு அந்தக் குளிர் காற்றுடன் துயரைப் பகிர்ந்து கொண்டது. வேரிழந்த உறவுகளுக்கு புதிய முடிச்சினைப் போட்டு மகிழ்ந்த காளிமுத்து இழந்த உறவையும் பிரிந்த மண்ணையும் அவனால் நினைக்காமல் இருக்கமுடியவில்லை.

அவன் உழைப்பை எருவாக்கி வளர்ந்த தேயிலைச் செடிகளின் பசுமை அந்த நிலவில் நிறமிழக்காமல் இருந்தது. ஆனால் அவைகளைத் தொட்டுத் தொட்டு மகிழ்ந்த கரங்களைப் பார்த்தான். அந்தரித்த அந்த உறவை உயிர்ப்பிக்க எண்ணி அந்த நீண்ட இரவின் மௌனத்துடன் கலந்திருந்தான்.

ஆம் அவன் நினைவுக்காய் புதிய எண்ணங்களுடன் அந்த வலுவான நினைவும் கலந்து கொண்டது. "அந்தக் கொத்மலைத் தோட்டத்தில் அந்தப் பையன் சிவதனுவை ஆமிக்காறங்கள் சுட்டுப்போட்டாங்களாம்.''

காளிமுத்து சிறுவனாய் இருந்தபோது அந்தச் செய்தி ஓர் சாதாரண செய்திதான். அதற்காக அவன் அனுதாபப்படவோ, ஆத்திரப்படவோ முடியாத வயது. அந்தச் செய்தி அவனைப் பொறுத்தவரை அன்று சாதாரண செய்திதான்.

ஆனால் இன்று அந்தச் செய்திக்காய் மனம் எத்தனையோ முறை அழுது ஓய்ந்து கொண்டது

எமக்கு உரிமை மறுக்கப்படுகிறது என்ற உண்மை அதன் பிரதிபலிப்பு புதிய உருவெடுத்து அவன் இதயத்தில் எழுந்தது.

சிவதனுவின் திடகாத்திரமான உடல் அவன் உருவம் மெல்ல...மெல்ல... புதிய வடிவம் பெறத் துடித்தது. காளிமுத்து இழந்த ஒன்றைப் பெறுவதற்காய் அவன் மனதில் ஏதோ ஒன்று ஆட்கொண்டபோது. சிவதனுவின் அந்த உரிமைக் குரல் அந்தக் கொத்மலையெங்கும் எதிரொலித்த உணர்வை காளிமுத்து புரிந்து கொண்டவனாய் வானத்தை ஒருமுறை அண்ணார்ந்து பார்த்தான்.

புரியாத பாசையில் ஏதோ சொல்லிக்கொண்ட பறவைகள் சத்தமிட்டு பறந்துகொண்டிருந்தன. எங்கோ ஓர் குரல், அவசரகாலச் சட்டம் நாடாளுமன்றத்தில் நீடிச்சிருக்காம் காளி அண்ணோய். என்ற யாரோ ஒருவனின் குரல் காற்றில் தேய்ந்துகொண்டிருந்தது.

காளிமுத்துவும் அந்த தேயிலைச் செடியின் ஊடே நடந்துகொண்டிருந்தான். கிழக்கு வானில் விடிவெள்ளியும் நிமிர்ந்து நின்றது. நாளைய விடியலுக்கு கட்டியம் கூறி காளிமுத்து தேயிலைச் செடிக்குள் மறைந்து போனான். விடியல் சேவல் கூவியது பலமுறை.

# பறக்க முடியாக் கணங்களின் வலிப்பு

இறக்கைகளுக்குள்
ஏதோ "பசை" ஒட்டிக்கொண்டதாய்
பறத்தலை நிறுவமுடியாத
இயலாமையோடு சோர்கிறேன்.

எனது பறத்தலே
"இருத்தலின்" அடையாளம்
எனினும் என் குஞ்சுகளைப்
பொத்திப் பொத்தி வளர்த்த
எனது சிறகுகள் ஏதோவோர் வலியினில்
இயலாமையோடு அடித்து ஓய்ந்தன.

இப்போதெல்லாம் என் குஞ்சுகள்
தம் சிறகுகள் விரித்து
உயர உயரப் பறக்கின்றன.

நான் தீனி தேடத் திராணியற்றதை
அறிந்தும்...
தங்கள் குதூகலத்தில்
என்னை மறந்தன "குஞ்சுகள்"

நாள்கள் ஒவ்வொன்றும்
என்னிலிருந்து ஏதோ "ஒன்றை"
ஒவ்வொன்றாய் கழட்டுவதாய்
உணர்வொன்று ஊறி எழுகிறது.

எனது பறத்தல்
எனது குதூகலம்
எனது... எனது...
இருத்தல் என்று...
எல்லாமே சுருங்கிச் சுருங்கி
நெருங்கும் இப்பொழுதுகளில்
வெறுமை வெம்மையொன்று
என்னுள் அமர்கிறது.

கண்கள்மெதுமெதுவாய்க்
கூசி... மங்குகிறது.
"தூரத்தில்" என் குஞ்சுகள்
பறப்பது மட்டும்
தற்செயலாய் பார்வைக்குள்!

த.அஜந்தகுமார்.

# எங்கள் இருப்பு உறுதியாகும்

அந்த ஏரியும் வயல்வெளியும்
என் பாட்டனுக்குச் சொந்தமானது
நான் மிதித்து நடந்து
தவழ்ந்து ஓடி விளையாடிய
பசிய புல்மேடைகளும்
சிதைந்து கிடக்கும் கட்டடமும்
எங்களுக்கென இருந்தவை தான்
யுத்தம் பிய்த்துப் போட்டபின்
ஏரியும் வயல் வெளியும்
புல்மேடைகளும்
காக்கிகளின்
பாதுகாப்பு
அரண்களாகின.
எங்கள் இருப்பு அசைக்கப்பட்டு
பிடுங்கி எறியப்பட்டு
பல ஆண்டுகள் ஆகியும்
அவர்கள் அங்கேதான் இருக்கிறார்கள்.
எப்போது எங்களுக்காகுமென
எட்டிப்பார்த்து ஏங்குகிறோம்
வாலாட்டிகள்
எம்மைப் பார்த்து உறுமுகின்றன
அவைகள் எங்களுக்காகக்
குரல்கொடுப்பதாக
குரைக்கின்றன.
கதைகளில் கரடிகள் வந்து போகின்றன
அவைகளுக்கு எச்சில் இலைகள் போதும்
எங்களுக்கு
பொறுமை கரைகிறது.
வெறுமை நினைவுகள்
வெம்மையடைகின்றன
குறி தவறாத விழிகளில்
எரிதணல்கள் சூளையிடுகின்றன.
பூகம்பம் மையம் கொள்கிறது
மண்ணும் விண்ணும்
அதிரும், ஒருநாளில்
எங்கள் இருப்பு உறுதியாகும்.

முருகு பாரிமகன்

# சொற்சிலம்பு-113

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ர | று | ங் | வ | ளா | அ | நோ |
| மா | கு | லி | பா | ந் | மி | ல |
| கா | ரி | தி | தே | னி | ண் | ப |
| நெ | னா | ப | லி | ளை | கீ | இ |
| மூ | ட் | தா | ஷி | ா் | லி | து |
| சா | ர் | ய | க் | ஸ் | கி | ரு |
| ப் | உ | கோ | ன் | சி | த் | பி |

## சொற்சிலம்பம் -111 இன் விடைகள்

01. நெருப்புக்கோழி.

02. எவரெஸ்ற்.

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

## சொற்சிலம்பம் - 111 இன் பரிசுக்குரியவர்

இ.பிரதீபா, தரம்10,
மு/தேவிபுரம் அ.த.க
பாடசாலை.

## சொற்சிலம்பம் - 111 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ஆறுமுகம்,
இரட்டை வாய்க்கால்,
முல்லைத்தீவு.

02. அ.எழில்மதி, தரம்-$5^A$,
கிளி/இராமநாதபுரம் ம.வி,
இராமநாதபுரம்.

03 சி.லகிசன்,
இல:01 கொலனி,
மாங்குளம்.

04. ந.டயாழினி, தரம்-$9^B$,
யா/கொடிகாமம்
திருநாவுக்கரசு ம.வி.

05. இ.விஸ்வலிங்கம் சித்திரா,
தச்சந்தோப்பு,
கைதடி.

06. ஜெ.யதுர்சிகன், தரம்-$5^A$,
கிளி/இராமநாதபுரம் ம.வி,
இராமநாதபுரம்.

07. க.தனரோகினி,
3ஆம் கண்டம்,
வலதுகரை, கற்சிலைமடு.

08. T.விதுர்சன், தரம்-$5^C$,
மு/ஸ்ரீசுப்பிரமணியவித்தியாசாலை,
புதுக்குடியிருப்பு.

01. உயிர் எழுத்துக்களில் மூன்று?

01) ........................................

02. 13ஆவது சார்க் மாநாடு எங்கு நடைபெற்றது?


01) ........................................

சொற்சிலம்பம்-113
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ........................................

முகவரி
:-........................................
........................................
........................................

நி.கஸ்தூரி,
தரம்-$7^B$.





# இளைய நாதம்

# பச்சோந்தி

பச்சோந்திகளில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இரு இனங்கள் உள்ளன. உண்மையில் பச்சோந்தி என்று குறிப்பிடப்படுவது தெற்கு ஆசியா, தெற்கு ஐரோப்பா, ஆபிரிக்கா, மடகாஸ்கர் முதலான இடங்களில் காணப்படுபவைகளே. இது ஸ்குவாமாட்டா வரிசையில் கெமலியானிடே குடும்பத்தைச் சேர்ந்தது. மற்றொன்று அமெரிக்கப் பச்சோந்தி என்று குறிப்பிடப்படும் பச்சை அனோல் (GREEN ANOLE) இது இகுவானிடே குடும்பத்தைச் சேர்ந்தது.

வெப்பநிலையில் ஏற்படும் மாற்றம், ஈரப்பதம், ஒளி பச்சோந்தியின் உணர்ச்சி நிலை ஆகியவற்றினால் இந்த இரண்டு இனங்களின் உடல் நிறமும் கரும் பழுப்பு நிறத்திலிருந்து வெளிர் பச்சை நிறம் வரை மாறக்கூடியது.

பச்சோந்தியில் 3 செ.மீ நீளத்திலிருந்து 60 செ.மீ நீளம் வளரக்கூடிய 80 இனங்கள் உள்ளன. இது மற்ற பல்லி இனங்களிலிருந்து பெரிதும் மாறுபட்டது. மரத்தில் வாழ்பவை. மரமேறுவதற்கு வசதியாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளும்படியான கால்களும் ஏறும்போது கிளையைச் சுற்றிப் பிடித்துக் கொள்ளும் படியான சுருண்ட வலிமையான வாலும் கொண்டது. ஊர்வனவற்றில் நாக்கை வாய்க்கு வெளியே வெகு தூரம் நீட்டி இரையைப் பிடிக்கக்கூடியது இது ஒன்றுதான்.

இதன் தலை சதுரமாகவும் சில சமயங்களில் நீண்ட கொம்பு அல்லது துருத்திகளைக் கொண்டிருக்கும். உடல் தட்டையாகவும் குறுகலாகவும் அமைந்திருக்கும். உடல் முழுவதும் சிறு மணி போன்ற செதில்களினால் போர்த்தப்பட்டிருக்கும். கண்ணிமைகளும் சிறு மணி போன்ற செதில்களினாலானவை. இதன் ஒவ்வொரு கண்ணும் தனித்தனியே இயங்கக் கூடியது. எனவே ஒரே சமயத்தில் இதனால் பல திக்குகளிலும் பார்க்க முடியும். உடல் நீளத்தை விட இதன் நாக்கின் நீளம் அதிகமாக இருக்கும். அதன் நுனி குமிழ் போலிருக்கும். இந்தக் குமிழ் பகுதி பசை போல் ஒட்டிக்கொள்ளும் தன்மை கொண்டது. இரையைப் பிடிக்க நாக்கை சுமார் 30 செ.மீ நீளம் வரை நீட்டக் கூடியது. பூச்சி கண்ணில் பட்டதும் குறிபார்த்து நாக்கை நீட்ட அதன் குமிழ் முனையில் இரை ஒட்டிக் கொள்ளும். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் இவ்வளவும் நடந்தும் விடும். இதன் இரை பூச்சியினங்களே.


ஆண் பச்சோந்திகள் தங்களுக்கென்று ஒரு எல்லையை வகுத்துக்கொண்டு அந்த எல்லையிலேயே இருக்கும். மற்ற ஆண் பச்சோந்திகள் அந்த எல்லைக்குள் வந்தால் விரட்டிவிடும். இதன் நுரையீரல்களின் பல கிளைகள் (காற்றுப் பைகள்) உடலின்




பல பகுதிகளில் உள்ளன. எதிரிகளைப் பயமுறுத்த காற்றை உள்ளிழுத்து காற்றுப் பைகளை விரியச் செய்யும். அப்போது இதன் உடல் காற்றடித்த பலூன் போல் ஊதிப் பெருத்துக் காணப்படும். பகல்- இரை தேடியான இது மெதுவாக ஆடி அசைந்து கொண்டு செல்லும்.

இதன் தோலடியிலுள்ள கண்ணறை போன்ற நிறமி செல்களே இதன் நிற மாற்றத்திற்குக் காரணம். பச்சோந்திக்குக் கோபம் ஏற்படும்போது நரம்புகள் மூலமாக அச் செய்தி இந்தச் செல்களை வந்தடைந்து தூண்டல் புரிய உடல் கரிய நிறம் பெறுகிறது. பயம் பரபரப்பு காரணமாக தூண்டல் ஏற்படும்போது மங்கலாகவோ மஞ்சள் புள்ளிகளாகவோ மாறுகிறது. வெப்பமான சூரிய ஒளி இதன் நிறத்தைக் கடுமையாக்குகிறது.

# பஸ் பயணம்




நன்றி:- பன்டேடைம்ஸ்



# விட்டுக்கொடுத்து வாழ்வதே வாழ்க்கை

எம்முடைய குடும்பம் எவ்வளவு வசதி வாய்ப்புக்களோடு இருந்தபோதும் அங்கு அமைதி நிலவாத போது வசதிவாய்ப்புக்கள் இருந்தும் என்ன பயன்.

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்போடு வாழவேண்டும். மண் குடிசையில் இருப்பினும் நாம் புரிந்துணர்வோடும் விட்டுக்கொடுப்போடும் வாழ்ந்தால் அதுவே பல அடுக்குமாடிகளுக்கு ஒப்பாகும். கை நிறையப் . பணம் இருப்பது முக்கியமல்ல, எம் மனம் நிறைந்த அமைதி வேண்டும். அப்போது தான் எம் குடும்பம் குதூகலிக்கும்.

எத்தனையோ பேருடைய வாழ்க்கையை பார்க்கிறோம். சிலபேருடைய வாழ்க்கை இப்படியல்லவா இருக்கவேண்டும் என்ற நினைப்பை எமக்கு உருவாக்கிறது. ஆனால் சிலபேருடைய வாழ்க்கையைப் பார்க்கும்போது அட என்ன மனிதர்கள் என்ற வெறுப்பான ஒரு கசப்பான உணர்வை எம்முள் ஏற்படுத்துகிறது. வீட்டுக்கு வீடு வாசல்ப்படி என்பதைப் போல் பிரச்சினை இல்லாக் குடும்பம் இருக்கவே முடியாது. ஆனால் எந்நேரமும் எதற்கெடுத்தாலும் சண்டையோடு வாழும் கணவன் மனைவியை எப்படி எடைபோடுவது.

கணவன் கதைத்தால் மனைவியும் சேர்ந்து வாய்க்கு வந்தபடி வாதாடி குடும்பமே ஒரு வழக்கு மன்றம் என்ற நிலைக்கு உருவாகக் காரணகர்த்தாக்கள் ஆகிவிடுகின்றனர். நிலைமை இப்படி மாறும் போது அவர்களின் பிள்ளைகளின் பாடு மிகவும் பரிதாபம். அவர்களுக்கு உரிய நேரத்தில் உணவு கிடைப்பதில்லை. பாடசாலைக்குக் கூட நேரத்துக்குப் போகமுடியாத நிலை ஏற்படுகிறது.

நாம் வாழும் வீட்டில் நான் பெரிது நீ பெரிது என்ற அகம்பாவ நினைப்பு கணவன் மனைவி இருவருக்கும் இருக்கக்கூடாது. மனைவி கதைக்கும்போது கணவன் விட்டுக்கொடுத்தால் தனக்கு கௌரவக் குறைவு என்று சில கணவன்மார் நினைப்பது தவறு. கணவன் மனைவி இருவரும் சரிவர புரிந்துணர்வோடு வாழாமையே பிரச்சினைகளுக்குக் காரணம்.

**மண் குடிசையில் இருப்பினும் நாம் புரிந்துணர்வோடும் விட்டுக்கொடுப்போடும் வாழ்ந்தால் அதுவே பல அடுக்குமாடிகளுக்கு ஒப்பாகும்**

நாம் ஒன்றைமட்டும் சிந்திக்கவேண்டும். ஒரு கை தட்டினால் சத்தம் வருமா? அது போன்றே எம் குடும்பமும். ஒரு கை கணவன், மறுகை மனைவி இரண்டு பேரும் தனியாக எப்படி பிரச்சினையை பெரிதுபடுத்தமுடியும். இரண்டு பேரும் சேர்ந்து பிழையான முறையில் வாயில் வந்த வார்த்தைக் கற்களை கொட்டித் தீர்ப்பதால்தான் கணவன் மனைவி இருவருடைய மனங்களும் ஆறாத காயப்பட்டுப்போகின்றன.

எங்களுக்குள் ஆத்திரத்தை அடக்குவதால் எத்தனையோ விடயங்களை சாதிக்கமுடியும். நாம் கோபங்கொண்டு தீப்பிளம்புகளானால் குடும்பத்திலுள்ள எம் பிள்ளைகளும் அதில் அகப்பட்டு அழியும் நிலை ஏற்படும்.

எம்மிடம் பணம் இல்லாது விட்டாலும் எம்முடைய மனம் கோடி இலட்சங்களுக்கு மதிப்பான அமைதியான நில்லயில் இருக்க வேண்டும். எம் வாழ்க்கை என்பது காற்றடித்த பலூன் போன்றது. அதனை நாம் பக்குவமாக பாதுகாக்கவேண்டும். முள்ளில் பட்டு ஓட்டைவிழுந்தால் பலூன் எப்படி இருக்குமோ, அதுபோன்றே எம் குடும்பமும்.

நாம் கணவன் மனைவியாக பேரளவில் இருந்தால் போதாது. அதன் புனிதத்தன்மையை அறிந்து அனுசரித்துப் போகவேண்டும். நாம் வாழும் குடும்பத்தில் கணவன் மனைவியான இருவருமே முக்கிய பங்கு வகிப்பவர்கள். தலைமையே தலைகீழானால் அதன் கீழ் வாழும் பிள்ளைகளின் நல்லதொரு எதிர்காலம் என்பது கேள்விக்குறியே. மனைவி என்பவள் மலையளவு பிரச்சினைகள் வரும்போதும் அதனை தன்னுடைய புத்திசாலித்தனமான செயற்பாட்டினால் உள்ளங்கைகளில் அடக்கத் தெரியவேண்டும்.

எவ்வளவு தான் எமக்குப் பிரச்சினைகள் இருப்பினும் எமது நிலையில் இருந்து நாம் தளம்பக்கூடாது. ஏனெனில் எம்முடைய குடும்பம் மனையாளாகிய எம்மை தாங்கியே நிற்கிறது, நாம் நிலை தடுமாறினால் எம் குடும்ப நிலை என்னவாகும் என்பதை ஒவ்வொரு மனையாளும் சிந்தித்து நடக்கவேண்டும்.

**சு.சிவாஜினி**

## கடலைப் பருப்புப் போளி




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| கடலைப் பருப்பு | -500 கிராம் |
| சீனி | -200 கிராம் |
| கோதுமை மா | -500 கிராம் |
| ஏலப்பொடி | -அளவாக |
| உப்பு: மஞ்சள்தூள் | -அளவாக |
| நெய் | -1 மே.க |

செய்முறை:-

★கடலைப்பருப்பை ஊறவைத்து அவித்து ஈரலிப்பு இல்லாது சுண்டவிட்டு இறக்கவும்.


★சீனியையும் சேர்த்து அம்மியில் அரைத்து அதனுடன் ஏலம், உப்பு இவற்றைச் சேர்த்துக் குழைத்து அளவான உருண்டைகளாக்குக.

★மாவை உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து றொட்டிப் பதத்தில் இறுக்கமாகக் குழைத்து சிறிய உருண்டைகளாக்கி மெல்லிய வட்டமாக தட்டவும்.

★பருப்பு உருண்டையை நடுவில் வைத்து மாவினால் இழுத்து மூடி மாபூசிய தட்டில் வைத்து உருளையினால் உருட்டி வட்டவடிவில் தட்டைகளாக்கவும்

★நெய் பூசிய தோசைக் கல்லில் வைத்து இருபக்கமும் வேகவிட்டு எடுக்கவும்.

## வீடு



# குழந்தைகளின் முன்னேற்றம் உங்கள் கைகளில்

விளைச்சல் சிறப்பாய் அமைவதற்கு விதை மட்டும் நன்றாக இருந்தால் போதாது. விளை நிலமும் பராமரிப்பும் பாதுகாப்பும் அவசியமென்பதனை நாமறிவோம். இது போன்றுதான் பிள்ளைகள் வளர்ப்பும் இருக்க வேண்டும்.

“எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில்.... என ஆரம்பிக்கும் வைரவரிகளில் “அவை நல்ல வராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினில் தான் என மிக அழகாய் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஒரு பிள்ளையின் ஆரம்ப கால பராமரிப்பாளராய் அன்னையேயிருக்கின்றாள் என்பதில் எந்தவொரு சந்தேகமுமில்லை. இதனால் தான் தாயைப்போல பிள்ளை என கூறியிருக்கிறார்கள். பிள்ளையானது சற்று வளர்ச்சியடைந்த பின்னர் தான் பிறர் அரவணைக்கக் காணலாம். பிள்ளையினை தன் கருவில் சுமந்து பெற்றேடுத்துவிட்டால் போதாது. நல்ல மனிதனாய் வளர்த்தெடுக்க வேண்டும். இதில் ஓர் இலக்காய் இருத்தலும் வேண்டும்.

கருவில் சுமந்து பெற்றெடுப்பவள் அன்னைதான். ஆரம்ப காலத்தில் அன்னையின் அரவணைப்பு அதிகமாயிருக்கும். அவ்வப்போது அன்னையின் இயல்புகள் அனைத்தையும் குழந்தை ஏற்படுத்துகின்றதென கூறப்படுகின்றது. பாலூட்டி தாலாட்டி சீராட்டி வளர்ப்பதில் அன்னை தான் முதல் வழிகாட்டியாகவுள்ளாள். இதன் பின்னர்தான் பிறர் வழிகாட்டியாகின்றனர்.

பிள்ளைகள் ஆரோக்கியமாக பிறர் பார்வைக்கு நல்லமனிதர்கள் எனவிருக்கும்படியிருந்தால் மட்டும் போதாது அவர்கள் படிப்பினிலும், சக துறைகளிலும் நற் குணங்களையும் நீங்கள் உட்புகுத்த வேண்டும். இப்படியோர் எண்ணத்தோடு நீங்கள் இருந்தால் போதாது அதன் பின் நடைபோட வேண்டும்.


ஒரு பிள்ளை தன் அன்னையின் கைகளால் உணவுண்பதனைப் போல் பிறர் ஊட்டும்போது உண்பதில்லை. சில அன்னையர் வேலைப்பளு அதிகமாகும்போது வீட்டில் இருக்கும் பாட்டி பூட்டியுடனோ விட்டுவிடுவதுண்மை. ஆனால் அவ்வாறு வளர்க்கின்ற பிள்ளை ஒரு ஆரோக்கியமான பிள்ளையாக வளர்வதில்லையென விஞ்ஞான ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சில பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லும்போது பிள்ளைகள் மீதான அன்பு, பாசம், அவர்கள் மீதான அக்கறை சற்று குறைவடைந்து போவதனை காணமுடிகின்றது. உங்கள் வேலைப்பீடத்தில் அவ்வாறான வேலைப்பளுவோடு வீடு திரும்பினாலும் கிடைக்கின்ற நேரங்களில் அவர்கள் மீதான அக்கறை நல்லுறவினை ஏற்படுத்துவது சிறந்தது.

பிள்ளைகள் வளர்ச்சியடையும் போது மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பண்புடையவர்களாய் நல்ல ஆளுமையுள்ளவர்களாய் மாற்றியமைக்க வேண்டும். பிள்ளைகளுக்கு நல்லவிடயங்களை உட்புகுத்த வேண்டும். அதிகமாய் பிள்ளைகள் முதியவர்களுடன் அணுகிக் கொள்கின்றபோது அவர்கள் பழமை வாய்ந்த கதைகளை அவர்களிற்குக் கூறிக்கொள்வார்கள்.

பிள்ளைகளை நல்ல பண்புள்ளவர்களாக வளர்ப்பதில் பெற்றோரின் அணுகுமுறையும் முக்கியமாகும். சண்டை சச்சரவு இன்றி ஒற்றுமையாக வாழ்வதோடு பிள்ளைகளை உரிய நோக்கத்துடன் தமது போக்கினையும் நடத்தையையும் கூட மிகுந்த அவதானத்துடன் பின்பற்றல் அவசியமாகும்.

பிள்ளைகள் சின்னச் சின்ன குழப்படி செய்கின்றனவென எண்ணி தண்டிக்காதிருக்கக் கூடாது “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது” என்பார்களே அவர்கள் செய்கின்ற சின்னச் சின்ன திறன்கள் என்றாலும் அதனை பெரிதாய் எண்ணி அவர்களை வாழ்த்துவதோடு இன்னும் அவர்கள் திறன் பெற முயற்சி செய்ய உட்சாகமளித்தல் வேண்டும். பிள்ளைகளின் மனம் மென்மையானது, தூய்மையானது. அதுக்கு என்ன செய்வது என்ன செய்யக்கூடாது என்று தெரியாது.



தண்டனை விதிக்கத்தான் வேண்டும். ஆனால் எவ்வாறு என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். அவர்களோடு கூடியிருக்கும்போது கும்மாளம் செய்யும்போது அவர்களிற்கு ஒவ்வொன்றாய் எடுத்துக்கூறல் நல்லது. இதன் மூலம் அவர்கள் திருந்திக்கொள்ள சந்தர்ப்பமுண்டு.

பெற்றோரிடமிருந்து அன்பினையும் அரவணைப்பினையும் தம்மீதான அக்கறையினையும் எதிர்பார்க்கும் அவர்கள் மீது இவற்றினையூட்டுவதன் மூலம் பிள்ளைகளின் மனதினை சமநிலைகளில் வைத்துக்கொள்ள முடியும். பிள்ளைகளுக்கு சிறுவயதினில் நல்லவற்றை ஊட்டிவிட்டால் அவர்கள் வளர்ந்த பின்னர் தாமாகவுணர்ந்து நல்ல செயல்களை செய்ய முனைவார்கள். இல்லையாயின் சில வேளைகளில் நற்செயல்களை செய்ய நினைக்கக்கூடமாட்டார்கள்.

எனவே பெற்றோர் ஆகிய உங்களிடம் தான் பிள்ளைகளின் எதிர்காலம் தங்கியுள்ளது. முடிந்த வரையும் அவர்களோடு பின்நோக்கி நகர்ந்து அவர்களை முன்னேற்றுங்கள். “பிள்ளைகள் உங்கள் வாழ்வில் மகிழ்விப்பாளர்கள்” அவர்கள் மீது அன்பு (பாசம்) அரவணைப்பு, அக்கறை கொண்டு அவர்களை நல்ல மானிடர்களாய் நல்ல பண்பாளர் களாய் ஆளுமைமிக்கவர்களாய் வளர்த்தெடுப்பதில் நீங்களே வழிகாட்டியாக வேண்டும்.

**எஸ்.மதீஸ்**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்— 74**

பெயர்:.....................................................

முகவரி:...................................................

.............................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

உலா 59

# ஏ9 - ஏரம்பு


# எமது பலம்தான் எமக்கான வாழ்வைத் தரும்..!

வணக்கம் வணக்கம்! உங்களுக்கு ஒரு கேள்வி; இந்த ஐம்புலன்களிலையே மிக மோசமான புலன் எதெண்டு நினைக்கிறீங்கள்? எனக்கும் வடிவாய்த்தெரியேல்லை. இப்பத்தேய பொடியங்களைக் கேட்டால் கண் தான் எண்டுவாங்கள். எனக்கேதோ உந்த வாய்தான் மனிசருக்கு வில்லங்கம் போல இருக்குங்கோ!

சும்மா கிடவாமல் கண்டகிண்ட பாட்டுக்கு வாய்கொடுத்து வசமாய் வாங்கிக்கட்டிது. அதென்னண்டால் பிள்ளையள்; அண்டைக்கு முன் வீட்டுச் சின்னன் ஒண்டு ஒரு கொப்பி நிறைய கேள்வியளைக் கொண்டு வந்து தந்துவிட்டு, நாளையிண்டைக்கு வேணுமெண்டு சொன்னாள். நான் பார்த்தன், அதில முக்கால் வாசிக்கு எனக்கு சத்தியமாய் விடை தெரியேல்லை. உண்மையைச் சொல்றதில என்ன அவமானம் எண்டிட்டு விசயத்தைச் சொன்னன். "ஈ... அம்மாவைக் கேட்டால் பேசிறா..! அப்பாவைக் கேக்க நீ படிச்சு பெரிய விஞ்ஞானியாய் தானே வரப்போறாய். உதுகளை விட்டிட்டு அடுப்படியில போய் சட்டி பானையள் கழுவுறதைப் பழகு! எண்டு திட்டுறார். ஈ,.. ஈஈ... உங்களுக்கும் தெரியாட்டி நான் இனி பள்ளிக்கூடம் போகேல்லை... நான் அப்பா சொல்லிற மாதிரி எருமை மேய்க்கவே போறன்...", பத்து வீட்டுக்கு அங்கால கேட்கிற மாதிரி அழத்தொடங்கீட்டாள் பாருங்கோ!

இதென்னடா காலங்காத்தால கரைச்சலாய் கிடக்கிது. சொன்னாலும் கேட்கக்கூடிய நிலைமையில இல்லை. நானும் கையை விரிச்சால் பாவம் பிள்ளை சிலநேரம் உண்மையிலயே மனம் உடைஞ்சுபோய் எருமை மேய்க்கவே போயிடுவாள். தகப்பனும் ஒண்டுக்கும் உதவாத குடிகார எருமை எண்டதால, அந்த இனத்தில மகளுக்கொரு அனுதாபம் வரலாம். "எடியம்மாடி! மூஞ்சையை நீட்டிக்கொண்டு இருக்காமல் வீட்டை போய் மற்றப் பாடங்களைப் படியும்! நான் பின்னேரத்துக்குள்ளை தரப்பார்க்கிறன். ஆனால் ஒண்டு; நான் தாற விடையளைப் படிச்சு நாளைக்கு எனக்கு சொல்லாட்டி கொப்பி கிழிச்செறிவன். சும்மா ஆராவது எழுதித்தர கொண்டுபோய் சரிவாங்கிறதால ஒரு பயனும் இல்லை. விளங்கிப் படிக்கோணும்", எண்டு நான் சொன்னதுதான் தாமதம் ஒரு சாதிச்ச சிரிப்போட சின்ன பக்ரீறியா வீட்டை பாய்ஞ்சடிச்சுக் கொண்டு ஓடினாள்.

சரி பின்னேரம் தாறதெண்டு சொன்னனான், அதுக்குள்ளை குடுக்கோணும். மனிசராய்ப் பிறந்தவனுக்கு வாக்கு முக்கியம் பாருங்கோ! எங்களில சிலர் ஏன்தான் "ஓம், இல்லை" எல்லாம் உபயோகிக்கினம் எண்டிறதே எனக்கு விளங்கிறேல்லை. யதார்த்தத்துக்கு புறம்பான அரிச்சந்திரன், தர்மன் போன்ற வீடுவாசலுக்கு உதவாதவங்களைப் பற்றி இலக்கியம் படைச்சுக் கிழிச்ச எங்கட மத்தியில ஏன் "ஓம்" எண்டு சொன்னால் அதைச் செய்யாமல் காலத்தை இழுத்தடிக்கிறவை எண்டிறது விளங்கேல்லை. அப்பிடி நானும் இருக்கப்படாது எண்டு உடன நூலகத்துக்கு வெளிக்கிட்டிட்டன்.



நூலகத்தில தேவையான தரவுகளை எடுத்துப்போட்டு வெளிக்கிடிற நேரம்தான் பார்த்தன், வெள்ளைக்காரப் பொம்பிளை ஓராள் கனநேரமாய் தமிழ்ப் பத்திரிகையளை புரட்டிக்கொண்டிருந்தா. எனக்குச் சிரிப்பு வந்திச்சிது. இல்லை உவா படம் பார்க்க ஆசையெண்டால் ஆற்றையன் போட்டோ-அல்பத்தைப் பார்க்கிறதை விட்டிட்டு தமிழ் பத்திரிகையளைப் பார்க்கிறாவே! வில்லங்கம் பிடிச்ச என்ரை வாய் சும்மா கிடக்காமல் "Are you looking all the nice pictures there?" எண்டு படம் பார்க்கிறீங்களோ எண்டு கேட்டிட்டிது. அப்ப அவா "இல்லை 2 நாளாய் பத்திரிகை ஒண்டும் வாசிக்காதது தலைவெடிச்சிடும் போல இருக்கிது. அதுதான் நாட்டு நிலவரங்களை வாசிச்சறிஞ்சு கொள்ளிறன்", எண்டு தமிழில சொன்னா. எனக்கு படம் பார்க்கிறா எண்டு நான் நினைச்ச வெள்ளைக்கார ஓராள் உப்பிடி சுத்தமாய் தமிழ் கதைக்கிறதை கேட்க வெட்கமாய் போயிட்டிது.

அதிலையும் தவறாமல் பத்திரிகை வாசிச்சு விசயங்களை அறிஞ்சு கொள்ளாட்டி அவாவுக்கு தலைவெடிச்சிடுமாம். இஞ்சை எங்கட கனபேருக்கு நாளாந்தம் தினசரிகளுக்கு ஒரு 15 நிமிசமும், வார இறுதியில வாரப்பத்திரிகைகளுக்கெண்டு 2 மணித்தியாலமும் ஒதுக்க நேரமில்லையாம். அதுவும் வாசிப்பு மாசம் வேற ஒக்ரோபரில. ஆனால், சினிமாவுக்கு மட்டும் இரண்டரை மணித்தியாலங்கள் ஒதுக்கிறதுக்கு எப்பையும் நேரம் இருக்கும். அதாலதான் எங்கட நாடு இப்பிடியும், வெள்ளைக்காரன் அப்பிடியும்! அதைவிடுவம்! இந்த வெள்ளைக்காரப்பொம்பிளை கரும்புலிகளின்ரை தியாகத்தைப் பற்றி கட்டுரை எழுதிறாவாம். அதுக்காகத் தான் யேர்மனியில இருந்து வந்து நிக்கிறாவாம்.

முக்கியமாய் மேற்கில இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான அரசியல் முன்னெடுப்புகள் முனைப்புப்பெற்று வாற இந்தச் சந்தர்ப்பத்தில அல்கெய்தாவின்ர மனிதக்குண்டுத் தாக்குதல்களை கரும்புலிகளோட ஒப்பிட்டு நோக்கிற ஒரு பிழையான பார்வை அங்கை இருக்கிறதாவும், கரும்புலிகளின்ரை தனித்துவமான தியாகத்தை எடுத்துவிளக்கிறதுக்கு தன்னோட ஆய்வு கொஞ்சமாவது பங்களிக்கும் எண்டு தன்னோட கட்டுரையைக் காட்டினா.

மேலோட்டமாய் பார்த்த அளவுக்கு குறிப்பிட்ட நோக்கத்துக்காக தன்னை அழிக்கத் துணியும் அர்ப்பணிப்பு உணர்வு தமிழினத்தின்ர பாரம்பரிய பண்பாட்டு விழுமியமாகவும் இருந்திருக்கிது. சங்ககாலத்தில "வடக்கிருத்தல்" தொடங்கி தன்னை வருத்தி விரதம் இருப்பது உட்பட கன விசயங்களில வெளிப்படிற தமிழரின்ரை அர்ப்பணிப்பு உணர்வை குறிப்பிட்டுக் காட்டியிருந்தா. இத்தகைய கீழைத்தேச உணர்வுகளைப் புரிஞ்சுகொள்ளமுடியாத மேலை நாடுகள் தங்கட இயலாமையை வெறுமனே பிழையான கற்பிதங்களினூடாக நியாயப்படுத்தப் பார்க்கின்றன. உண்மையாய் பிள்ளையள் தொட்டதுக்கும் ஆ...ஊ...எண்டு பக்கம் பக்கமாய் எழுதிறனான்தான். ஆனாலும், எங்கட இனத்திட்டை இப்பிடியானதொரு தியாகப்பாரம்பரியம் காலம்காலமாய் இருந்ததெண்டதை ஒருநாளும் நினைச்சுப்பார்க்கேல்லை. அதுவும் அந்நியநாட்டொரு ஆள் சொல்லேக்கிளை இன்னும் பெருமையாய் இருந்திச்சிது.

அப்பிடியே கதைச்சுக் கொண்டிருக்கேக்கிளை எங்கட சனம் பரவலாய் நடாத்திற பொங்குதமிழ் நிகழ்வுகளை பற்றி அவாவிட கருத்தைக் கேட்டன். "புலிகளை தமிழ் மக்களிடத்தில இருந்து வேறுபடுத்தி தனியொரு அமைப்பாய் விளங்கிக் கொள்ள முயற்சிக்கிற தரப்புகளுக்கு, இங்கை இருப்பவர்களெல்லாம் புலிகள்தான் எண்டு எடுத்துவிளக்கிற நல்ல முன்னெடுப்புகள். நசுக்கப்பட்ட தமிழினத்தின் விடுதலைக்கான ஆவேசமும், ஆளணியும் தான் புலிகள்! எழுச்சிநாள் நடாத்தப்பட்டதில எல்லாம் பிடிச்சிருந்தாலும், ஒண்டேயொண்டு மட்டும் எனக்குப் பிடிக்கேல்லை", எண்டு சொன்னா.

"அப்பிடி என்ன பிடிக்காத ஒரு விசயம்?" "சத்தியப்பிரமாணம் எடுக்கேக்கிளை கையை நெஞ்சுக்கு நேர உயர்த்திப் பிடிச்ச விதம் தான்! அது ஹிட்லர் காலத்தில செய்யப்பட்ட சலூட். யேர்மன் உட்பட ஐரோப்பிய நாடுகள் சிலதில அப்பிடி சலூட் அடிச்சால் குற்றம். அதைத் தவிர்த்திருக்கலாம்" "சத்தியமாய் பாருங்கோ! நானும் ஹிட்லரைப் பற்றி ஒண்டு ரண்டு புத்தகங்கள் படிச்சிருக்கிறன். ஆனால், ஹிட்லர் காலத்தில எப்பிடி கையைத் தூக்கினவை? காலைத் தூக்கினவை எணடெல்லாம் என்க்குத் தெரியாது. எங்கட சனமும் வேணுமெண்டு அப்பிடிச் செய்யேல்லை. கற்பூரத்தட்டை அணைச்சு சத்தியம் செய்யிற நடைமுறை எங்களிட்டை இருக்கிது, உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். அதைத் தான் தட்டில்லாமல் மானசீகமாய் உறுதியெடுக்கேக்கிளையும் பின்பற்றினனாங்கள்".

"என்ன இருந்தாலும் குறை பிடிக்கிறதுக்கெண்டு காத்துக் கொண்டிருக்கிற தரப்புகளுக்கு இந்த விசயமே தீனியாய் ஆகிடுமல்லோ!" "நீங்கள் சொல்லிறதில நியாயம் இருக்கிதுதான்! ஆனாலும் நாங்கள் வேணுமெண்டு தெரிஞ்சு செய்யேல்லை. ஏன் உங்கட ஹிட்லர் (1933-1945) தன்ரை சின்னமாய் வைச்சிருந்த 'சுவாஸ்திகா' சின்னம், பல்லவர் காலத்தில இருந்து எங்கட பிள்ளையாரின்ரை கையில இருந்த அடையாளம் தானே! ஆரிய மேன்மையைப் பற்றிப் பேசின ஹிட்லர் நாலு திசைகளையும் குறிக்கிறதுக்கு ஏனாம் தென்னாசியாவில இருந்தொரு சின்னத்தை எடுக்கோணும்! சரி பலம் படைச்ச அந்த மனுசன் ஏதோ செய்திட்டிது எண்டதுக்காக ஐரோப்பாவில இருக்கிற பிள்ளையார் சிலையளுக்கெல்லாம் கையில வேற டிசைன் குடுக்கிறீயளோ? 12 லட்சம் இந்தியர் வாழிற இங்கிலாந்தில உதெல்லாம் நடக்கிற காரியமோ? ஆளாளுக்கு ஈழத்தமிழரெண்டால் ஏதோ மீன் பொரியல் கணக்குக்கு தொட்டதுக்கும் சட்டியில போட வந்திடுவினம்...", நான் கோவத்தில கெந்திக்கொண்டு போக அவா நான் சொல்லிறதுகளை குறிப்பெடுத்துக் கொண்டிருந்தா.

இதென்னடா கரைச்சலாய் கிடக்கிது எண்டு மணிக்கூட்டைப் பார்த்தன். சுவாரஸ்யமாய் கதைச்சுக் கொண்டிருந்ததில நேரம் போனதே தெரியேல்லை. ஐயையோ முன் வீட்டுக் கிருமிக்கு பின்னேரம் கொப்பி தாறதெண்டு சொன்னனான். கொஞ்சம் பிந்தினாலும் பேந்து எருமை மாட்டுக்கு ட்றைவராய் போயிடுவாள் பாவி எண்டு நினைச்சிட்டு கடைக்குப் போயிட்டு வீட்டை போவோமெண்டு சைக்கிளை உழக்கினன்.

பொறுங்கோ! பொறுங்கோ! எட எங்கட துரையர் போல கிடக்கு உதில நடந்துவாறது. "வணக்கம் துரையர்! கண்டு கனகாலம்" "வணக்கம் ஏரம்பர்! இந்த மண்ணில காலடி வைச்சு உங்களையெல்லாம் பார்க்கிறதில எவ்வளவு சந்தோசம்!", முகம் முழுக்க மகிழ்ச்சி பூரிக்க பதில் வந்திச்சிது. "அதுசரி 6 மாச விசா கிடைச்சதெண்டு சந்தோசப்பட்டனீர். இப்ப விசா முடிய முதலே இடையில திரும்பி வந்திட்டீர்!"


"பின்ன செய்தியளைக் கேட்க சண்டை தொடங்கப்போகுது போல தோன்றிச்சிது. எங்கட இனத்தைச் சீண்டிற சிங்களப்பேரினவாதத்தை உதுக்கு மேலையும் விட்டுவைக்கக் கூடாதெண்டு சனமெல்லாம் பயிற்சி எடுக்கிதுகள். என்ர விசா முடியும் மட்டும் நிற்க வெளிக்கிட்டு பேந்து சண்டை தொடங்கீட்டால், இஞ்சால வரேலாதெல்லே! என்ரை நாட்டுக்காக ஒண்டும் செய்யேலாமல் ஒதுங்க வேண்டி வந்திடும் எண்டு யோசிச்சிட்டுத்தான், உடன ரிக்கற்றை முன்னமாய் போட்டிட்டன்.

எங்கட நாட்டின்ரை விடுதலையைப் பெற்றெடுக்கிறதுக்கான போராட்டத்தில என்ரை வியர்வையோ, குருதியோ பங்களிக்காட்டி பேந்து நானென்ன மனுசன்! நீர் வேற நாளைக்கு நாடு கிடைச்சாப் பிறகு என்னை நொட்டை சொல்ல வெளிக்கிட்டிடுவீர்" தொடர்ந்து கதைச்சுக் கொண்டுபோன துரையரின்ரை கதை எனக்குப் பிடிச்சிது.

"ஏரம்பர்! உண்மையில நாங்கள் தான் அந்தக்காலத்தில போராடி சுதந்திரமான நாட்டை மீட்டு, எங்கட பிள்ளையளிட்டை ஒப்படைச்சிருக்கோணும். ஆனால், செய்யத் தவறீட்டோம். எங்கட சந்ததி அண்டைக்கு விட்ட பிழைக்கு வாழவேண்டிய வயசில சின்னனுகள் எல்லாம் இண்டைக்கு களத்தில நிற்கேக்கிளை, எங்களை மாதிரி வயசு போனவை ஒதுங்கி நிற்கலாமே! உந்தத்தடை போடிற மேற்கு நாடுகளைப் பற்றியொரு விசயம் கேள்விப்பட்டனான். பொஸ்னியாவில யுத்தம் நடந்தநேரம் சேர்பியப் படைக்கு எதிராய் சண்டைபிடிச்ச கொசோவா இயக்கமான UCK இல இணைய வைக்கிறதுக்காக 10 இற்கும் குறையாத ஐரோப்பிய நாடுகள் எந்தவித கடவுச்சீட்டு, விசா அனுமதியும் தேவையில்லை, எண்டு தங்கட நாட்டில தஞ்சம் கோரியிருந்த 10,000 வரையான கொசோவா ஆண்கள் யுத்தகளத்துக்கு போற போக்குவரத்து வசதியளை ஏற்படுத்திக் கொடுத்திது. மேற்குக்கு முரண்பாடான ரஷ்ய சார்பு சேர்பியரை எதிர்க்கிறதுக்கு முஸ்லிம் அல்பேனியர்களை கொசோவாவுக்கு பயண ஒழுங்குகளோடு அனுப்பியெடுத்த நாடுகள்தான் இண்டைக்கு வரவேற்பு மறுக்கிதுகள்.

சுதந்திரம் கிடைச்சு எங்கடை நாட்டையும் நல்லமாதிரி கட்டியெழுப்பினோமெண்டால் எல்லாரும் எங்கட பக்கம் சாய்வினம். 'பலம் தான் வாழ்வு' எண்டு தலைவர் சொன்னதின்படி நாங்களெல்லாரும் சேர்ந்து தமிழினத்தின்ரை பலத்தைக் காட்ட வேணும் பாரும். என்னமாதிரி எப்பை எல்லைப்படைப் பயிற்சிக்குப் போறீர்? 2 பேரும் சேர்ந்து போனால் பம்பலாய் இருக்குமெல்லே!

அதுக்கு முன்னால வாருமன், 2 இளநீர் அடிச்சிட்டுப் போவம்". எனக்கு பேசவராத அளவுக்கு சந்தோசம். என்னதான் இடைக்கிடை சின்னதாய் துரையரும் நானும் கதைவழிப்பட்டாலும், எங்கட இனத்துக்கொண்டெண்டு வரேக்கிளை எல்லோரும் ஒற்றுமையாய் எதுக்கும் துணியிற எங்கட இனத்தின்ரை தனித்துவத்தை நினைச்சுப் பார்த்தன். "மச்சான்! நீண்ட பயணம் களைச்சிருப்பாயடாப்பா. பையைக் குடு ! நான் கொண்டு வாறன்", எண்டு துரையற்றை bag எல்லாத்தையும் வேண்டித் தோளிலை கொளுவினன். அந்தச் சுமைகள் தோள்மூட்டை அழுத்தினாலும், அதில ஒரு சுகம் இருந்திச்சிது.



# நூல் நயம்

| | |
|---|---|
| நூல்: | பஞ்சாட்சரம் பாநாடகங்கள் |
| நூலாசிரியர்: | பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம். |
| வெளியீடு: | பொன்னெழுத்துப் பதிப்பகம், இணுவில். |
| விலை: | ரூபா 100.00 |

# பஞ்சாட்சரம் பா நாடகங்கள்

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டு ஓர் இளங்கவிஞராகப் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் ஈழத்து இதழ்களில் நவீன கவிதைகள் எழுதத் தொடங்கினார். தம்மை மட்டும் கவிஞராக அறிமுகம் செய்து பெருமைகொள்வது அவர் நோக்கமாக அமையவில்லை. இளங் கவிஞர்கள் அனைவரையும் அறிமுகம் செய்வதும் பெருமைப்படுத்துவதும் அவர் பணியாக அமைந்தது. 1961ஆம் ஆண்டில் இருபத்தொன்பது இளங் கவிஞர்களைச் சந்தித்து, அவர்களின் கவிதைகளைப் பெற்றுத் தொகுத்து, யாழ்.தமிழ் இலக்கிய மன்ற வெளியீடாக வெளிவரப் பெரும்பணி ஆற்றினார். கலைச் செல்வி இதழ் ஆசிரியர் திரு.சிவ.சரவணபவன் அவர்கள் இத்தொகுப்பைக் கவிதைச் செல்வம் என்ற நூலாகப் பதிப்பித்தார் பதிப்பாசிரியர் அவர்கள் "நம்பிக்கையுடன் கவிதைகள் புனையும் புதிய கவிஞர்களைக் கருக விடாது கைதூக்கிவிடும் சிந்தனையின் பலன்தான் கவிதைச் செல்வம் கவிதைத்துறையில் நம்பிக்கையுடன் முன்னேறிவரும் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் கவிதைகளைத் தொகுத்து தவினார்" என்று இந்நூலின் சிறப்பைப பதிப்புரையில் பாராட்டியுள்ளார்.

கவிஞராகவும் ஆசிரியராகவும் விளங்கிய ச.வே.பஞ்சாட்சரம் மரபு வழித் தமிழ்ப் பண்டிதர்பட்டம் பெற்றுப் பல்துறைப் பேரறிஞராகவும்,சமூகப் பணியாளராகவும் உயர்ந்தார். கவிஞராக அறிமுகமான பண்டிதர் அவர்கள் கவிதை, நாடகம், சிறுகதை, நாவல், வீரகாவியங்கள், கட்டுரைகள், தமிழ் இலக்கணம், தெய்வீகப் பாடல்கள் முதலியவற்றை எழுதிப் புகழ்பெற்றார்.

பண்டிதர் 1962இல் வெளியிட்ட எழிலி,எளிய நடையிலும் புதிய கருவிலும் இனிய இசையிலும் தேனொழுகு செந்தமிழில் எழுதி வெளியிட்ட தீஞ்சுவைக் காவியமாகும். இதுவும் யாழ்.தமிழ் இலக்கிய மன்றம் வெளியிட்ட நூலாகும். தொடர்ந்து தண்டலை, நாடும் வீடும ஆகிய இரு கவியரங்கக் கவிதைகள் தொகுதியையும் இன்ப வானில், பூகம்பப் பூக்கள் ஆகிய கவிதை நூல்களையும் சின்னஞ்சிறு கதைகள என்ற சிறுகதை நூலையும் கூலிக்கு வந்தவன என்ற நெடுங்கதை (நாவல்) நூலையும் தமிழ் இலக்கணப் பூங்கா என்ற ஆசிரியருக்கும் மாணவருக்குமான இலக்கண நூலையும் ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள் என்ற பல்துறை கொண்ட பரந்த கவிதைத் தொகுப்பையும் இணுவை முருகன் பிள்ளைத் தமிழ் முதலிய நாற்பது சமயச் சார்புடைய கோயிற் கவிதை நூல்களையும் வேறு சில நூல்களையும் தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளார் எரிமலை தந்த விடுதலை என்ற குறுங் காவியம் முதலிய சில கவிதை நூல்களை நினைவுமலா அன்பளிப்பு நூல்களாகவும் வெளியிட்டுள்ளார் மேலும் 50 நூல்களை வெளியிடும் திட்டத்தையும் அவர் கொண்டுள்ளார்

அண்மையில் பஞ்சாட்சரம் பா நாடகங்கள் என்ற கவிதை நாடக நூலையும் அவர் வெளியிட்டுள்ளார் இக்கவிதைநாடகநூல் அவர் இளமை முதல் எழுதிய இருபது நாடகங்களுள் சிகண்டி (1997), தாயும் பேயும்(1998), பூக்கும் புரட்சிகள்(1998), பாடினி(1967) ஆகிய கவிதை நாடகங்களைக் கொண்டதாக உள்ளது.




முதல் மூன்று பாடல்களும் ஈழத்தமிழரின் தொன்மையான தமிழ்த் தேசிய உணர்வை வளர்க்கும் நாடகங்களாக அமைந்துள்ளன.

வட பாரத அரசு கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் உரியது. ஆனால் கௌரவர் பாண்டவர் அரசைப் பறித்து ஆள்கின்றனர். பாண்டவர் முன்னோடிப் போரிட்டுத்தோற்று, தருமர் கௌரவர் வெற்றிக்குக் காரணமான வீட்டுமரிடம் சென்று,

"அண்ணலே பாட்டாநீவீர்
அன்றொரு தருமம் சொன்னீர்
உண்மையில் பாதித் தேசம்
உரியது பாண்டவருக்கே"

என்று கூறி,

"என்னரும் பாட்ட இன்றே
எம்பக்கம் சேரல் வேண்டும்"

என்று தருமர் கேட்டார். எதிரிகளின் வெற்றிக்கு முன்னோடியாய் உழைத்த வீட்டுமர்,

"உன் மதிக் குலப் பாதிக்கென்
உயிர்தந்து கடன் கழிப்பேன்"

என்று தருமருக்கு உறுதி கூறுகிறார்.

அவர் கூற்றுப்படி தருமர் வீட்டுமரின் எதிரியாகிய சிகண்டியிடம் சென்று உதவி பெறுகிறார். சிகண்டி வீட்டுமரைப் பயங்கரவாதி என்று கூறித் தாக்குகின்றான். அருச்சுனனும் உக்கிரமாய்த் தாக்குகின்றான். வீட்டுமர் அழியப்பாண்டியர் அரசு பெறுகின்றனர்.

"சிகண்டி" என்ற காவியக் கவிதை நாடகம் ஈழத் தமிழர் பெறவுள்ள உரிமையை உறுதிசெய்வதாக அமைகின்றது.

இந்நூலின் இரண்டாவது நாடகம் "தாயும் பேயும்" ஸ்ரெல்லா ஒரு குழந்தையை வளர்க்கிறாள். இரவு குழந்தை இறந்துகிடப்பதைக் காண்கிறாள். ஜாஸ்மின் என்பவள் தான் தன்னிறந்த குழந்தையைத் தன்னருகே விட்டு விட்டு தனது குழந்தையை அவள் எடுத்துச் சென்றாள் என்பதை உணர்ந்து, அவளிடம் குழந்தையைப்பெறச் செல்கிறாள். அவள் கொடுக்க மறுக்கிறாள். இருவரும் வாதிடுகின்றனர். அயலவர்கள் சத்தம் கேட்டு அங்கு வருகின்றனர். அரசனிடம் இருவரையும் குழந்தையையும் அழைத்துச் செல்கின்றனர்.

அரசன் சேவகனை அழைத்து கூர்வாள் கொண்டுவரச் சொல்கிறான். கொண்டுவந்ததும் குழந்தையை வெட்டித் தாய்மார் இருவருக்கும் பாதிபாதிகொடுக்கச் சொல்கிறான். அதனைக் கேட்ட ஜாஸ்மின்,

"தடையே இல்லை பாதிப் பிள்ளை
தந்தாற்போதும் தாரும் வெட்டி"

என்கிறாள். ஸ்ரெல்லா பதறி அரசனிடம்,

"வேண்டாம் வேந்தே வெட்ட வேண்டாம்
மெய்யாய் பிள்ளை எனதே அன்று
வேண்டுமென்றே பொய்வாதிட்டேன்
வீம்புக்காரி பொய்யள் தானே"

என்கிறாள். அரசன் உண்மை உணர்கிறான். குழந்தையைத் தூக்கிச் சென்று பாலூட்ட அவளைப் பணிக்கிறான்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# படித்ததில் பிடித்தது

## யாரும் அறியாத நிரந்தரம்

கண்ணில் தெரிந்தது மரணம்
கரும் புகையாய் ஒரு நாள்
தங்க வர்ண ஒளிச்சாரமும்
நட்சத்திரமும் வழியற்ற வெளியாக
அடர்ந்த பச்சையாய்
உச்சந்தலைக்குள் ஆனந்த வட்டம்
சூரியப் பொட்டாகி ஜொலித்தது.

நெஞ்சுக்கூடு முறிந்து
வெட்ட வெளியில்
அற்றுப் பறந்தது.

முற்றிலும் பொன்னொளி
அவ்வொளியையும் மிஞ்சி
முன்னும் பின்னும் கால ஒளி
சஞ்சரித்ததை அவதானித்து
சேர்ந்ததால் ஒரு நந்தவனம்
ஒளிக் கலவையாக மலர்கள், தாவரங்கள்
ஒளிர்ந்தன வானங்களும் ஜீவன்களும்
ஆனந்தம் பெய்தது எங்கும்.

எமனை எழுச்சி அடையச் செய்வாய்
என்றோர் குரல்
இழக்க இழக்க
மரணமே காண்பாய் என்றது
விகுதிகளும் பகுதிகளும்
நெற்றி மேட்டில் செய்தியாகின.

சுற்றிலும் சிற்றெறும்புகள்
ஊர்ந்து செல்லும் மண்
புற்றாகவும் நின்றதில்
உயிர்க்கென்றுதான் இன்று
ஒன்றுமில்லையே.

தமிழில் - இ.றஜித்
ஆங்கிலத்தில் - மேவின்ராவ்

## ஆனால்...

அப்பம் சுட்டு விற்று ~என்னை
ஆளாக்கினாள் அம்மா.
குப்பை கூட்டி விற்று~ என்னை
ஆளாக்கினார் அப்பா.

தேக்கு மர நிழலில் ~ எனக்கு
சோறு ஊட்டினாள் ஆச்சி.
பாக்குச் சீவி விற்று~ என்னை
படிக்கவைத்தாள் பெரியம்மா.

மண் வீட்டை மெழுகி~ என்னை
தூங்க விட்டாள் தங்கை.
கண் மூடாத அக்கா~ என்னை
காலம் தவறாமல் வாழ்த்தினாள்.

மண் மேடான மனிதர்கள்~என்
மகத்துவத்தை கரைத்து விட்டார்கள்.
மலை மேடென புனிதர்கள் ~என்
மௌனத்தைக் கலைத்து விட்டார்கள்.

~நல்லை அமிழ்தன்~

## மரணமே!

எங்கள் முகங்களில்
முகாரிப் பாடலை
எழுத வரும்
மரணமே! வா...
மரணத்தைக் குடித்து
முளைத்தவர் நாம்
வா...
வந்தெழுதிப்போ
மீண்டும் ஒரு முறை
உன் தோழ்வியை.

கு.தவசீலன்





# அசத்தல் மன்னர்கள் மீண்டெழுவார்களா?

ஆஷஸ் தொடரில் ஆசத்தியவர்கள் ஆசிய மண்ணிலும் (பாகிஸ்தானிலும்) அசத்துவார்கள் என எதிர்பார்க்கப்பட்டவர்களுக்கு முல்டான் டெஸ்ட் போட்டியின் முடிவு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

பாகிஸ்தானுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் பாகிஸ்தான் அணிக்குமிடையில் முல்டானில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இன்சமாம் உல் ஹக் தலைமையிலான பாகிஸ்தான் அணி 25 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

பாகிஸ்தான் மண்ணில் இங்கிலாந்து அணி கால் பதிக்கும் வரைக்கும் இத்தொடரில் இங்கிலாந்து அணியின் ஆதிக்கம் தொடரும் என்றே நம்பப்பட்டது.



இதற்கு இங்கிலாந்து அணிமீது விமர்சகர்கள் கொண்டிருந்த



நம்பிக்கையே முக்கிய காரணமாகும். அதாவது தொடர்ச்சியாக ஐந்து டெஸ்ட் தொடர்களை கைப்பற்றிய இங்கிலாந்து அணி உலகின் முதல் நிலையில் இருக்கும் அவுஸ்திரேலிய அணியை ஆஷஸ் தொடரில் வீழ்த்தி கடந்த 17 வருட கால தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்ததுடன் ஆறாவது டெஸ்ட் தொடரையும் கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில் இங்கிலாந்து அணியின் பாகிஸ்தான் சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

பாகிஸ்தான் அணியைப் பொறுத்து அவ்வணிக்கு சொந்த மண்ணில் விளையாடுவது ஒன்றே சாதகமாக அமைந்ததே தவிர அவ்அணி குறித்துபலம் கேள்வி எழும் வகையிலேயே இருந்தது.

ஆனால், பாகிஸ்தான் மண்ணில் கால் பதித்த இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் ஒன்றாக அடைந்ததுடன் பாகிஸ்தான் அணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாகவும் அமைந்திருந்தது.

இதற்கு பாகிஸ்தான் ஏ அணிக்கு எதிரான பயிற்சி போட்டியில் ஆறு விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்ததே காரணமாகும்

இந்நிலையில் முல்டான் டெஸ்ட் போட்டியின் எதிர்பார்ப்பு அதிகரிக்கப்பட்டது. அதற்கமைய விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி இங்கிலாந்து அணியை 25 ஓட்டங்களினால் வீழ்த்தியிருப்பது கிரிக்கெட் உலகிற்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் ஒன்றாகவே இருக்கும் அதேவேளை பாகிஸ்தான் அணி குறித்த எதிர்பார்ப்பும் அதிரிக்கப்பட்டுள்ளது.

எனவே, மீதமுள்ள இரு டெஸ்ட் போட்டிகள் விறுவிறுப்பாகவும், திகில் நிறைந்ததொன்றாகவும் இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

அதாவது, ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலிய அணியிடம் முதலாவது டெஸ்ட் போட்டியில் படுதோல்வி அடைந்த இங்கிலாந்து அணி அதை சுதாகரித்துக் கொண்டு ஆஷஸ் தொடரையே கைப்பற்றியது போன்று மீண்டெழும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, எது இப்படியோ ஆரோக்கியமான போட்டி ஒன்று ஏற்படுமாயின் அது கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்தாக அமையும் என்பதைச் சொல்லித்தான் புரிய வேண்டுமா?

சுபானந்

இந்திய அணிக்கு சோதனையா? ஒரு தொடரை முழுமையாகக் கைப்பற்றிய இந்திய அணி தற்போது தென்னாபிரிக்கா அணியின் சாதனையை தடுத்து நிறுத்துமா? ஏன்ற கேள்வீ எழும் நிலை தோன்றுமளவிற்கு கிரிக்கெட் களத்தைத் தோற்று வித்துள்ளது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற் கொண்டுள்ள தென்னாபிரிக்கா -





# பலவான் யார்..?

இந்திய அணிகளுக்கிடையில் ஹைதராபாத்தில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி ஐந்து விக்கெட்டுக்களினால் இந்திய அணியைத் தோற்கடித்து தமது வெற்றிப் பயணத்தை இந்தியாவிலும் ஆரம்பித்துள்ளதுடன் நாளை நடைபெறவுள்ள போட்டியையும் பெரும் எதிர்பார்ப்பு நிறைந்ததொன்றாக மாற்றியுள்ளது.

அதாவது, 19 ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிபெற்ற ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்கா அணி ஒரு நாள் போட்டியில் தமது புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளது.

ஹைதராபாத்தில் நடைபெற்ற போட்டியில் இந்திய அணியை வென்றதன் மூலம் இருபது ஒரு நாள் போட்டியில் வெற்றிபெற்றிருப்பதுடன் அவுஸ்திரேலிய அணியின் சாதனையை சமப்படுத்த முனைப்புடன் போராடும் என்று நம்பப்படுகின்றது.

ஆனால், இந்தச் சாதனையை இலகுவாக ஏற்படுத்தக்கூடிய வகையில் இந்திய அணி இன் றில்லை என்பது சொல்லித்தான் புரியவேண்டி யதில்லை.

ஆனால், ஹைதராபாத் ஒரு நாள் போட்டி தென்னாபிரிக்க அணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளதுடன் சாதனையை சமப்படுத்த பல வியூகங்களை அமைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய அணியைப் பொறுத்து இந்த சாதனையை முறியடிக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளதுடன் சிறிலங்கா அணியுடனான வெற்றியின் பிரதிபலிப்பையும் வெளிப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவுஸ்திரேலிய அணியின் தொடர்ச்சியான டெஸ்ட் வெற்றிகளுக்கு தடுப்பு வேலி அமைத்த பெருமைக்குரிய இந்திய அணியால் இந்த சாதனை தடுத்து நிறுத்தப்படும் என்றே எதிர்பார்க்கப் படுகின்றது.

எனவே நாளை நடைபெறவுள்ள போட்டி இரு அணிகளுக்கும் பலப் பரீட்சை நிறைந்ததொன்றாக இருக்கும் என்று கூறின் அதை மறுப்பதற்கில்லை.



# சச்சினை வீழ்த்தும் நடுவர்கள்

கிரிக்கெட்டில் சச்சின் எந்தவொரு எதிரணியினருக்கும் அச்சம் தரும் துடுப்பாட்ட வீரர்.

இந்திய அணியோடு மோதுவதற்காக களத்தில் இறங்கும் அணிகள் சச்சினை வீழ்த்துவதற்காக வென்றே களத்தடுப்பில் புதிய வியூகங்களையும், பந்து வீச்சில் புதிய நுணுக்கங்களையும் பிரயோகிப்பதில் குறியாய் இருக்கிறார்கள்.

ஆனால் இந்த வியூகங்களையும் நுணுக்கங்களையும் முறியடித்து களத்தில் சச்சின் நின்று பிடிக்க தொடங்கி விட்டால் எதிரணிகளின் வெற்றிக் கனவு அதோகதிதான்.

இப்படியிருக்க சச்சினை வீழ்த்த உலக கிரிக்கெட் அணிகள் படும்பாடு பெரும்பாடாக இருக்கிறது.

இதேவேளை இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்மித் கூட இந்தியப் போட்டிக்கு முன்னர் ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்திருந்த கருத்தில் கூட இந்தியாவில் இப்போது துடுப்பாட்டத்தில் கலக்கி வரும் டோனி எங்களுக்கு பிரச்சினையில்லை சச்சின் தான் எங்களுக்கு அச்சம் தருகிறார். எனத் தெரிவித்திருந்தார்.

அந்தளவுக்கு சச்சினை வீழ்த்துவது எதிரணிகளுக்கு மிகவும் சிரமமானது. நிலைமை இவ்வாறு இருக்க சச்சினை மிகவும் இலகுவாக களத்தில் வீழ்த்தும் வீரர்கள் இல்லாமல் இல்லை. இந்தப் பட்டியலில் இப்போது இடம் பிடித்திருப்பவர்கள் போட்டி நடுவர்கள்.

இறுதியாக நடந்த இந்திய தென்னாபிரிக்க அணிகளுக்கி டையிலான ஒரு நாள் போட்டியில் பொலக்கின் பந்து வீச்சில் சச்சின் ஆட்டமிழந்ததாகவே கூறப்பட்டது. ஆனால் உண்மை யில் சச்சினை ஆட்டமிழக்கச் செய்தவர் இந்திய நடுவர் ஹரிஹரன் தான் என்று கூறவேண்டும். ஏனெனில் பொலக்கின் பந்து சச்சினின் துடுப்பில் படாமலே செல்வது மிகத் தெளிவாக தெரிகிறது. ஆனால் நடுவர் ஹரிஹரன் சச்சினுக்கு ஆட்டமிழப்பு செய்துவிட்டார்.

இதற்கு முன்னரும் ஸ்ரீபன்பக்னரும் ஒரு முறை சச்சினுக்கு இவ்வாறான ஒரு தவறான ஆட்டமிழப்பை கொடுத்திருந்தார்.

ஒரு அணியின் நட்சத்திர வீரரை இலகுவாக நடுவர்கள் ஆட்டமிழப்புச் செய்வது ஒரு பொறுப்பற்ற செயல் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.



# வரம்பு மீறிய அன்ரூ நெல்

தென்னாபிரிக்க இந்திய அணிகளுக்கிடையிலான போட்டியில் சுமார் பதினைந்து பந்து பரிமாற்றங்களுக்கிடையில் தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் இந்திய துடுப்பாட்ட வீரர்களை துவம்சம் செய்தனர்.

தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. இதேவேளை தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாது மளமளவென சரிந்த இந்தியத்துடுப்பாட்ட வரிசைக்குள் யுவராஜ்சிங்பதான் துடுப்பாட்ட சோடிகள் மட்டும் இந்திய அணி தோற்றாலும் கௌரமாக தோற்கும் வகையில் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்கள்.

அந்தளவுக்குத் திறமையாகப் பந்து வீசிய தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களில் அன்ரூ நெல் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர். தனது பந்து வீச்சினால் மட்டுமன்றி தனது பந்து வீச்சு செயல் முறையிலும் வித்தியாசமாக பந்து வீசிய இவர் எதிரணி வீரர்களை உளரீதியாக அச்சுறுத்தும் வகையில் மைதானத்தில் நடந்து கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால் அன்ரூநெல் யுவராஜ்சிங்கை வீழ்த்த முடியாத ஒரு கட்டத்தில் யுவராஜ்சிங்கின் முகத்துக்கு நேராகக் கத்துவது, முறைப்பது என அளவுக்கு அதிகமாக நடந்து கொள்ள முயன்றது இவரின்மீது ரசிகர்களுக்கு வெறுப்பையே ஏற்படுத்தியிருக்கும்.

சிறப்பாக செயற்பட முனையும் வீரர்கள் மைதானத்தில் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டியதும் அவசியமாகும். விளையாட்டு வெற்றியை மட்டுமல்ல நல்ல நட்பையும் உருவாக்குவது. அன்ரூ நெல்இதைக் கவனத்தில் கொள்வாரா?

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருவர் அல்லது இரண்டு பேர் அதுவும் சைகிள் திருட்டு குற்றத்திற்காக மற்றப்படி இல்லை என்றுதான் கூறவேண்டும். மீண்டும் மீண்டும் குற்றங்கள் புரிந்து வருவது எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லை.

இதைவிட எங்களிடம் யாராவது இரண்டு மூன்று தடவைகள் வந்தால் அவர்களது பிரச்சினைகள் ஆராயப்பட்டு உண்மையான பிரச்சினையைக் கண்டறிந்து தலைவரின் திட்டப்படி அவர்களுக்கு கொஞ்சப் பணத்தை வழங்கி சுய முயற்சிக்கு வழிகாட்டி விடுகின்றோம். பெரும்பாலும் கசிப்புக் காச்சி பிடிபடுகிறவர்கள் தொடர்பில் நாங்கள் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். அத்தோடு வேலைவாய்ப்பு இன்றிக் காணப்படுகின்ற அனைவருக்கும் நாங்கள் வேலை வாய்ப்பும் வழங்குகின்றோம். வேலை வாய்ப்பு இன்றி எமது பிரதேசத்தில் எவரும் இருந்தால் அவர்கள் எங்களோடு தொடர்புகொள்ளலாம்.

**எங்களுடைய பிரதேசத்தில் எவ்வகையான குற்றச் செயல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன?**

எங்களுடைய பிரதேசத்தில் பாரியளவிலான பெரிய குற்றங்கள் என்று சொல்வதற்கு எதுவுமே இல்லை பெரும்பாலும் கிராமப்புறங்களில் ஆடு, மாடு, கோழி, தோட்டங்களில் காய்கறிகள், மற்றும் காதல், காணிப் பிரச்சினை போன்ற சிறு சிறு பிரச்சினைகள்தான் நாம் சந்தித்துள்ளோம்.

**தமிழீழ காவல்துறை எங்களுடைய பத்திரிகையூடாக எங்களுடைய மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றது?**

காவல்துறையின் செயற்பாடுகள் மற்றும் காவல் துறை பற்றியும் மக்கள் அவ்வப்போது கருத்துக்கள் தெரிவித்து வருகின்றனர். இது மேலும் ஆழமாக தெரிவிக்கவேண்டும். மக்களின் ஆக்கபூர்வமான விமர்சனங்கள்தான் எமக்கு உரம். எங்களுடைய வளர்ச்சிக்கு மக்களுடைய விமர்சனங்கள்தான் பலம். எனவே மக்கள் கடிதங்கள் மூலமாகவும், நேரடியாகவும் எமக்கு தங்களுடைய கருத்துக்களை தெரியப்படுத்த வேண்டும்.


## தேசியத் தலைவரின் பிறந்த நாளில்

**மன்னார்மாவட்ட மக்களுக்கான சிறப்புப்பரிசாக ஆரம்பமாக இருக்கின்றது தமிழீழ நுண்கலைப்பிரிவின்,**

## மன்னார் நுண்கலைக் கல்லூரி

*காலம்* - 26. 11 . 2005 - சனிக்கிழமை.
காலை பதினொரு மணி.
*இடம்* - நுண்கலைக் கல்லூரி வளாகம்,
உயிலங்குளம் பிரதான வீதி, அடம்பன்.

ஆரம்ப விழாவிற்கும், பிறந்த நாள் நிகழ்விலும் கலந்துகொள்ள கலை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- புதிதாக கலைப் பயிற்சிகளில் சேர விரும்பும் மாணவர்கள் அலுவலக நேரத்தில் வந்து ஆரம்பமாகவுள்ள வகுப்புக்கள், நேர சூசிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

சி-13348 **தமிழீழ நுண்கலைப் பிரிவினர்.**

## மனிதவள அலுவலர்

## பணிநிலை வேண்டுகை

**பணிநிலை I** :- பகுதிகளிற்கான அலுவலர்.
**பணிநிலை II** :- பிரதேச மேலாளர்.
**அகவை** :- 21-45 வருடங்கள்.
**தகைமை** :-

பணிநிலை I இற்கு:- கா.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது கா.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பணிநிலை II இற்கு :- ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கற்கையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**கொடுப்பனவு :-**

பணிநிலை I முறையே 3300-4300+3500 / 10X100, 2800-3800+3500 / 10X100

பணிநிலை II இற்கு:- 6010-7710+3500 என்ற அடிப்படையில் பணியில் நிலைப்படுத்தப்பட்டதில் இருந்து வழங்கப்படும்.

**குறிப்பு :-** ஆறு மாத காலம் பயிற்சிக்கால கொடுப்பனவாக, முறையே 5000/= 7000/= வழங்கப்படும்.

**பணி வெற்றிடமுள்ள இடங்கள் :-** கரைச்சி, கண்டாவளை, புதுக்குடியிருப்பு, கரைதுறைபற்று, வவுனியா வடக்கு, ஒட்டிசுட்டான் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கிராமங்கள்.

**வேண்டுகை சேர்ப்பிக்க வேண்டிய திகதியும் வழிகளும் :-**

மேற்குறிப்பிட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மனிதவள அலுவலகங்களிலும் இவை இல்லாத இடங்களில் போ.க. பிரிவு அலுவலகங்களிலும் எதிர்வரும் 10.12.2005 இற்கு முன்னதாக தங்களால் தயாரிக்கப்பட்ட சுயவிபரங்களுடன் பிறப்புச் சான்றுப் பத்திரம், குடும்ப அட்டை, கல்விச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதியையும் இணைத்துத் தரவும்.

**பணிப்பாளர்,**
**முதன்மைப் பணியகம்,**
**மனிதவள அலுவலர் பிரிவு,**
**தமிழீழம்.**

(6930)


# மரபணுக்களை உணவு மூலம் மாற்ற முடியும்

நாம் சாப்பிடும் உணவுகள் குறிப்பிட்ட மரபணுக்களை மாற்றுவதன் எமது உடல் நலத்தின் மீது செல்வாக்குச் செலுத்த முடியும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

குறிப்படசில மரபணுக்களை செயற்பட வைப்பதன் மூலம் அல்லது செயலிழக்கச் செய்வதன் மூலம் ஊட்டச் சத்துக்களும் குறைநிரப்பு உணவுகளும் மிருகங்களின் மரபுப்பண்களை மாற்ற முடியுமென்ற கொறி விலங்குகள் மீதான பல ஆய்வுகள் காட்டியிருக்கின்றன. எனினும் மனிதர்களிலும் அப்படி நிகழுமா என்பது சரியாகத் தெரியவில்லை. எனினும் அதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என்று 'நியுசயன்ரிஸ்ற்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இந்த வகையில் எதிர்காலத்தில் நோய்களை எதிர்வளமாக்க முடியும் என்று அச்சஞ்சிகை கூறுகிறது.

மரபணுக்களைக் கட்டுபப்டுத்தும் காரணிகள் பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள் உண்ணும் உணவு அக்கராணிகளில் முக்கியமானது எனத் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் எல்-மீத்தியோனின் (L-METHIONINE)என்ற அமினோ அமிலத்தை ஊசிமூலம் செலுத்துவதனால் முதிர்ந்த எலிகளை வித்தியாசமாக நடக்கச் செய்யலாம் எனக் காணப்பட்டுள்ளது. இந்த மிருகங்கள் அழுத்தத்துக்கு காட்டும். பதில் வினையை கட்டுப்படுத்த உதவும் குளுக்கோ கோட்டிகொய்ட் (GLUCO-CORTICOID) டுக்கான ஒரு மரபணுவை எல் மீத்தியோனின் மாற்றியிருந்தது என மொண்றீல் மக்கில் பல்கலை கழகத்தின் மோஷே ஸிப் (MOSHE SZYT) யும் அவரது அணியினரும் கூறுகின்றனர்.

இது மீத்தையிலேற்றம் (METHyLATION) எனப்படும். இதனால் ஏற்படும் எதிர்மறை நடத்தை மாற்றங்களை, நேர்மாற்றங்களாக ஆக்க இயற்கையாகவே இருப்பிலுள்ள ட்றைக்கொஸ்ரேற்றின் ஏ (TRICHOSTATIN A) என்ற இரசாயனத்தைப் பயன்படுத்த முடியுமா என ஆய்வாளர்கள் முயன்று வருகிறார்கள். இந்த இரசாயனம் மீதைல் குழுக்களை நீக்கிவிடுவதன் மூலம் எதிர்வள செயற்பாட்டை உருவாக்குமென கருதப்படுகிறது.

மிருகங்கள் மீதான ஆய்வுகள், ஒரு தாய் உண்ணும் உணவுகள், அவளது குழந்தையின் மரபணு மீத்தையிலேற்ற மட்டத்தை பாதிக்கும் என்று காட்டியுள்ளனர்.

இறுதியிலேயே ஆகக்கூடிய பயன் விளைக்கும் விதத்திலான மரபணு மீத்தையிலேற்றத்தைத் தரக்கூடிய உணவுகளை தெரிவு செய்து உண்ண ஒருவர் விரும்பும் நிலை உருவாகலாம்.

உடலில் இடம்பெறும் செயல் முறைகள் அனைத்தையும் மரபணுக்கள் கட்டுப்படுத்துவதால், அவை புற்று நோயைவிட வேறுபல சுகாதார விடயங்களோடும் தொடர்புபட்டிருக்கக்கூடும்.

மீத்தையிலேற்றத்தின் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய ஒரு ஊட்டச்சத்தாக (கு) போலேற் (FOLATE) அல்லது (கு) போலிக் அமிலம் (FOLIC ACID) இருப்பதாக டொக்.ஸிப் கூறினார்.

(கு). போலேற்றில் ஏற்படும் குறைபாடானது மார்புப் புற்றுநோய் உட்பட சி வளர்ந்தோல் ஏற்படும் புற்று நோய்கள் உருவாகும் அபாயத்தை அதிகரித்துவிடும்.

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகத் தெரியவில்லை.

வெகுசன ஊடக வழியிலான கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கப் பாடசாலை அமைப்பிலும் வளங்களை ஏற்படுத்தல் அவசியமாகின்றது.

எமது பிரதேசத்தைப் பொறுத்த மட்டில் ஊடகங்களின் வழியிலான கல்விச் செயற்பாடு மிக மிகக் குறைவு என்றேகூறலாம். இந்தியாவில் முன்னேற்றகரமான சூழ்நிலையையே அவதானிக்க முடிகிறது. குறிப்பாக எமது பிரதேசத்தில் தமிழ்மொழி மூலமான ஊடக நிகழ்ச்சிகளில் கல்வியுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள் திட்டமிட்ட வகையில் நடைமுறைப்படுத்துவது அவசியமாகின்றது. இதற்குத் தமிழ் வழியிலான அச்சு ஊடகங்களும், மின்னியல் சாதன ஊடகங்களும் நிகழ்ச்சித்தயாரிப்பில் மாணவர்களின் பாடசாலைக் கல்விச்செயற்பாட்டுடன் தொடர்புபட்ட வகையி லான நிகழ்ச்சிகளை, கட்டுரைகளை- ஆசிரியர்களையோ, கல்வியியலாளர்களையோ கொண்டு தயார் செய்யவேண்டும். இதற்கு ஊடக நிறுவன நிர்வாகத்தினது ஒத்துழைப்பும் அவசியமாகிறது. இதனுடாகவே கல்வியை இலகுவாக வாழ்க்கையுடனும், ஓய்விலும், விருப்புடனும் பெறக் கூடியதாக அமையும். இதுவே கல்விசார் அறிக்கை விருத்திக்கு ஊடகங்கள் செய்யும் மிகப்பெரிய அறிவியல்சார் பங்களிப்பாக அமையும்.

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜாஸ்மினைச் சிறையிடப் பணிக்கிறான். நீதி மன்னன் சாலமோன்,

"பாவிகளும் வஞ்சகரும் படுத்திவரும் பாட்டால்
அப்பாவிகள் பலரோ அழிந்துவருகின்றனர்
இப்பாவியின் கதைஇவ் விரும்புவிக்கோர் பாடம்"

என்கிறார்.

பண்டிதரின் இக்கவிதை நாடகமும் தமிழர் உரிமைப்போரின் வெற்றியை உறுதி செய்வதாக அமைகின்றது.

இந்நூலின் மூன்றாவது நாடகம் "பூக்கும் புரட்சிகள்" வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இலங்கை முழுவதும் வாழ்ந்த தமிழரில் ஒரு பகுதியினர் பௌத்த மத, பாளி மொழித் தொடர்பால், கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய திராவிடர் போல் சிங்களத் திராவிடராயினர். அந்நியர் மூவினத்தோர் ஆட்சியின் பின் இலங்கை ஒரு நாடாக்கப்பட்டது. பெரும்பான்மை ஆட்சியினரால் இலங்கையில் முன்னோடித் தமிழர் ஆட்சியுரிமை இழக்க நேர்ந்தது. அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழர் ஒன்றிணைந்து அறநெறிப் போரிலும் படைநெறிப் போரிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதுவே தமிழீழத் தேசியக் கோட்பாடாகும். "பூக்கும் புரட்சிகள்"தமிழர் உரிமைப் போர் வரலாற்றின் இறுதிக்கட்ட நாடகமாகும்.

இந்நாடகத்தில் சண்டிராசன் என்ற சிறிலங்கா அரசன் தமிழர் உரிமைப் போரைப் பின்வருமாறு பழித்துரைக்கிறான்.

"சிங்களரெம் நாடே சிறிலங்கா தானே
தமிழன் இன்னும் இங்கே இருக்கவிடுவேனே?"
"புத்தம் தர்மம் வாழும்
புனிதபூமி லங்கா
போக்கறுந்த தமிழன்
புலிக்கு மிங்கு பங்கா?
யுத்த வெற்றி கொண்டேன்
யுத்தவெற்றி கொள்வேன்"

என்று பாடும் அரசன் அமைச்சரின் தமிழ் எதிர்ப்பைப் போற்றி அவனை எல்லாளனை அழித்த துட்டகாமினி என்று பாராட்டுகிறான். தமிழர் ஒருவர் வாயிலாக நாடகமுடிவில்,

உயிர்பலி இன்றி
துயர்பழி இன்றி
எங்கள் மண்ணும்
எங்கள் வாழ்வும்
எங்கட் காகும்
எங்கட்காகும்"

தமிழர் விடுதலையின் உண்மையை உறுதிசெய்கிறார்.

இந்நூலின் நான்காவது இறுதி நாடகம் "பாடினி" என்பதாகும். முந்திய மூன்று நாடகங்களும் நடிப்பதற்குரிய நாடகம். ஆனால்,"பாடினி" சமூகச் சீர்திருத்த இலக்கிய நாடகம். இந்நாடகத்தின் கதாநாயகன் பனிங்கன். கதாநாயகி மேரி. இருவரும் புகழ்பூத்த கவிஞர்கள். இருவரும் நீண்ட கவிதைகளை எழுதுகின்றனர். அவையும் இந்நாடகத்தில் இடம்பெறுகின்றன். சாதியும் சமயமும் அவர்களிடையே பிரச்சினையை ஏற்படுத்துகின்றன. எனினும், பிரிவுற்ற குடும்பங்கள் ஒன்றிணைந்து சமூக ஒற்றுமையை ஏற்படுத்துகின்றன. "சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று பாரதி கூறும சமூக ஒற்றுமையை உணர்த்துவதாக இந்நாடகம் அமைந்துள்ளது. இதன் மேடை நாடகத் தன்மையை விட் இலக்கிய நாடகத் தன்மையை நூலாசிரியர் பண்டிதர் அவர்களே,

"பாடினி1967இல் இயற்றப்பட்டது. சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து நாம் தமிழர்கள் என்று ஈழமக்கள் வாழவேண்டும் எனும் ஆன்மார்த்தமான வேட்கையோடு பாடப்பட்டது... பாடினி படிக்க மட்டுமே பொருத்தமானதாக அமைந்துள்ளது"

ஈழத்தமிழ்ச் சமூகத்தின் உயர் நிலையைக் குறிக்கோளாகக்கொண்டு எழுதப்பட்ட ச.வே.பஞ்சாட்சரம் அவர்களின் "பா நாடகங்கள்" நூல் தமிழர்கள் அனைவரும் தவறாது படித்துப் பயன்பெற வேண்டிய சிறந்த நூலாகும்.

# பணிநிலை வேண்டுகை

## இலங்கை முன்னணி நிறுவனத்துடன் இணைய ஓர் சந்தர்ப்பம்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை (FMCG) இலங்கையெங்கும் சந்தைப்படுத்தும் ஓர் முன்னணி நிறுவனம் தமது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களுக்கு புதிய வியூகங்களுடன் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிறுவனம் தமது இலட்சியத்திட்டங்களை அடைய தமது சந்தைப்படுத்தற் பிரிவுக்கு அனுபவமும், ஆற்றலும், அர்ப்பணிப்புள்ள இளம் விண்ணப்பதாரர்களின் சேவையை எதிர்பார்க்கின்றது.

விற்பனைப் பிரதிகள் - கிளிநொச்சி.

எமது நிறுவனமானது வடக்கு பிரதேசத்திலே வாடிக்கையாளர்களினதும், நுகர்வோரினதும் நன்மதிப்பைப் பெற்ற ஓர் முன்னோடி நிறுவனமாகக் கருதப்படுவதால் ஆளுமைத் திறன்கொண்ட, சிரேஷ்ட விண்ணப்பதாரர்களின் சேவை எதிர்பார்க்கப்படுகின்றது.

தகுதியான விண்ணப்பதாரி

★ சிறப்பான தொடர்பாடல் மற்றும் பலம்மிக்க உள்ளார்வ திறமைகளுடன், சிறப்பாகத் தீர்மானம் எடுக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வுத் திறமைகள் கொண்டவராய் இருத்தல் அவசியம்.

★ 30 வயதிற்குக் குறைந்தவர்.

★ க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியுடன் ஆங்கில அறிவு.

★ கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர வசிப்பிடம்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் அனுபவம், ஆற்றலுக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

இரண்டு உறவினரல்லாத நடுவர்களின் தொடர் விபரங்களுடன் அடங்கிய உங்களின் முழுமையான சுயவிபரக்கோவையுடன் 30ஆம் திகதி நவம்பர் 2005அன்று காலை 9.00மணி முதல் மாலை 3.00 மணிவரை இடம்பெறும் நேர்காணலுக்கு கீழ் கண்ட முகவரிக்கு சமுகமளிக்கவும்.

*இலக்கம் 70/3,*
*கணேசபுரம்,*
*கிளிநொச்சி.*

மேலதிக விபரங்களுக்கு
*அருள்மணி பல்பொருள் வாணிபம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

(சி-13347)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/யோகபுரம் மகாவித்தியாலய மாணவனும் எமது சிரேஷ்ட புதல்வனுமாகிய செல்வன் கிருஸ்ணபிள்ளை பிரியங்கன் இவ் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்றாம் இடத்தினையும் துணுக்காய் வலயத்தில் முதலாம் இடத்தினையும் பெற்று இன்று தனது 10ஆவது அகவையினைக் கொண்டாடுகின்றார். இவர் பல துறைகளில் வெற்றிபெற இறைவனைப் பிரார்த்தித்து, இவருக்கு ஊக்கமளித்த ஆசான்களையும் இவ்வேளை பாராட்டுகின்றோம்.

அப்பா-ப.கிருஸ்ணபிள்ளை,
அம்மா-கி.கமலராணி,
சகோதரர்கள்-கி.சர்வாங்கி,
கி.கேதாங்கன்.

அதிபர் விடுதி,
மு/யோகபுரம் ம.வி. (6015)

## மனிதவள மேம்பாட்டுப் பகுதி
## கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்து கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை கோரப்படுகின்றது.

தகைமைகள்:-

01. கல்வித் தகைமை:- க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதப் பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
02. அகவை:-16 தொடக்கம் 21வரை.

குறிப்பு:-

01.வேண்டுகை முடிவு நாள் :-30.11.2005
02.நேர்காணல் நடைபெறும் நாள் :-03.12.2005 காலை 09.00மணி.
03.நேர் காணல் நடைபெறும் இடம்:- மனிதவள மெம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
04.நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிகளுடன் வருகை தருக.
05. பயிற்சிக் காலத்தில் தங்குமிடம், உணவு, கல்விச் செலவு வசதிகள் வழங்குவதோடு, உதவு தொகையும் வழங்கப்படும்
06. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
07. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணியும் வழங்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை.

(சி-13343)

# வேலை வாய்ப்பு

மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் **2 1/2** மாதற்திற்குள்.

| தொழில்கள் | தொகை | வயதெல்லை |
|---|---|---|
| கட்டடக் கூலி ஆள்கள் | 500 | 20-45 |
| மேசன்மார் | 200 | 20-45 |
| தச்சுவேலை செய்பவர் | 200 | 20-45 |
| கம்பி வளைப்பவர்கள் | 200 | 20-45 |
| சுத்திகரிப்பாளர் ஆண்/பெண் | 300 | 20-35 |
| வேலைத்தள உதவியாளர்கள் | 300 | 20-35 |
| ரெயிலர் | 60 | - |
| எிபொருள் நிரப்பு நிலையத்தில் எிபொரு நிரப்புபவர் | 400 | - |
| வாகன்ம் கழுவுபவர்கள் | 200 | - |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்.
சகல நாடுகளுக்கும் செல்லக் கூடிய கடவுச்சீட்டு, பாஸ்போட் அளவு படம் 15 (கலர்), வீட்டுப் பணிப் பெண்கள் 200 பேர். வயதெல்லை 19 – 45 ,சம்பளம் 20000 .
தொடர்பு – 0777 279813 மைக்கல்.
குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் 520 வேலை வாய்ப்புக்கள் உள்ளன. பயணம் **2 1/2** மாதற்திற்குள்.

| தொழில்கள் | தொகை |
|---|---|
| தச்சுவேலை செய்வோர் | 200 |
| கம்பி கட்டுபவர் | 50 |
| மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| மின்சார வேலையாட்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| வாகன மின்சாரவேலை செய்பவர் | 10 |
| பைப் பொருத்துபவர்கள் | 20 |
| ஸ்பிறே பெயின்ரர்/ரிங்கர் (வாகனம்) | 20 |
| பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் ரெயின், றேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர்,ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்). | 20 |
| கைற்றொனிக் மெக்கானிக். | 10 |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்.
பாஸ்போட்,பாஸ்போட் அளவு புகைப்படம் 05,
குறிப்பீட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.
தொடர்பு – 0777 279813 மைக்கல்.
குறிப்பு :- முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

(6914)




# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

பனைவிதை நடுகைத்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் பதினையாயிரம் பனைவிதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. வவுனியா கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் போன்ற பகுதிகளில் தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சிங்கள அரசின் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போது சிங்கள இராணுவம் இப்பகுதிகளில் இருந்த பெருந்தொகையான பனைமரங்களை அழித்து விட்டது. இதன் காரணமாகவே பனை நடுகைக்கு இப்பிரதேசம் தெரிவு செய்யப்பட்டது. உண்மையில் விஞ்ஞானகுளம், கரப்புக்குத்தி போன்ற பகுதிகளைப் போன்று எமது தாயகப்பகுதிகளில் சிங்கள ஆக்கிரமிப்புப் பகுதிகளில் பனைவளம் முற்றாகவோ பகுதியாகவோ அழிக்கப்பட்டுவிட்டது.

சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பினை விடுதலைப்புலிகள் மீட்டபின்னர் மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் என்பன மேற்கொள்ளப்பட்டது போல பனை மீள்நடுகையும் அவசியமான செயற்பாடாகவே கருதப் பட்டது.



அதன் காரணமாகவே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தனது முழுமையான செயற்றிட்டமாக பனைவிதை நடுகையினை தமிழகத்தின் சகல பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சு.சின்னண்ணர் அவர்கள் பனைப்பகுதியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பனைவளத்தை பாதுகாப்பது தொடர்பிலான தனது கருத்துக்களை வெளிப்படுத்தி இருந்தார்.

எமது தேசியவளமான பனைவளம் முற்றாக அழிந்து வருகின்றது. இது எமது சமூக, பொருண்மிய, சூழல் பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் அழிக்கப் பட்டு வருகிறது.

இதனை நாங்கள் கவனிக்காது விடுவோமாயின் தமிழீழத்தைக் கட்டியெழுப்பும் போது தமிழீழத் தேசம் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளது.

எனவே எஞ்சி இருக்கும் பனைவளத்தையாவது நாம் பாதுகாக்க வேண்டும். என அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

பனைவளத்தை பாதுகாத்தல் என்பது இரண்டு வகையான செயற்பாடுகளை எம்முள்ளே எமது கடமையாக வலியுறுத்துகின்றது. அதாவது இருக்கும் பனைமரங்களை அழிக்காது பாதுகாத்தல் மற்றது பனைவிதை நடுகையை ஊக்குவித்து நீண்டகால நோக்கில் பனைவளத்தை மேம் படுத்துதல் என்பவையாகும்.

எமது தேசிய வளமான பனை வளத்தை நாம் தான் பாதுகாக்கவேண்டும்.

# புற்களை எவ்வாறு சேமிக்கலாம்

நாம் புல் அதிகமாக உள்ள காலங்களில் மேலதிக புல்லை நல்ல முறையில் பழுதாகாமல் சேமிப்பதன் மூலம் புல் பற்றாக்குறை நிலவும் காலங்களில் கால்நடைகளுக்கு உணவூட்டலாம்.

இதற்கு பிரதானமாக 2 முறைகளில் புல்லை சேமிக்கலாம்.

I) சைலேஜ் தயாரிப்பு.

II) உலர்புல் தயாரிப்பு.

**சைலேஜ் தயாரிப்பு(Silage)**

பச்சை தீவனங்கள் காற்று உட்புகாவண்ணம் சேமித்து வைக்கப்படுதல். அதாவது புல்லை பக்றீரியாவால் நொதிக்கப்பண்ணி சேமித்து வைத்தல் 'சைலேஜ்' எனப்படும்.

படிமுறைகள்:-

1) புல் பூப்பதற்கு முன் வெட்டப்பட வேண்டும். வெட்டும் புல் ஆனது 2.5-4cm நீளத்தில் வெட்டப்பட வேண்டும்.

2) வெட்டிய புல் நீர்ப்பிடிப்பானதாக இருந்தால் வெயிலில் உலரவிட வேண்டும். (கூடுதலாக உலர விடக்கூடாது)

புல்லின் நீர்ப்பிடிப்பு சரியானதாயின் சிறிதளவு புல்லை கையில் எடுத்து முறுக்கி பின் தளரவிடின் மெதுவாக முறுக்கு எடுபட்டு நேராகி பழைய நிலையை அடையும்.

3) புல்லை சிறு சிறு துண்டுகளாக வெட்ட வேண்டும்.

4) Silo ஐ வெட்டிய புல்லால் அடுக்கடுக்காக நிரப்பவும்.

5) உணவுச்சந்தை கூட்டுவதிற்காக ஒரு அடுக்கு புல் ஆகவும் மறு அடுக்கு தானியமாகவும் அடுக்கப்படலாம்.

6) புல் நன்றாக அமற்றப்படவேண்டும்.

7) 1-2 நாட்களில் Silo ஐ முற்றாக நிரப்பி மூடிவிடவேண்டும்.

8) இவ்வாறு மூடப்பட்டு தேவையெனின் 3-6 வாரத்தில் தீனாக பயன்படுத்தலாம். அல்லது திறக்கப்படாத நிலையில் சில மாதங்கள் இவை பாதுகாக்கப்படலாம்.



**நல்ல சைலேஜின் இயல்புகள்:-**

1) பச்சையிலிருந்து மண்ணிறம் வரை நிறம் மாறுபடும்.

2) மணம் வினாகிரி போன்றது.

3) இழைய அமைப்பு மென்மையானது.

4) **Fungus** (பங்கஸ்) காணப்படக்கூடாது.

5) பசுக்களால் விரும்பத்தக்க சுவை உடையது.

**சைலேஜ் தயாரிக்க பயன்படுபவை:-**

1)சோளம்,
இறுங்கு போன்ற தானியங்கள்.

2) 10% நொதிக்கக்கூடிய பொருட்கள்.
(உதாரணம்:- அரிசித்தவிடு, கரையக் கூடிய மாப்பொருள் மொலாசஸ்)

3)அவரையினங்கள் (கௌபி,சூரியகாந்தி)} 50%
4) புல் இனங்கள்.

5) மற்றும் விவசாய விளை பொருட்கள், கரும்பின் மேல்பாகம், மரக்கறி, பழங்களின் தோல்.

சைலேஜ் தயாரிக்கும்போது சேமிக்கும் குழி **Silo** எனப்படும் இக் குழியை நிரப்பும் செயன்முறை **Ensiling** எனப்படும்.

**Silo** கள் பலவகைகளில் காணப்படுகின்றன.

1) **Tower Silo**
2) **Clamp Silo**
3) **Stack Silo**
4) **Vaccum Silo**

இவை அனைத்தும் நிலத்தின் மேலமைந்த Silo கள் ஆகும்.

5) **Trench Silo**

இது நிலத்தின் கீழ் அமைந்த **Silo**

**Lokg Silage/** 1மாடு/ 1நாள் கொடுக்கலாம்.

**உலர்புல் தயாரிப்பு (Gay )**

மெல்லிய தண்டு உடைய நல்ல இலைப்பரப்புக் கொண்ட காய்ந்த பின் சுவை மாறாததாகவும் நல்ல போசனைப் பெறுமதி கொண்டதாகவும் இருக்கக்கூடிய புல் இனங்களையே உலர்புல் தயாரிப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். உதாரணம்:- செற்றேறியா, பிறகேரியா, பன்கேலா, கினி, பவல், இப்பில் இப்பில், கிளிசறியா, முல்முருக்கு, டெஸ்மோடியம்.

**படிமுறைகள்:-**

1) பூப்பதற்கு முன்னர் புல்லை வெட்டி (வெயில் நேரம் வெட்டி) காயவிட வேண்டும்.

2) 2-3 மணித்தியாலத்திற்கு ஒருதடவை தலை கீழாக அடிக்கடி திருப்பிவிட வேண்டும்.

3) காய்ந்தது போதாவிடின் அவை ஒன்றாகச் சேர்க்கப்பட்டு மீண்டும் அடுத்தநாள் காலை காயவிடப்பட வேண்டும்.

4) 1-3 நாட்கள் இவ்வாறு செய்யலாம்.

5) பின்னர் உலர்புல்லை கட்டாக்கி சேமிக்கப்படும்.

சேமிக்கும்போது ஈரப்பற்று கூடுதலாக அல்லது வெப்பம் கூடுதலாக உள்ள இடத்தில் வைக்கக்கூடாது.

**உலர் புல்லில் உள்ள நன்மைகள்:-**

1) செலவு குறைவு

2) புல் இல்லாத பிரதேசங்களில் பாவிக்கலாம்.

3) நீண்ட காலம் சேமிக்கலாம்.

4) இலகுவாக சேமிக்கலாம்.

5) கையாளுவதற்கு இலகுவானது.

காற்றின் வயது 2 கிழமையாக இருக்கும் போது உலர்புல் (ஒருபிடி) உணவூட்டலை அறிமுகப்படுத்தலாம்.

6 மாத வயதை அடையும் போது 1-2 **Kg** உலர்புல் / நாள் கன்றிற்கு வழங்கலாம்.

உலர்புல்லை கன்றுகளிற்கு ஊட்டுவதன் மூலம் அவற்றின் ருமனை **(Ruman)** விருத்தி செய்ய தூண்டுவதோடு ருமனில் செலுலோசை சமிபாடு அடையச் செய்யும் பக்றீரியாக்களின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் ஊக்குவிக்கலாம்.

பசுக்களின் உடல் நிலையில் ' 3% அளவான உலர்புல் வழங்கினால் போதுமானது.

புல் நட்டு 4-6 கிழமைகளின் பின்னரே பூக்கும். எனவே அதற்கு முன் உலர்புல் தயாரிக்க புல் பயன்பட வேண்டும்.




## அத்தியாயம்- 18

பகுதி -73

தனக்கென ஒரு சுயத்தைத் தேடுவதிலே டிப்ஸ் ஆழமாக மூழ்கிப் போயிருந்தான். இந்தப் பிள்ளையினுடைய அக மூலவளங்களிலே நம்பிக்கை உருவாவது அவசியமானதாகும். அவனைச் சுற்றியிருக்கிற சூழல் இறுக்கம் தளர்ந்ததாகவும் நலம் நாடுவதாகவும் கூருணர்வு கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

"அண்டைக்கொருநாள் பாடசாலையில நிகழ்ச்சி ஒன்று நடந்தது" என்று ஹெடா புன்னகையுடன் சொன்னாள். "கீழ்வகுப்பு பிள்ளைகளுக்கென்று பாடசாலை மண்டபத்தில அது நடந்தது. இந்த மாதிரியான அனுபவத்துக்கு டிப்ஸ் தயாராகி விட்டானா என்று எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. பங்கு கொள்வதா இல்லையா என்று முடிவு செய்யும் பொறுப்பை நாங்கள் அவனிடமே விட்டு விடுவது என்று முடிவு செய்து கொண்டோம்.





உண்மையைச் சொல்லப்போனால் எங்கள் குழுவில இருந்த ஒவ்வொரு பிள்ளையும் தான் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்வதா இல்லையா என்ற முடிவை அவரவர்களே எடுக்கும்படி விடவேண்டும் என்று நாங்கள் முடிவு செய்துகொண்டோம். எங்கள் குழுப் பிள்ளைகள் தாங்களே ஒரு கதையை உருவாக்கி அதை நடித்துக் காட்டினார்கள். ஒத்திகை பார்க்கும்பொழுதே வார்த்தைகளையும் இசையையும் உருவாக்கிக் கொண்டினம். ஒரு நாளைக்கு செய்தது போல இன்னொரு நாளைக்கு செய்யமாட்டினம். ஒவ்வொரு நாளும் நாங்கள் வித்தியாசம் வித்தியாசமா திட்டமிடுவோம். ஆர் மரமா நடிக்கப் போறியள்? ஆர் காற்றா நடிக்கப் போறியள்? சூரியனா ஆர் நடிக்கப் போறியள்? இப்பிடியான நாடகங்கள் எப்பிடிப் போகுமெண்டு உங்களுக்குத் தெரியுந்தானே? பிறகு நிகழ்ச்சியில யார் என்ன பாத்திரமா நடிக்கிறதெண்டு முடிவு செய்யிற பொறுப்பை பிள்ளையளட்டையே விட்டு விட்டோம்.

"இதுப்பற்றி டிப்ஸ் என்ன நினைப்பான் என்றோ அவன் என்ன செய்வான் என்றோ எங்களுக்கு தெரியேல்ல. இப்பிடி பல வேலைகள நாங்க செய்கிறனாங்கள். ஆனா முந்தியெண்டா டிப்ஸ் எங்கள எப்பவுமே அலட்சியப் படுத்திவிடுவான். ஆனா ஒரு நாள் அவன் பிள்ளைகளோட வட்டத்தில வந்து சேர்ந்து கொண்டு தானா முன்வந்து நடனமாடப் போவதாகச் சொன்னான். நடனத்தை தானே உருவாக்கிக்கொண்டான். அவன்ர நடனம் மற்றப் பிள்ளைகளுக்கு பெரிய சந்தோசத்தை தந்தது. அவன் காற்றாக நடிக்க விரும்பினான். அவன் காற்றைப் போல் இரைந்து கொண்டே அறையெங்கும் வளைந்து வளைந்து ஓடினான். பாடசாலை நிகழ்ச்சியிலே அவன் தான் காற்றாக நடிக்க வேணுமெண்டு எல்லாப் பிள்ளைகளும் முடிவு செய்தினம். டிப்ஸும் அதற்கு ஒப்புக்கொண்டான். தன்ர பாகத்த அவன் வடிவாச் செய்தவன், திடீரென்று தன்ர நடனத்துக்கு நடுவில பாடவேணும் எண்டு முடிவு செய்து கொண்டான். சொற்களையும் இசையையும் அவனே ஆக்கிக் கொண்டான். அந்தப்பாட்டுக் கிட்டத்தட்ட இப்பிடித்தான் போனது.

'நானே காற்று
நானே வீசுவேன்
நானே வீசுவேன்
நான் எழுந்து செல்வேன்
நான் மலைகளில் ஏறுவேன்
நான் முகில்களை நகர்த்துவேன்
நான் மரங்களை வளைப்பேன்
நான் புற்களையும் அசைப்பேன்
காற்றை எவரும் தடுக்க முடியாது
நான் ஒரு காற்று
நண்பனான காற்று
நீங்கள் காணமுடியாத காற்று
எனினும் நானே காற்று.'

சபையில் இருந்தவர்கள அவன் உணர்ந்ததா தெரியேல்ல. பிள்ளைகளுக்குச் சரியான வியப்பு. அதோட சந்தோசமும். எங்களுக்கும் அப்பிடித்தான் எண்டு சொல்லவே தேவையில்லை. அப்பதான் டிப்ஸ் கடைசியில தன்ர சுயத்தக் கண்டுபிடிச்சிட்டான் எண்டும் இப்ப குழுவில ஒருவனா அவன் வந்துவிட்டான் எண்டும் நாங்கள் நினைச்சம்"

டிப்ஸ் அந்த வழியில் போய்க் கொண்டிருக்கிறான் என்பது நிச்சயம்தான். ஆனால் அவன் தன்னைத்தானே கண்டு கொண்டு விட்டான் என்று இன்னமும் என்னால் சொல்ல முடியாமலிருந்தது. அவன் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டியிருந்தது. தன் உணர்வுகள், மனப்போக்குகள், தன்னைச் சூழ உள்ளவர்களுடனான உறவுகள் தொடர்பாக அதிகரித்த புரிந்துணர்வை பெற்றுத்தரும் கடினமானதும் மனக்கலக்கம் தருகின்றதுமான அனுபவமாக அவனது சுயத்துக்கான தேடல் இருந்தது. தன் கடந்த காலத்துக்குள்ளிருந்து கிண்டியெடுத்து தனது நாடகத்திலே வெளிப்படுத்திவிட்டவை தவிர்ந்த வேறு உணர்வுகளையும் அவன் அறிந்து, அவற்றைப் புரிந்துகொண்டு, இப்போதையை விடச் சிறப்பாக அவற்றைக் கட்டுப்படுத்தியாக வேண்டும் என்பதில் எந்தச் சந்தேகத்துக்கும் இடமிருக்கவில்லை. தனக்குள்ளேயே இருக்கக் கூடிய ஏதாவது வெறுப்பு, பயம் முதலியவை வெளியே கொண்டுவரப்பட்டு குறைந்து போகச் செய்யும் வகையிலே தனக்குள்ளேயே இருக்கிற உணர்வெழுச்சிகளை அறியவும் உணரவும் அவனுக்கு உதவுகின்றவையாக, விளையாட்டறையிலான அனுபவங்களை அவன் கண்டு கொள்வான் என நான் எதிர்பார்த்தேன்.



## அத்தியாயம் -19

அடுத்த முறை டிப்ஸ் வந்த பொழுது தனக்குரிய நேரத்தை எனது அலுவலகத்தில் செலவிட முடியுமா என்று கேட்டான். "அங்க நீங்க ஒரு ஒலிப்பதிவுக்கருவிய வைச்சிருக்கிறத நான் கண்டனான். நான் அந்தக் கருவியில ஒலிப்பதிவு செய்யலாமா?"

எனக்கு அதில் ஒரு பிரச்சினையும் இருக்கவில்லை.எனவே நாங்கள் என்னுடைய அலுவலகத்துக்குள் சென்றோம். நான் ஒலிநாடா ஒன்றை அதில் போட்டு, அதன் மின் இணைப்பைக் கொடுத்தபின் அதை எப்படி இயக்குவது என்று டிப்ஸுக்குச் சொல்லிக் கொடுத்தேன். ஒலிவாங்கியை ஆவலோடு கையில் எடுத்துக்கொண்டு ஒலிப்பதிவுக் கருவியை இயங்கச் செய்தான்.

"டிப்ஸ் கதைக்கிறன்" என்று தொடங்கினான். "நான் சொல்லுறத கேள் கருவியே நீ என்ர குரல பிடிச்சு வைச்சுக் கொள்ள வேணும். டிப்ஸ் கதைக்கிறன். நான்தான் டிப்ஸ். இதுதான் நான்" என்றவன், கருவியை நிறுத்தி ஒலிநாடாவை பின்னால் ஓடவிட்டு மீண்டும் ஒலிக்க விட்டுக் கேட்டான். கருவியை சடாரென்று நிறுத்திவிட்டு என்னைப் பார்த்து இளித்தான். "அது என்ர குரல் தான். நான் கதைக்க அது பதிஞ்சு போட்டுது. நான் கனநேரம் கதைச்சு பதிவு செய்யப் போறன். அத நாங்கள் எப்பவும்... எப்பவும் வைச்சிருப்பம். இது எங்களுக்கு மட்டுந்தான்."

அவன் அந்தக் கருவியை மீண்டும் இயங்கவிட்டு ஒலிவாங்கிக்குள் கதைக்கத் தொடங்கினான். அவன் தனது முழுப் பெயரை முதலில் சொன்னான். பிறகு முகவரி, தொலைபேசி இலக்கம் முதலியவற்றையும் தன்து பேத்தியார் உள்ளிட தனது குடும்பத்தின் உறுப்பினர்கள் எல்லோரினதும் முழுப் பெயர்களையும் சொன்னான். "நான் டிப்ஸ். நான் கதைக்கப் போறன்" என்றவன். தொடர்ந்து "நான் மிஸ் ஏயோட அலுவலகத்தில இருக்கிறன். இங்கே ஒரு ஒலிப்பதிவுக் கருவி இருக்குது. நான் இப்ப அதுக்குள்ள கதைக்கிறன். நான் பள்ளிக்கூடத்துக்குப் போறனான்" என்றவன் பாடசாலையின் பெயரைச் சொல்லிவிட்டு, அதன் முகவரியையும் சொன்னான். "என்ர பள்ளிக்கூடத்தில ஆசிரியைகள் இருக்கினம்" ஒவ்வொரு ஆசிரியையினுடைய பெயரும் முழுமையாகப் பதிவு செய்யப்பட்டது. "என்னுடைய அறையில பிள்ளையள் இருக்கினம்". "எல்லாப் பிள்ளைகளட பெயர்களையும் நான் சொல்லுறன்" என்றவன் எல்லாப் பிள்ளைகளது பெயர்களையும் சொன்னான். "மார்ஸ்மலோ என்கிறது எங்கட முயல். அது நல்ல ஒரு முயல். ஆனா அத ஒரு கூட்டில அடைச்சிருக்கினம். மார்ஸ்மலோ பாவம். பள்ளிக்கூடத்தில இருக்கையுக்க நான் வாசிக்கிறனான். எழுதுறனான் இலக்கங்கள எண்ணுறனான். எப்பிடி எண்ணுறனான் எண்டு தெரியுமா? "ஒண்டு... இரண்டு... மூண்டு நாலு..." இலக்கங்கள் மெதுவாகவும் தட்டுத் தடங்கலாகவும் வந்தன. "நாலுக்கு பிறகு என்னவரும்? ஓம். நான் உனக்கு உதவுவன் டிப்ஸ். நாலுக்குப் பிறகு ஐஞ்சு தான் வரும். ஒண்டு இரண்டு மூண்டு நாலு ஐஞ்சு எண்டு சொல்ல வேணும். என்ர கடவுளே! உனக்கு இப்படி எண்ணத் தெரியிறது எவ்வளவு கெட்டித்தனம்?" என்று சொல்லிவிட்டு தனது கைகளைத் தட்டினான்.

"கதவுக்குக் கிட்ட ஆரோ வாறது கேட்குது" என்று தொடர்ந்தவன், "இதென்ன இவ்வளவு சத்தம்! வீட்டில இருக்கயுக்குள்ள அமைதியா இருங்கோ. ஓ அப்பாவா? கதவ இப்படி அடிச்சுச் சாத்துறது என்ன வேலை அப்பா? நீங்கள் முட்டாள் தனமாயும் அவதான மில்லாமலும் நடந்துகொள்ளுறீங்கள். இப்பிடிச் செய்யிறதெண்டா எனக்குக் கிட்ட இருக்கவேணாம். உங்களுக்கு என்ன வேணும் எண்டு கவலைப் படப்போறதில்ல. உங்கள உங்கட அறையுக்க போக வைப்பன். அந்த அறையப் பூட்டிவிடுவன். அப்ப கத்திக் குழறுற முட்டாள் மனிதர் சொல்லுறதுகள நாங்க கேட்கவேண்டியிருக்காது."

ஒலிப்பதிவுக் கருவியை நிறுத்திய டிப்ஸ் ஜன்னலுக்கருகில் சென்றான். "வெளியில அருமையான நாளாக இருக்குது" என்றவன். "மிஸ் ஏ நான் இஞ்ச வாற எல்லா நாட்களும் அருமையான நாட்களாக இருக்கிறது எப்படி?" என்று கேட்டான்.

"நீங்க இஞ்ச வாற எல்லா நாட்களும் அருமையான நாட்கள் போல் இருக்கிறதா?" நான் கேட்டேன். "ஓம்" என்றான் அவன். "குளிரா இருந்தாலும் மழை பெஞ்சுகொண்டிருந்தாலும் இஞ்சவாற நாட்கள் அருமையானவையாத்தான் இருக்கின்றன. பதிவு செய்தத உங்களுக்குப் போட்டுக் காட்டட்டா?"

(தொடரும்)

## உலகை ஆட்டிப் படைக்கும் புதிர் விளையாட்டு

புதிர் -08

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

அதனுடைய சித்திர வதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின்பத்தை உணருங்கள்.

இந்தப்புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத் திய எண்ணை

## சுடோக்கு (SUDOKU)

இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன்படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையான தெல்லாம் தர்க்கபூர்வமான மனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும் தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 2 | 5 | | | 4 | | 7 |
| 1 | | | | 3 | | | 9 | 6 |
| 8 | | 6 | | 9 | 7 | 3 | | 1 |
| | | 8 | | 7 | 3 | 6 | 2 | |
| 7 | | 3 | 1 | | 5 | 8 | | 9 |
| | 5 | 4 | 9 | 6 | | 7 | | |
| 5 | | 1 | 6 | 8 | | | 7 | 4 |
| 4 | 2 | | | 5 | | | | |
| | | 9 | | | 1 | | 3 | 2 |

(இதற்கான விடை அடுத்தவாரம்)

புதிர்-07ற்கான விடையினை சரிபார்த்துக் கொள்ளுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 4 | 1 | 5 | 7 | 8 | 2 | 3 |
| 7 | 5 | 3 | 9 | 8 | 2 | 4 | 6 | 1 |
| 8 | 1 | 2 | 3 | 4 | 6 | 9 | 5 | 7 |
| 1 | 3 | 9 | 2 | 7 | 4 | 5 | 8 | 6 |
| 2 | 7 | 5 | 6 | 1 | 8 | 3 | 4 | 9 |
| 4 | 8 | 6 | 5 | 9 | 3 | 7 | 1 | 2 |
| 5 | 6 | 1 | 8 | 3 | 9 | 2 | 7 | 4 |
| 3 | 4 | 8 | 7 | 2 | 1 | 6 | 9 | 5 |
| 9 | 2 | 7 | 4 | 6 | 5 | 1 | 3 | 8 |

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



*பாவலனே!*
*உம்மை யாரும் கிண்டலடித்தால் நீர் என்ன செய்வீர்?*

*சுதன்,*
*அக்கராயன்.*

கிண்டலடித்தவர் நண்பனா? எதிரியா? என்பதைவைத்துக்கொண்டு எனது முடிவு அமையும். நண்பன் அடித்த கிண்டல் என்றால் நகைச்சுவையாக எடுத்துக்கொள்வேன். பகைவன் அடிக்கும் கிண்டல் என்றால் நக்கலாக எடுத்துக்கொள்வேன்.

*பாவலனே!*
*சாத்திரம் இல்லையென்றால் சமூகம் எப்படியிருக்கும்?*

*க.றம்மியா,*
*சிவநகர்.*

கிரகபலனை நம்பாது உழைப்பின் பலனை நம்பும்.

*பாவலனே!*
*களவையும் கற்றுமற என மூதாதையர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் சொல்லைத் தட்டக்கூடாதல்லவா?*

*சி.சத்தியசீலன்*
*புதுமுறிப்பு.*

அது உண்மைதான். இளமையில் கல்வி சிலையில் எழுத்து. என்றுமல்லவா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அப்படியானால் மறப்பது எப்படி.

*பாவலனே!*
*தடுமாறும் மனங்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்.*

*ம.சதீஸ்,*
*உடையார்கட்டு.*

மனம் தடுமாறினாலும் புத்தி தடுமாறக்கூடாதென்று சொல்வேன்.

*பாவலனே!*
*டெஸ்ட் போட்டியிலாவது இலங்கை வீரர்கள் சாதிப்பார்களா?*

*த.தவபாலன்,*
*செல்வாநகர்.*

வீரர்களாக இருப்பின் சாதிப்பார்கள். விளையாட்டுப் போர்வழியாக இருப்பின் விளையாடி விட்டுப்போவார்கள்.

*பாவலனே!*
*நிச்சயிக்கப்பட்ட திருமணமா? காதலித்துச் செய்த திருமணமா கடைசிவரை இனிமையாக இருக்கும்?*

*வ.சோபனா,*
*வவுனியா.*

எந்தத் திருமணமானாலும் மறுமணத்தைப்பற்றி யோசிக்காமல் இருக்கும்வரை அது நல்லது.

*பாவலனே!*
*எதிர்காலத்தில் உலகம் இயற்கையால் அழியப்போகிறது என்று சொல்கிறார்கள். நீர் என்ன சொல்கிறீர்?*

*அ.கேதீஸ்,*
*சாவகச்சேரி.*

தவறு, இயற்கையால் உலகம் அழியாது. இயற்கையை அழிப்பவர்களால் அழியும்.

*பாவலனே!*
*சமூகத்தில் மனிதர்கள் நடிகர்கள் போல் மாறிவிடுகின்றார்கள். இதனால் உண்மை நிலைமைகளை அறியவே மிக மிகக் கஷ்டமாகவுள்ளது?*

*மு.ரமேஸ்குமார்,*
*பூந்தோட்டம்.*

நாடகமே உலகம். அதில் நாமெல்லோரும் நடிகர்கள். என்ற தத்துவம் இருக்கிறதே. உங்களுக்குத் தெரியாதா? நாமும் நடிகர்கள் ஆகிவிடவேண்டியதுதானே.

*பாவலனே!*
*இன்றைய அரசியலை இரண்டு வரியில் எடுத்துவிடும் பார்க்கலாம்?*

*பிரியா,*
*கிளிநொச்சி.*

இதுவரை அரசியல் 'அரசி' யியலாக இருந்தது. இனிமேல் 'அரச' யியலாக இருக்கப்போகிறது. புரிகிறதா?

*பாவலனே!*
*தமிழர் மீதான சமாதானக் கதவுகள் சாத்தப்பட்டுத்தான் இருக்குமா?*

*ம.கமலா,*
*கிளிநொச்சி.*

விடுதலைப்போரில் வெற்றி பெறும்வரை சமாதானக்கதவுகள் சாத்தப்பட்டே இருக்கும். போரின் வெற்றியில் அவை தகர்க்கப்பட்டே தீரும்.

*பாவலனே!*
*நீங்கள் ஜோக் விடுவீர்களா? நல்லதொரு ஜோக் கூறிவிடுங்களேன்?*

*த.அன்பு.*
*புதுக்குடியிருப்பு.*

சிலேடையான ஜோக்கா, சீரியசான ஜோக்கா?, கடிஜோக்கா, அறுவை ஜோக்கா, அரசியல் ஜோக்கா அல்லது ஆத்திரமூட்டும் ஜோக்கா.

# தெருப்பேச்சு



"முகாமில துப்புரவில்லாட்டி வருந்தத் தானே வரும். மனிசர் குடியிருக்கிற இடம் மாதிரியே இருக்கு."

"சுனாமியடிச்சும் ஒரு வரியமாப் போப் போகுது எங்களுக்குத்தான் இன்னும் விடியுதில்ல."

உங்களுக்கு மட்டுமே. சரி வாறநேரம் வரட்டும் இருக்குமட்டும் துப்புரவா இருந்தா என்ன...? பார்... எத்தின இடத்த மாட்டுச்சாணி."

மாட்டுச்சாணியெண்டா ஒண்டு ரெண்டோ ஒருநாளைக்கோ ரெண்டு நாளைக்கோ அள்ளுறது. மாடுகளைக் கொணந்து இதில விட்டிட்டுப் போறவயக்கேளன்.

இதுதான் இதுதான் எங்களுக்க ஒற்றுமையில்ல இதைக்கண்டுதானே இன்னும் வீட்டுத்திட்டம் தாறாங்துகளில்ல....ங். உங்கால செம்மலை, குமுழமுனை, முள்ளியவளையெல்லாங் குடுத்திருக்கு எங்களுக்கு..."

ணேய் விளங்காட்டி சும்மாயிரு அது பாதிக்கப்பட்ட சனம் முதல் குடுத்திருக்கு. நாங்கள் உங்களுக்கேதும் பாதிப்பே ஆறுதலாத் தருவினந்தானே. நீ மாடுகளைக் கலைச்சுப் போட்டு துப்புரவா இரு.

பேய்க்கதை பறையாதை. இத்தினி வீட்டுக்க மழையும் பெய்யப் பிள்ளையள வச்சுக் கொண்டு இருக்கேலுமே. வெளிக்கிட்டா ஊத்தப் பள்ளம் வழிய தண்ணி மாட்டைக் கலையோ.... மாட்டைக் கலைச்சுப் போட்டுத் தானே குடிசை போட்டிருக்கு அதுகள் வரியக் கணக்கா இருந்த இடத்துக்க வந்து படுக்குதுகள் வாயிருந்தாப் போல அடாத்துக்கு நிக்கிறதே-"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -146



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-146

.......................................................................

.......................................................................

.......................................................................

.......................................................................

பெயர் : ...............................................

முகவரி : ...............................................

...............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -145



**எஸ்.ஆர்.எஸ்,**
**கிளி/நொந்துாரன்**
**களஞ்சியம்**

### பரிசுக்குரிய வரிகள்

*அள்ளி அள்ளித் தந்த கடல்*
*துள்ளி வந்து உறவுகளைக் காவிப் போனதே.*
*இன்னும் அள்ளி அள்ளித் தருகிறதே*
*அதை அனுபவிக்க உறவுகள் இங்கு இல்லையே!*

### பாராட்டுக்குரிய வரிகள்

*எத்தடை வரினும் அத்தடை உடைத்து*
*ஒதிலிகளாய் வாழாது எம்மிலே நாம் வாழ*
*ஆழ்கடல் ஏறி மீனள்ளி வருவோம்*
*அத்தனையும் தமிழ் அன்னை கொடுத்தவரமே.*

கு.மஞ்சு,
கறுக்காய்த்தீவு.

*வீரம் விளையும் பூமியிலே*
*விழை மீனும் நல்லாய் விளைகிறதே-புலி*
*ரத்தம் சிந்தி பகை முடித்த கடலலலே*
*நித்தம் மீனள்ளி மகிழ்கிறோம் நாம்.*

கு.அன்பழகி,
புதுக்குடியிருப்பு.

*துயரங்களை கண்டு துவண்டு விடாமல், துணிவுடனே*
*துவிச்சக்கர வண்டியிலே பலமைல் கடந்து*
*பெட்டி மீன் விற்று நாலு காசு பெற்று*
*உறவுகளின் வயிற்றை நிரப்ப உழைக்கிறீரோ?*

எஸ்.ராஜி.
வட்டக்கச்சி.

இப்பகுதியில் வெளியாகும் படத்திற்கு மெருகூட்டுங்கள் கவிதை வரிக்கான பரிசுக்குரியவர்களுக்கான நினைவுப்பரிசினை பெறுவதற்கான கடிதங்கள் இதுவரை கிடைக்காதவர்கள் எமது கிளிநொச்சி பணிமனையிலும் புதுக்குடியிருப்பு பணிமனையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்



அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

# மங்களகரமான திறப்புவிழா அழைப்பிதழ்




அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்தீப வருடம் கார்த்திகை திங்கள் 4ஆம் நாள் (19-11-2005) சனிக்கிழமை பகல் 11.50மணியளவில் வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட PS ஸ்தாபனம் (சிலையடி.மந்திகை) திறந்து வைக்கப்படும்.

மங்கள விளக்கேற்றல்: க.சண்முகநாதன் (கிராமசேவகர்)

ஸ்தாபனத்தை திறந்து வைப்போர்

திரு.சு.பா.சுப்பிரமணியம் (நீதிபதி,மாவட்ட நீதிமன்றம்,ஊர்காவற்றுறை)

திரு.என்.கே.முத்துக்குமார் (இலங்கை வங்கி,உயர் சட்டத்தரணி)

சிறப்பு விருந்தினர்கள்

அ.க.நடராஜா(சட்டத்தரணி)
சபா.ரவீந்திரன்(சட்டத்தரணி)
பசுபதி(செயலாளர்பரு.பிரதேசபை)
அ.ஜெயபாலன்(பிரதிமுகாமையாளர்.
கொமர்ஷல் வங்கி.நெல்லியடி)
என்.கே.சபேசன்(முகாமையாளர் HNB நெல்லியடி)
கே.ஸ்கந்தபாபு(பிரதிமுகாமையாளர்
HNB நெல்லியடி)
வீ.சண்முகநாதன்(AM.CPC. யாழ்ப்பாணம்)
கோ.கணேஸ்வரன் (DS.CPS.KKS)
ஏ.என்.எஸ்.திருச்செல்வம் (பிரதமநூலகர்-பரு.பிரதேசசபை)
கே.சண்முகநாதன்(ஜெயசன்ஜன் நிறுவனம்)

மேற்படி நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிலையடி.மந்திகை.

(சி-13276)

இங்ஙனம் பொ.சின்னையா

## இலங்கையில் முதல்தரம் KEN மின் கருவிகள்




* 6 மாத உத்தரவாதம்
* எமது KEN உற்பத்திப்பொருட்களை கொள்வனவு செய்யும்போது உத்தரவாத அட்டையினை கேட்டுப்பெற்றுக்கொள்ளவும்.

KEN மின் கருவிகள் தற்போது கிடைக்குமிடம்

**பிள்ளையார் பல்பொருள் உதிரிகள் வாணிபம்**

இல: 308, யாழ்சாலை.கிளிநொச்சி. (கந்தசாமி கோவில் முன்பாக) தொ.பே:021-2285945 யோகபுரம்.மல்லாவி.




KEN

(சி-13224)




# யாழ். நகரில் மங்களா காட்சியறை

வீட்டு மரத்தளபாடங்கள், அலுவலக மரத்தளபாடங்கள், மெத்தை வகைகள், பிளாஸ்டிக் தளபாடங்கள், உருக்குத் தளபாடங்கள், மூங்கில் தளபாடங்கள், கேட்டின் வகைகள், வீட்டுக்குரிய மின்பாவனைப் பொருட்கள் அனைத்தையும் தரம்! மலிவு! அமோக தெரிவுக்கு! என்றும் மங்களா காட்சியறை.



Mangala



# மங்களா காட்சியறை

(சி-13225)

## தளபாட விற்பனையின் ராஜ முத்திரை

536, கே.கே.எஸ். வீதி, (மனோகரா சந்தி) யாழ்ப்பாணம். தொ.பே. 021-2228366, 021-2228367


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-03 | 18-11-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-274

உலகில்
215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx
Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பிட
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835

## சனாதிபதித்தேர்தல் - 2005

# தெற்கில் உயர்ந்த பட்ச வாக்களிப்பு மகிந்த-ரணில் இடையில் கடும் போட்டி!

## வடக்கில் மிகக் குறைந்தளவு வாக்களிப்பு

(கொழும்பு)

நேற்றுக்காலை இடம்பெற்ற சனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின்போது தென்னிலங்கையில் உயர்ந்தபட்ச வாக்களிப்பு இடம்பெற்ற அதேவேளை வடக்கில் மிகக் குறைந்த அளவில் வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.நேற்று மாலைஆரம்பித்த வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கும்- ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்கவிற்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று நடந்த வாக்குப்பதிவில் தென்னிலங்கையில் 75 சதவீதமான வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டதாகவும், தேர்தலில் கடும் போட்டி நிலவுவதாகவும் தகவல்கள்

(IVஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, முல்லை மாவட்ட மக்கள் முற்று முழுதாகப் புறக்கணிப்பு

திருந்தனர்.இப்படியாக வந்து சேர்ந்

(IVஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டைகளை தீயிட்டுக் கொளுத்தினர்

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலை முற்றுமுழுதாகப் புறக்கணித்த கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக் கள் தமக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அட்டைகளைத் தீயிட்டு எரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை ஆரம் பமான சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக் கான வாக்களிப்பை கிளிநொச்சி, முல்லை மாவட்ட மக்கள் முழுமை யாகப் புறக்கணித் திருந்தனர். இந்தநிலை யில் காலை எட்டு மணிக்கு முக மாலையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடிக்கு கிளிநொச்சி மக்களும், ஓமந்தை வாக்குச்சாவடிகளுக்கு முல் லைத்தீவு மக்கள் வந்து சேர்ந்



## தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் ஒளிபரப்பு நேரம் அதிகரிப்பு

தமிழீழ தேசியத்தொலைக்காட்சி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் தனது ஒளிபரப்பு நேரத்தை ஒன்றரை மணி நேரமாக அதிகரிக்க உள்ளது.

இது தொடர்பில் தேசியத் தொலைக் காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் எதிர்வரும் 21ஆம் திகதிமுதல் ஆசிய ஒளிபரப்பு இரவு 7.30 முதல் ஒன்பது மணி வரைக் கும் ஐரோப்பிய ஒளிபரப்பு பிரான்ஸ் நேரம் இரவு 8.30 முதல் பத்து மணி வரைக்கும் நடைபெறவுள்ளது.

மாவீரர் நாளன்று ஒளிபரப்பு பிற்பகல் ஐந்து மணி முதல் இரவு 7.30 மணி வரை நேரடி ஒளிபரப்பாக ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளதாக அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வர்த்தகர் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை- செல்வநாயக புரம் பகுதியில் நேற்று வியாழக் கிழமை மாலை நான்கு மணியளவில் உந்துருளியில்வந்த ஒரு இனந் தெரியாத நபரால் சுடப்பட்டார் என்று உப்புவெளி பொலிசார் தெரிவித்தனர். அந்தப்பாதையால் வந்த போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினர்,சடலம் நிலத்தில் விழுந்து கிடப்பதைக்

(IVஆம் பக்கம் பார்க்க)

## தொகுதி ரீதியாக அதிகாலை வரை வெளியான முடிவுகள்

| மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | மகிந்த | ரணில் | செல்லுபடியற்றவை | அளிக்கப்பட்ட வாக்குகள் |
|---|---|---|---|---|---|
| பதுளை | 533,163 | | | | |
| பதுளை | 48,670 | 17494 | 18624 | 512 | 37135 |
| ஹாலிஎல | 57,900 | 19946 | 23638 | 785 | 45296 |
| கொழும்பு | 1,468,537 | | | | |
| பொரளை | 60,078 | 15644 | 25784 | 483 | 42262 |
| கொழும்பு மத்தி | 144,916 | 20395 | 72906 | 1614 | 102040 |
| கொழும்பு கிழக்கு | 65,732 | 16919 | 22832 | 694 | 46900 |
| கொழும்பு மேற்கு | 38,621 | 5104 | 20475 | 399 | 26194 |
| அம்பாந்தோட்டை | 396,595 | | | | |
| பெலியத்த | 72,862 | 36615 | 19290 | 362 | 57075 |
| மாத்தறை | 562,987 | | | | |
| தெவிநுவர | 73,005 | 35319 | 19288 | 415 | 55769 |
| ஹக்மன | 82,128 | 40567 | 22366 | 511 | 64689 |
| கும்புறுப்பிட்டிய | 75,953 | 37641 | 19771 | 458 | 58695 |
| இரத்தினபுரி | 668,217 | | | | |
| எகலியகொட | 83,705 | 37243 | 29255 | 502 | 67804 |
| வன்னி | 250,386 | | | | |
| மன்னார் | 78,906 | 2183 | 20463 | 36 | 23476 |
| முல்லைத்தீவு | 66,596 | 510 | 372 | 11 | 902 |

## யாழ். மாவட்ட தேர்தல் முடிவுகள்

| | பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | அளிக்கப் பட்டவை | ரணில் | மகிந்த | செல்லுபடி யற்றவை |
|---|---|---|---|---|---|
| யாழ். மாவட்டம் | 701,938 | | | | |
| சாவகச்சேரி | 62,022 | 53 | 33 | 10 | 03 |
| யாழ்ப்பாணம் | 62,089 | 442 | 301 | 124 | 17 |
| காங்கேசன்துறை | 67,133 | 267 | 148 | 97 | 07 |
| ஊர்காவற்றுறை | 52,986 | 267 | 98 | 139 | 13 |
| கிளிநொச்சி | 89,454 | 1 | 01 | - | - |
| கோப்பாய் | 63,752 | 388 | 217 | 54 | 26 |
| மானிப்பாய் | 68,783 | 357 | 267 | 64 | 17 |
| நல்லூர் | 70,251 | 313 | 198 | 100 | 05 |
| பருத்தித்துறை | 47,188 | 38 | 25 | 09 | 04 |
| உடுப்பிட்டி | 55,499 | 65 | 52 | 11 | 01 |
| வட்டுக்கோட்டை | 62,781 | 278 | 191 | 53 | 15 |




## மாவீரர் நாள் நவம்பர் – 27

**“மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்; சுதந்திர சிற்பிகள்; எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள்”**

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.

## வரிவிளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணனி அச்சுப்பதிப்புத் துறையல் புதிய நுட்பங்களை உருவாக்கக் கூடியAdobe Pagemaker வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகட்கு: வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி.13074)

### பொத்தகசாலைக்கு ஆள் தேவை

வன்னிப்பகுதியில் உள்ள அறிவமுது பொத்தகசாலையில் பணிபுரிய ஆண்கள் தேவை. கல்வித் தகைமையுடன் கிளிநொச்சி அறிவமுதுக்கு வரவும். உணவு, தங்குமிடவசதி உண்டு.(சி.13349)


## துயர் பகிர்வோம்

**எமது வலயத்தின் துணுக்காய் கோட்டக்கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி அவர்களின் தந்தையார் கந்தர் ஆறுமுகம் அவர்கள் இறைபதமெய்தியமை எம் எல்லோரையும் ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் பங்குகொள்கின்றோம்.**

*நலன்புரிச்சங்கம்,*
*வலயக்கல்வி அலுவலகம்,*
*துணுக்காய்.*

(சி13351)

# விசுவமடு, கிளிநொச்சி, முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லங்களில் மக்கள் சிரமதானம்

முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மாவீரர் தினநிகழ்விற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்நிகழ்வின்போது கடந்த 14ஆம் திகதி முள்ளியவளை நாவற்காடு கிராம மக்களினாலும் 16ஆம் திகதி முள்ளியவளை கிழக்கு மாதர் சங்கத்தினாலும் இந்தத்துப்புரவு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை துயிலுமில்ல செயற்பாட்டுக் குழுக்களை ஒழுங்கமைக்கும் முகமாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் கிராம அலுவலர்களை அழைத்து கலந்துரையாடப்பட்டு வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மாவீரர் நாளை முன்னிட்டு விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் பல்வேறு பகுதிகளிலுமிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில்... (படம் : சோதி)

இச்சிரமதானப்பணிகளில் கடந்த திங்கட்கிழமை பிரமந்தனாறு, பெரியகுளம், கட்டைக்காட்டுப்பகுதி மக்களும், கடந்த செவ்வாய்க்கிழமை அன்று உடையார்கட்டு,விசுவமடு, சுதந்திரபுரம் பகுதி பொது அமைப்பு பிரதிநிதிகளும், மக்களும், புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் பகுதியியைச்சேர்ந்த மக்களும், வெண்புறா நிறுவன பணியாளர்களும் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர்.

அதேபோல் நேற்று முன்தினம் உடையார்கட்டு, விசுவமடு, வர்த்தகர்கள், பொதுமக்கள் , போராளிகள் ஆகியோர் சிரமதானப்பணியில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று கிளிநொச்சி நகர வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநகர் வர்த்தகர்கள், ஊழியர்களினால் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்ல வளாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாவீரர் துயிலுமில்லத்தின் அருகாமையிலுள்ள சிறிய பற்றைக்காடுகள் முழுமையாக அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது.

மேற்படி பணியில் முந்நூறுக்கு மேற்பட்ட வர்த்தகர்களும், ஊழியர்களும் ஈடுபட்டதுடன் நேற்றுக்காலை 8.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை மேற்படி சிரமதானப்பணி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(சோ)




## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழா

**தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது 20ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக மக்களின் விழிப்புணர்வு. அறிவு சமூகப்பணி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளது. போட்டிகள் யாவும் அரசாங்க அதிபர்கள், திணைக்களங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் துணைகொண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடாத்தும் போட்டிகளில் சிறந்த படைப்பாளிகளுக்கும் சிறப்பாகச் செயலாற்றிவரும் உள்ளூர் நிறுவனங்களும் தெரிவுக்குழுவின் முடிவின்படி பெறுமதி வாய்ந்த பல பரிசில்கள் வழங்கப்படும்.**

### போட்டிகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன

| இல | போட்டிகள் நடைபெறும் மட்டங்கள் | போட்டி வகை |
|---|---|---|
| 01) | பல்கலைக்கழகங்கள் | ஆய்வுக்கட்டுரை |
| 02) | பாடசாலைகள் | ஓவியம், கட்டுரை |
| 03) | கிராம சேவகர் பிரிவுகள் | சிறந்த சமூக சேவையாளர் தெரிவு |
| 04) | வலயங்கள் | சிறந்த முன்பள்ளி தெரிவு |
| 05) | பிரதேச பிரிவுகள் | சுயமுயற்சியால் தற்காப்பு நிலையடைந்த சிறந்த வலுவிழந்தோர் தெரிவு |
| 06) | மாவட்டங்கள் | வீடியோ விபரண ஆவணம் தயாரித்தல் புகைப்படம் தயாரித்தல் |
| 07) | சிறுவர் இல்லங்கள் | அறிவுசார்ந்த போட்டிகள் |
| 08) | கிராமங்கள் | சிறந்த சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குழு தெரிவு |
| 09) | உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் | செயற்படுத்திவரும் சிறப்பான தொடர் திட்டத் தெரிவு |
| 10) | சிறுவர் இல்லங்கள் | சிறந்த சிறுவர் இல்லத்தெரிவு |
| 11) | நிறுவனங்கள் | சேவைக்கால நிலையிலான பணியாளர் தெரிவு |
| 12) | மாவட்டங்கள் | நவீன தொழில்நுட்ப பயன்பாடு |
| 13) | கடற்றொழில் பரிசோதகர்கள் | கடல் சார் போட்டிகள் |
| 14) | கிராமங்கள், மாவட்டங்கள் | கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள், ஏனைய விளையாட்டுப் போட்டிகள். |
| 15) | மாவட்டங்கள் | சிறந்த உள்ளூர் அரச சார்பற்றி நிறுவனம் தெரிவு |

**போட்டிகள் நடாத்தப்படும் காலம், ஏனைய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். எனினும் போட்டிகள் யாவும் 2006ஆம் ஆண்டு தை மாதமளவில் முடிவுபெறும் என தமிழர் புனர்வாழ்வுக்கழக 20ஆம் ஆண்டு நிறைவு விழாக் குழுவினர் தெரிவிக்கின்றனர். போட்டி நிபந்தனைகள் பற்றிய பூரண விபரங்கள் காலக்கிரமத்தில் பிரசுரிக்கப்படும்.**

அதற்கு முன்பாக மேற்கூறப்பட்ட போட்டி நிகழ்வுகள் தொடர்பாக மேலதிகத் தகவல்களைப் பெறவிரும்புவோர் கீழ்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்.

**திரு. ச. இராஜகோபால்,**
**இணைப்பாளர்,**
**நடுவப் பணியகம்,**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 20ஆம் ஆண்டு நிறைவுவிழா,**
**கிளிநொச்சி.**

தொலைபேசி : 021 228 5956
மின்னஞ்சல் : raiagopal@yahoo.com

(சி-13350)


# மாவீரர் நாளை உணர்வுடன் அனுஷ்டிப்பது பற்றி திருமுறிகண்டி வர்த்தகர்களுடன் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாவீரர் நாளினைச் சிறப்புற அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக திருமுறிகண்டி வர்த்தகர்களுடனான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்றது.

திருமுறிகண்டி வர்த்தகர் சங்கத்தலைவர் தி.ஜீவானந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் திருமுறிகண்டிப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் ஜெகன், கிளிநொச்சி ஊரகவளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் ஈழவன் ஆகியோர் கலந்துகொண்டு ஏற்பாடுகள் தொடர்பாகக் கருத்துரை வழங்கினர். மேற்படி கலந்துரையாடலில் பெருமளவிலான வர்த்தகர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## சாவு அறிவித்தல்



### அழகன் இலட்சுமனண்

பரந்தன் 7ஆம் வாய்க்காலினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட அழகன் இலட்சுமனண் அவர்கள் நேற்று இறை பதம் எய்தினார்.

அன்னார் வள்ளியம்மையின் அன்புக்கணவரும், இளங்கோ (இனியநிலா அழகுப்பொருள் வாணிபம்-பொதுச்சந்தை, கிளிநொச்சி), ரேணுகா (போராளி-மாலதிபடையணி) அகியோரின் அன்புத் தந் தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*தகவல்:—*
*இளங்கோ (மகன்)*

(6428)

# தேர்தல் தினத்தில் தமிழர் தாயகப் பகுதியில்


யாழ்ப்பாணம்


சாவகச்சேரி


கொடிகாமம்




வாழைச்சேனை



கருவாக்கேணி


முகமாலை


ஓமந்தை


ஓமந்தை


ஓமந்தை

## மூதூர் மக்கள் சோதனைச் சாவடி முன் மறியல் போராட்டம்

(திருமலை)

தம்மைவாக்காளர்களாகக் கூடக் கருதாமல் தம்மீது இராணுவம் பொருளாதாரத்தடை விதித்திருப்பதைக்கண்டித்து நேற்று திருமலை மூதூரில் மக்கள் போராட்டம் ஒன்றை நடாத்தினர். கட்டைபறிச்சான், ஈச்சிலம்பற்று சோதனைச்சாவடிகள் முன்பாக இந்த மூதூர் கிழக்குப் பிரதேச மக்கள் இந்த மறியல் போராட்டத்தை நடத்தினர். எம்மிடம் வாக்குகளை எதிர்பார்க்கின்ற சிங்கள அரசு, எமது வாழ்வாதார பொருள்களைக்கூட எடுத்துச் செல்லத்தடை விதிப்பதால் அவர்களுக்கு ஏன் நாம் வாக்களிக்க வேண்டும் என்றும் இந்த மறியல் போராட்டத்தில் அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

போராட்டத்தின் முடிவில் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## பாண்டிருப்பில் குண்டுவெடிப்பு இருவர் பலி; 5 பேர் படுகாயம்

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் சக்திவாய்ந்த குண்டொன்று வெடித்துச் சிதறியதில் இரண்டு இளைஞர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். நான்கு சிறுவர்கள் உட்பட ஐந்து பேர் காயமடைந்து கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெடிகுண்டை வீட்டில் தயாரித்துக் கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நடந்ததாகவும் காயமடைந்தவர்கள் அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் கல்முனைச் சிறிலங்காப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பாண்டிருப்பைச் சேர்ந்த கந்தசாமி நிரோசன் (வயது-28), கல்முனையைச் சேர்ந்த எஸ்.சத்தியன் (வயது-26) ஆகியோர் உயிரிழந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் ஆர்.சந்திரன் (வயது-38), அவரது பிள்ளைகளான பிரியன் (வயது-8), விதுசா (வயது-9), மதுவன் (வயது-2) மற்றும் பிரக்சன் (வயது-9) ஆகியோர் காயமடைந்துள்ளனர். இந்தச்சம்பவத்தில் வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. இந்தக் குண்டு வெடிப்புச் சத்தத்தினால் பாண்டிருப்புக் கிராமமே அதிர்ந்ததாக அப்பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

## கற்பிட்டியில் வீழ்ந்தது விமானமல்ல டொனாடோ எனும் தீச்சுழல்!

### - சிறிலங்கா கடற்படை தெரிவிப்பு

கற்பிட்டி நுரைச்சோலை கடற்பரப்பில் எரிந்து விழுந்தது விமானம் அல்ல என்றும், டொனாடோ எனும் தீச்சுழலே அந்தக் கடற்பரப்பில் வீழ்ந்ததாகவும் சிறிலங்காக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டிக் கட்றபரப்பில் நேற்று முன்தினம் தீப்பந்தொன்று வந்து விழுந்ததாக இரு மீனவர்கள் தெரிவித்ததையடுத்து ரோலர் படகுகளில் அந்தப் பகுதிக்குக் கடற்படையினர் சென்று சோதனைகளை நடத்தினார்கள்.

சம்பவம் நடந்த இடத்தில் எந்த வித எண்ணெய்ப் பசையும் காணப்படவில்லை. விமானமோ அல்லது உலங்குவானூர்தியோ விபத்தில் சிக்கியிருந்தால் அந்த இடத்தில் எண்ணெய் ப[illegible] தன்மை காணப்பட்டிருக்கும் [illegible] சிறிலங்கா கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடற்படையினரும், விமானப் படையினரும் இணைந்து தொடர்ந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வாக்குப்பெட்டி ஏற்றிச் சென்ற ஜீப் விபத்தில் சிக்கி 4பேர் காயம்

(கொழும்பு)

நேற்றைய தினம் இடம் பெற்ற சிறிலங்கா சனாதிபதித் தேர்தலின் வாக்குப்பெட்டிகளை ஏற்றிச்சென்ற ஜீப்வண்டி ஒன்று பெந்தெளிய சந்தியில் விபத்துக்குள்ளனது.இந்த விபத்தில் நால்வர் காயமடைந்தனர் இவர்களில் மூவர் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அந்த விபத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி கண்டி மத்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

## இரசாயனவியல் பாடக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

2006ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் கணித,விஞ்ஞான மாணவர்களிற்கான இரசாயனவியல் பாடக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இன்று காலை பத்து மணிக்கும், நாளை காலை பத்துமணிக்கு கிளிநொச்சி மத்தியகல்லூரியிலும் ஆசிரியர் அன்பழகனினால் மேற்படி கருத்தரங்கு மேற்கொள்ளப்படவுள்ளது.

2006ஆம் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றும் கணித விஞ்ஞான மாணவர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்பினர் வேண்டியுள்ளனர். (சோ)

### கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதி பெற்ற சிரேஷ்ட மாணவர்களுக்கும், இவ்வாண்டு அனுமதி பெற்ற மாணவர்களுக்குமான விசேட கலந்துரையாடல் இன்று காலை 10.00மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் அனைத்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் தமிழீழ மாணவர் அமைப்பினர் வேண்டியுள்ளனர். (சோ)

## வவு.இல் 63 வாக்குச்சீட்டுக்களை வைத்திருந்த ஆறு பேர் கைது

வவுனியாவில் 63 வாக்குச்சீட்டுக்களை தம்வசம் வைத்திருந்த ஆறு பேர் சிறிலங்காப் பொலிசாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளைநிற டொல்பின் வாகனத்தைச் சோதனையிட்ட பொலிசார் அதிலிருந்த 63 வாக்குச்சீட்டுக் களைக் கைப்பற்றியுள்ளதுடன் வாகனத்தில் இருந்த ஆறு பேரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படுவர் என்று வவுனியாப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

## களுவங்கேணி உப தபாலதிபர் நேற்று வெட்டிக் கொலை

மட்டக்களப்பு மாவட்டம் களுவங்கேணி உப தபால் அதிபர் கோமதி வீரபத்திரர் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் மாலைகடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் கடத்தப்பட்டிருந்தார்

இவரது சடலம் ஆள் நடமாட்டமற்ற பகுதியில் நேற்றுக் காலை பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப் படவில்லை என ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர்.

# புலிகளிடமிருந்து சிங்களத் தலைவர்கள் பாடம்கற்க வேண்டுமென்கிறார் தீப்தி குமார

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்து நிரூபித்துள்ளதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து சிறிலங்கா அரசியல் தலைவர்கள் பாடம் கற்க வேண்டும் என்று சிறிலங்காவின் அரசியல் நோக்கர் தீப்தி குமாரகுணரட்ண கருத்துத் தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகப் பகுதிகளில் வாக்களிப்பு வீதம் படுவீழ்ச்சியடைந்திருப்பதைச் சுட்டிக்காட்டி அவர் வெளியிட்டுள்ள கருத்திலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரை முழுவதும் தமிழ் மக்களின் வாக்குகளை நம்பியதாக இருந்தது. வடக்கு-கிழக்கு வாக்குகள் தமக்குக் கிடைக்கும் என்று நம்பியிருந்தார். ஆனால் விடுதலைப்புலிகள் வித்தியாசமான அணுகுமுறையைக் கையாண்டுள்ளனர். அவர்கள் அதை நிரூபித்தும் இருக்கிறார்கள். இந்தத்தேர்தல் மூலம் சிங்கள அரசியல் தலைவர்கள், கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது ஒன்றுதான் என்று அவர் கூறியுள்ளார்.

-மட்டு. அம்பாறையில் -

# வாக்குச்சாவடிக்கு காவல்நின்ற பொலிசார் மீது தாக்குதல்

## -11 பேர் காயம்

அம்பாறை மாவட்டம் ஆலை யடிவேம்பு விவேகானந்தா வித்தியாலயம் வாக்குச்சாவடியில் பாதுகாப்புக் கடமையிலிருந்த சிறிலங்கா பொலிசார் மீது அடையாளம் தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நடந்த இந்தச் சம்பவத்தின் போது வாக்களிக்கச்சென்ற 56 வயது பெண்மணி படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடியிலுள்ள கொத்தணி வாக்குச் சாவடிகளுக்கு அருகாமையில் நடந்த மற்றுமொரு கைக்குண்டு வீச்சு சம்பவத்தில் ஒன்பது பொதுமக்களும் சிறிலங்கா பொலிஸ் இளநிலை அதிகாரி ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

## வர்த்தகர்....

கண்டனர்.இதனையடுத்துஅவர்கள் பொலிசாருக்கு வழங்கிய தகவலையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் சடலத்தை மீட்டு திருகோணமலை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் 53 வயதான பேபி என்றழைக்கப்படும் ஹேமபால என்றும்இவர் வர்த்தகர் என்றும் அடையாளங் காணப்பட்டதாக உப்புவெளிப் பொலிசார் தெரிவித்தார். (25)

## தெற்கில்...

தெரிவிக்கின்றன.

நேற்றுப் பகல் நடந்த வாக்களிப்பைத் தொடர்ந்து நேற்று மாலை வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பமாகின. இதன் பிரகாரம் அதிகாலை வரை சில தேர்தல் தொகுதிகளில் முடிவுகளும் மாவட்ட ரீதியாக தபால் மூல வாக்களிப்பு முடிவுகளும் வெளியாகியிருந்தன.

அதிகாலை மூன்று மணிவரையில் வெளியாகிய முடிவுகளின்படி இரு வேட்பாளருக்கும் இடையில் கடும் போட்டி நிலவுதாகத் தெரியவருகின்றது.

தென் மாகாணத்தில் ஐ.ம.சு முன்னணி பெருமளவு அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ள அதேவேளை மேல் மத்திய மாகாணங்களில் ஐ.தே.கட்சி சற்றுக் கூடுதலான வாக்குகளைப்பெற்றுள்ளதாகவும் தேர்தல் முடிவுகள் மூலம் தெரியவந்துள்ளன.

## கிளிநொச்சி....

திருந்தனர். இப்படியாக வந்து சேர்ந்திருந்த வாக்காளர்கள் அங்கு கூடியிருந்த தேர்தல் கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதன் ஒரு கட்டமாக வாக்களிப்பதற்காக தமக்கு வழங்கப்பட்டிருந்த வாக்காளர் அட்டைகளைக் கிழித்தெறிந்து கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் தீயிட்டு எரித்தனர்.

வாக்காளர் அட்டைகளை எரியூட்டிய மக்கள் கண்காணிப்பாளர்களிடம் தமிழ் மக்களாகிய நாம் வாக்களிப்பில் ஈடுபடாததன் காரணத்தை எடுத்துக்கூறினர்.

கூடியிருந்த வாக்காளர்கள் மேலும் கூறியதாவது;

தமிழ் மக்களாகிய எங்களுக்கென்றொரு தாயகம் இருக்கிறது. அதுதான் தமிழீழம். இது எங்கள் நாடு. சிறிலங்கா அந்நியதேசம் அந்நியதேசத்தின் தலைவரை தெரிவு செய்வதற்கு நாங்கள் வாக்களிக்கவேண்டிய தேவை இல்லை. எங்களின் தலைவர் எப்போதோ தெரிவுசெய்யப்பட்டுவிட்டார். எங்கள் நாட்டின் தலைவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். தென்னிலங்கையில் ஆட்சிபீடம் ஏறிய சிங்களத் தலைவர்கள் எவராக இருந்தாலும் தமிழ் மக்களாகிய எங்களில் எந்த அக்கறையும் காட்டவில்லை. எங்களை அடிமைகளாக்கி தாம் சுகபோகம் அனுபவித்தனர்.

எம்மைவைத்து தமது கதிரைகளைத் தக்கவைத்தனர். எங்கள் தாயக மண்ணை ஆக்கிரமித்து எங்கள் உடன்பிறந்த உறவுகளை படுகொலை செய்தனர்.

தமிழர்களாகிய எங்களை முற்றாக அழிப்பதற்கே இவர்கள் முன்னுரிமை கொடுத்துச்செயற்பட்டனர். இவர்களின் சூழ்ச்சியில் இருந்தெல்லாம் எங்களைக் காத்தவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள். எனவே அவர்களின் தலைமையின் கீழ் நாம் மகிழ்வாகவாழ்கிறோம்.

தென்னிலங்கையின் சனாதிபதித் தேர்தலை இங்கு அவர்கள் நடத்தத் தேவையில்லை. அதைத் தென்னிலங்கையிலேயே நடத்தட்டும். அவர்கள் தமக்கான தலைவரைத் தெரிவுசெய்யட்டும் என்று தெரிவித்தனர். கூடிநின்ற மக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி, வடமராட்சிகிழக்குப் பகுதிகளில் உள்ள மக்கள் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக முகமாலை படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லவேண்டியிருந்தது. அங்கு கிளிநொச்சி மாவட்ட மக்களுக்காக 95 வாக்குச்சாவடிகளும், வடமராட்சிகிழக்கு மக்கள் வாக்களிப்பதற்கு பத்து வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டிருந்தது. இவை கொத்தணி வாக்களிப்பு நிலையமாகும்.

இந்த நிலையங்களுக்கு வாக்களிப்பதற்காக மக்களைக்கொண்டு செல்வதற்கு சுமார் 242 வாகனங்கள் தேர்தல் ஆணையாளரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மக்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தமையால் வீதிகளில் தேர்தல் பணி என்ற பதாகையுடன் பேருந்துகள் வெற்றிடமாக வாக்குச்சாவடி நோக்கிச் சென்றதை காணமுடிந்தது.

ஒட்டுமொத்தமாக கிளிநொச்சி மாவட்ட மக்கள் வாக்களிப்பைப் புறக்கணித்ததால் இவர்கள் வாக்களிப்பற்காக 105 கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. -

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் வர்த்தக நிலையங்கள் வீதிகள் உட்பட அனைத்து இடங்களும் கறுப்புக்கொடிகட்டி நேற்றைய நாளை துக்கநாளாகக் கடைப்பிடித்திருந்தனர். ஏ-9 வீதி போக்குவரத்தற்று வெறுச்சோடிப்போய் இருந்தது.

முகமாலையில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் வாக்குச்சீட்டுக்களை மக்கள் எரியூட்டிய நிகழ்வில் தமிழ்தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனும் பங்குகொண்டிருந்தார். (லோ,தீ)

# சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை தமிழர் தாயக மக்கள் முற்றாகப் புறக்கணித்தனர்

## - வாக்குச்சாவடிகள் வெறிச்சோடிக்கிடந்தன

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை தமிழர் தாயகம் நேற்று ஒட்டு மொத்தமாகப் புறக்கணித்து சிங்களத் தலைமைகளுக்கும், சர்வதேச சமூகதத்துக்கும் கனத்த செய்தியை விடுத்துள்ளது.

சிறிலங்காவின் ஐந்தாவது சனாதிபதித்தேர்தல் நேற்று சிறிலங்காவிலும் தமிழீழத்தின் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புப் பகுதிகளிலும் நடைபெற்றது.

தமிழர் தாயகத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு சத வீதத்துக்கும் குறைவாகவும், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, மன்னார் பகுதிகளில் சராசரியாக ஐந்து வீதம் முதல் எட்டு வீதம் வரையிலான வாக்குகள் மட்டுமே பதிவாகி உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாட்டில் ஒரு சத வீதத்துக்கும் குறைவான வாக்குகளே போடப்பட்ட வாக்குகளாகப் பதிவாகியுள்ளன.

கிளிநொச்சியில் ஒருவர் மட்டுமே வாக்களித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று துக்க நாள் கடைப்பிடிக்கப்பட்டதால் வழமையான பணிகள் போக்குவரத்துச் சேவைகள் எதுவுமே நடைபெறவில்லை. வீதிகள் வெறிச்சோடின. வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டன. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறவில்லை.

யாழ். மாவட்டத்தின் மொத்த வாக்காளர்கள் ஏழு இலட்சம் பேர் என்று சிறிலங்கா அரச தரப்பு கூறுவது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் தமிழர் பிரதேசங்களில் ஐந்து வீதமான வாக்குப் பதிவும் முஸ்லிம் பகுதிகளில் 40 வீதமான வாக்குப் பதிவும் நடந்துள்ளது. தமிழ், முஸ்லிம் மக்கள் கலந்துள்ளதால் இந்த வாக்கு வீதம் பதிவாகியுள்ளது.

மண்முனைத்துறை கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில் பத்து வாக்குகளும், கறுத்தப்பாலம் கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில் 336 வாக்குகளும் மட்டுமே பதிவாகியுள்ளன.

அம்பாறையில் திருக்கோவில் பிரதேசத்தில் ஐந்து வீதம், ஆலையடி வேம்பில் ஐந்து வீதம், கல்முனையில் 20 வீதம், பாண்டிருப்பில் 20 வீதம், காரைதீவில் 20 வீதம் வாக்குகளும் பதிவாகியுள்ளன.

அம்பாறையில் சிங்களவர், முஸ்லம்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் அங்கு வாக்கு வீதம் 50 வீதமாக உள்ளது.

மட்டக்களப்பின் தமிழீழ நிர்வாகப் பகுதியில் 80 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளபோதும் எவருமே கொத்தணி வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்கவில்லை. இதனால், 89 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களும் வெறிச்சோடின.

சிறிலங்கா ஆக்கிரமிப்புப் பிரதேச தமிழர்களுக்காக அமைக்கப்பட்ட 265 வாக்களிப்பு நிலையங்களிலும் கூட ஐந்து வீதமான மக்களே வாக்களித்துள்ளனர்.

மன்னாரில் மடு, உயிலங்குளம் உள்ளிட்ட மூன்று பகுதிகளில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தும் ஒருவர் கூட வாக்களிக்கச் செல்லவில்லை.

வவுனியாவில் பத்து வீதமானோரே வாக்களித்தனர் என்று மாவட்ட அரச தேர்தல் அதிகாரி சண்முகம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ நிர்வாகப் பிரதேச மக்களுக்காக அமைக்கப்பட்டிருந்த ஓமந்தை கொத்தணி வாக்களிப்பு நிலையம் கேட்பாரற்று தேர்தல் அதிகாரிகளை மட்டுமே கொண்டிருந்தது.

ஓமந்தை சோதனைச்சாவடி வழமை போல் திறக்கப்பட்டிருந்தது. தமிழீழ நிர்வாகப் பிரதேசங்களிலிருந்து வரும் வாக்காளர்களை அழைத்துச் செல்ல பேருந்துகள் காத்திருந்தன. ஆனால், மக்கள் எவரும் வாக்களிக்கச் செல்லவில்லை.

மாறாக, வழமையான பயணிகள் போக்குவரத்து நடைபெற்றது. கண்காணிப்பாளர்களும் குவிந்திருந்து நிலைமையை அவதானித்து வந்தனர்.

திருமலையில் மொத்தம் 40 வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன. இதில் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதமானது ஐந்து முதல் பத்து வீதமாகும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையினராக வசிப்பதால் 60 வீதமான வாக்களிப்பு பதிவாகி இருக்கிறது.

# தபால்மூலம் வாக்களிப்பு முடிவுகள்

| மாவட்டம் | ரணில் | மகிந்த | அளிக்கப்பட்ட வாக்குகள | நிராகரிக்கப் பட்டவை | செல்லுபடியானவை |
|---|---|---|---|---|---|
| 01) கொழும்பு | 6143 | 10901 | 17484 | 340 | 17144 |
| 02) கம்பஹா | 8819 | 17131 | 26511 | 427 | 26084 |
| 03) களுத்துறை | | | | | |
| 04) கண்டி | | | | | |
| 05) மத்தளை | 3910 | 6547 | 10639 | 146 | 10493 |
| 06) நுவரெலிய | | | | | |
| 07) காலி | | | | | |
| 08) மத்தறை | 4128 | 10021 | 14340 | 133 | 14207 |
| 09) அம்பாந்தோட்டை | 2640 | 6918 | 9675 | 84 | 9591 |
| 10) யாழ்ப்பாணம் | 1405 | 327 | 2326 | 441 | 1885 |
| 11) வன்னி | 2234 | 1356 | 3717 | 79 | 3638 |
| 12) மட்டக்களப்பு | | | | | |
| 13) அம்பாறை | | | | | |
| 14) திருகோணமலை | 3913 | 4621 | 8821 | 190 | 8631 |
| 15) குருநாகல் | | | | | |
| 16) புத்தளம் | 2916 | 4363 | 7428 | 109 | 7319 |
| 17) அநுராதபுரம் | | | | | |
| 18) பொலநறுவை | 2839 | 5000 | 8000 | 128 | 7872 |
| 19) பதுளை | | | | | |
| 20) மொனராகலை | 3270 | 5790 | 9218 | 117 | 9101 |
| 21) இரத்தினபுரி | 3800 | 6697 | 10692 | 142 | 10550 |
| 22) கேகாலை | 6752 | 11517 | 18590 | 243 | 18347 |
| மொத்தம் | | | | | |

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.